# தேனகம்

2009

பிரதேச செயலக கலாசாரப் பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு.

# தேனகம்

பதினேழாவது ஆண்டு
முத்தமிழ் விழாச்சிறப்பு மலர்

மண்ணில் எம்கலைகளைக்
கண்ணென மதிப்போம்

வெளியீடு
பிரதேச செயலக கலாசாரப்பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு
2009

## பிரதேச செயலக கலாசாரப்பேரவை
## மண்முனை வடக்கு - மட்டக்களப்பு.



இடமிருந்து வலமாக

பின்வரிசை : 1.திருமதி.வி.வேலாயுதம், 2.திரு.இ.பாக்கியராஜா, 3.திரு.கதிர்பாரதிதாசன், 4.திரு.நா.சிவலிங்கேஸ்வரன், 5.திரு.எஸ்.தங்கவேல் 6.திரு.த.மலர்ச்செல்வன், 7.திரு.பா.ஜெயதாசன், 8.திரு.எஸ்.தில்லைநாதன், 9.திரு.எஸ்.சந்திரகுமார் 10.திரு.தெ.ரவீந்திரமூர்த்தி, 11.திரு.க.கணேசானந்தம், 12.திரு.வி.மைக்கல் கொலின், 13.திரு.தேவ அலோசியஸ்

முன்வரிசை : 1. செல்வி. ப. சறோஜா , 2. திருமதி. சு. வேதநாயகம், 3.திருமதி.ம.மகேந்திரன் , 4. திருமதி .தி .ஹரிதாஸ், 5.திருமதி. கலாமதி பத்மராஜா, 6.திரு.ந. வில்வரெட்ணம், 7. திருமதி.ம.சிவஞானசோதிகுரு

# தேனகம்

பதினேழாவது ஆண்டு
முத்தமிழ் விழாச்சிறப்பு மலர்

மலர்க் குழு

திரு. கா.க.்கணேசானந்தம்
திரு. கதிர்பாரதிதாசன்
திரு. எஸ். தங்கவேல்
திரு. எஸ். சந்திரகுமார்
திருமதி. சு. வேதநாயகம்
திரு. வீ. மைக்கல் கொலின்

அட்டை ஓவியம்
பா. புஸ்பகாந்தன்

இதழ் வடிவமைப்பு
வி. மைக்கல் கொலின்
ச. சந்திரகுமார்

வெளியீடு

பிரதேச செயலக கலாசாரப்பேரவை
மண்முனை வடக்கு – மட்டக்களப்பு
2009

பிரதேச செயலக கலாசாரப்பேரவை
மண்முனை வடக்கு - மட்டக்களப்பு
2009

தலைவர்
திருமதி. கலாமதி பத்மராஜா
பிரதேச செயலாளர்

உப தலைவர்
திரு. ந. வில்வரெட்ணம்
உதவிப் பிரதேச செயலாளர்

செயலாளர்
திரு. த. மலர்ச்செல்வன்
கலாசார உத்தியோகத்தர்

பேரவை உறுப்பினர்கள்

திரு. எஸ். தங்கவேல்
திரு. க. கணேசானந்தம்
திரு. கதிர்பாரதிதாசன்
திருமதி. வி. வேலாயுதம்
திருமதி. தி. ஹரிதாஸ்
திரு. நா. சிவலிங்கேஸ்வரன்
திரு. எஸ். சந்திரகுமார்
திருமதி. ம. சிவஞானசோதிகுரு
திருமதி. சு. வேதநாயகம்
திரு. தேவ அலோசியஸ்
திரு. தெ. ரவீந்திரமூர்த்தி
திரு. எஸ். தில்லைநாதன்
திரு. மா. ஜெயதாசன்
திருமதி. ம. மகேந்திரன்
திரு. இ. பாக்கியராஜா
திரு. வீ. மைக்கல் கொலின்

விடய எழுதுனர்
செல்வி. ப. சறோஜா



# தலைவரின் இதயத்திலிருந்து . .

மண்முனை வடக்கு கலாசார பேரவையின் பதினேழாவது ஆண்டு தேனக மலரின் வெளியீடு ஊடாக மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வேர்களை தேடுதலும், அடையாளங்களை நிலை நிறுத்ததுவதும் இன்றைய காலனித்துவ சிந்தனை மரபுகள் புரையோடிப்போன சூழலில் எம் எல்லோர் மத்தியிலும் மிக முக்கியமான பணியாக விரிந்து கிடக்கின்றது.

இத்தகைய கைங்கரியங்களை மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரபேரவை தமது சக்திக்கு உட்பட்ட வகையில் ஆண்டு தோறும் முத்தமிழ் விழா தேனக மலர் வெளியீட்டுக் கூடாக தனது செயற்பாட்டினை நடாத்துகின்றது. இது சகல மட்டங்களிலும் உணர்வுத்தளத்தோடு விரிவு படுத்தப்படவேண்டிய தொன்றாகும்.

அப்போது தான் உன்னதமான கலைகள், பாரம்பரியங்கள் பண்பாடுகள் பாதுகாக்கப்படும். இத்தகைய வரலாற்று மீளுருவாக்கத்தில் தேனகம் தனது 17வது மலருடன் இறக்கை கட்டிப் பறக்கிறது.

இத்தகைய பறத்தலுக்கு துணை நிற்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் சகல பிரதேச செயலக ஊழியர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. கலாமதி பத்மராஜா**
பிரதேச செயலாளரும்,
கலாசார பேரவை தலைவரும்,
பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையினால் வருடா வருடம் நடாத்தப்படும் முத்தமிழ் விழா இவ்வருடம் நடாத்தப் படுவதையிட்டும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் **"தேனகம்"** மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டும் உவகையடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியின் ஒரு குறிகாட்டியாக கலை, கலாசார மேம்பாடும் திகழ்கின்றது. அந்தவகையில் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை தனது பிரதேசத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது என்பது கண்கூடு.

எமது மாவட்டம் மீன்பாடும் தேனாடு என வர்ணிக்கப் படுவதற்கு ஏதுவாக **"தேனகம்"** பிரசவிக்கப்படுவது சாலப்பொருத்தமானது எனக் கூறுகின்றேன்.

இம்முயற்சியில் முன்னின்று உழைத்த கலாசார பேரவைத் தலைவர் உள்ளிட்ட மலர் வெளியீட்டுக் குழுவினர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

# எண்ணங்களை எழுதுகின்றோம். . . .

தேனகம் பதினேழாவது இதழை தங்கள் கரங்களில் தவழ விடுவதில் மகிழ்வடையும் இத்தருணத்தில் தேனகம் வெளியீடு தொடர்பாக சில மனப்பதிவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வது காலத்தின் தேவையாகின்றது.

மண்முனை வடக்கு பிரதேசத்தின் கலை கலாசார சமூக, பொருளாதார விடயங்களில் நன்கு ஆழ வேரூன்றி நிற்கும் தேனகம் காலத்திற்கு காலம் தனது படைப்புக்கள் மூலம் பல புதிய பதிவுகளை வரலாறாக்கியுள்ளது.

எமது ஒவ்வொருவர் வீட்டிற்குள்ளும் அத்துமீறி நுழைந்திருக்கும் செய்மதி தொலைக்காட்சி மூலமான நிகழ்ச்சிகளின் தாக்கம் எமது தலைமுறையையே வேறு திசைநோக்கி இட்டுச் செல்லும் இன்றைய காலகட்டத்தில், மீண்டும் எமது இளந்தலைமுறையை எமது கலை கலாசார பண்பாடுகள் தொடர்பாகவும் அவர்களை வாசிப்பும், படைப்புத் திறனும் கொண்ட ஒரு சமூகமாக மாற்றும் நோக்குடனும் எமது பிரதேச செயலாளரின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப கடந்த மூன்று வருட காலமாக தேனகம் பலபுதிய படையாளிகளை தேடி வலைவிரித்தது சுயத்துவமான அடையாளங்களுடன் இளம் படைப்பாளிகளை வெளிக்கொணர வேண்டும் என்ற அவரது திட்டம் கடந்த மூன்று வருட காலத்தில் பல புதிய படைப்பாளிகளை மண்முனை பிரதேசத்தில் இருந்து வெளிக்கொணர உதவியுள்ளது.

பிரதேச அடையாளம் என்பதும் பிரதேச ரீதியான இலக்கிய முயற்சிகள் என்பதும் ஏதோ ஒருவாய்ப்பாட்டுத் தனமாக ஒரு சில பெயர்களை மட்டும் முன்வைத்து மேற்கொள்ளப்படுவதில்லை.

அது சகலரையும் உள்வாங்கி, புதியதொரு சந்ததியை உருவாக்க வேண்டும். அந்த வகையில் புதிய படைப்புச் சந்ததியை உருவாக்கும் இந்த வேள்வியில் தேனகம் தன்னை முழு மனதுடன் ஈடுபடுத்தத் தயாராகிவிட்டது.

அது தனக்கான புதிய பாதையை, செப்பனிட்டு தனது பயணத்தை தொடங்கி விட்டது. புதிய சிந்தனையை நோக்கி புதிய தளங்களை விரிவுபடுத்தும் முயற்சியில் புதிய புதிய படைப்பாளிகள் உருவாகப் போகிறார்கள் என்பதன் வெளிப்பாடாக இத்தேனக மலரின் ஆக்கங்களே உங்களுக்குச் சான்றாகும்.

- மலர்க்குழு -

# வாழ்த்துச் செய்தி



**ம**ண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தும் முத்தமிழ் விழாவுக்கும் '**தேனகம்**' மலர் வெளியீட்டுக்கும் முதலில் எமது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொன்மை வாய்ந்த இப்பிரதேசத்தின் கலை கலாசாரங்கள் காக்கப்பட வேண்டும் வளர்க்கப்பட வேண்டும் என்பதில் இருகருத்துக்கு இடமில்லை. நீண்ட காலமாக இப்பிரதேசத்தில் நிலவிக்கொண்டிருக்கும் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் கலாசாரப்பேரவை ஆண்டு தோறும் போட்டிகள், விழாக்கள், வெளியீடுகள் என தன்னாலான முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளது. அத்துடன் இத்துறை சார்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரையும் பாராட்டி உற்சாகப்படுத்தியும் வருவது குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலங்களில் நாட்டில் நிலவிய சூழ்நிலைகளாலும் நவீன தொடர்புசாதனங்களின் செல்வாக்காலும் நமது பாரம்பரிய கலைகள் அருகி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் கலாசாரப் பேரவையின் முயற்சிகள் நம்பிக்கை தருகின்றன. முத்தமிழ் விழாவையொட்டி வெளியீடப்படும் "**தேனகம்**" மலர் நமது எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாங்கி காத்திரமாகவே மலர்கிறது.

வருங்காலத்திலும் நமது பிரதேசத்தின் தனித்துவத்தையும் இருப்பையும் கலை, கலாசாரங்களையும் நிலைநிறுத்தும் வகையில் இதுபோன்ற முயற்சிகள் மேலும் தொடரவேண்டும் என வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர் அனைவர் பாலும் நிறையவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**பேரருள் தந்தை கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
ஆயர், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்

# கலாசார கீதம்

மண்முனை வடக்கு எங்கள்
அன்னைபூமி அன்னைபூமி
எட்டுத்திசை ஒலிக்குமிதன் அழகுதான் - நெஞ்சில்
தொட்டெழுதச் சுரக்கும் கவிதை அமுதுதான்
(மண்முனை)

கடலது முகமுமாகும்
ஆறுகள் கூந்தலாகும்
நிலமது உடலுமான வடிவந்தான் - இது
மட்டுமா நகரினிதய மேடுதான்,
மட்டுறால் மீன்வளமும்
நண்டும் சுவையொட்டியும்
முட்டமடி சுமக்கும் கருவூலந்தான் - எங்கும்
முத்திரைகள் பதித்துவைத்தான் ப்ரம்மன்தான்
(மண்முனை)

தமிழர் பறங்கியர் முஸ்லிம்
இனங்கள் என மூன்றும்
சமத்துவங் காணவிளையும் பூமிதான் - நின்று
சமரச முயற்சிகாணு வாரெல்லாம்
அன்பெனும் கொடியதனில்
பல்மதப் பூமலர்ந்து
ஆன்மீக மணங்கமழும் சோலைதான் - இது
இதயங்கள் இணைந்திடும் பூ மாலைதான்
(மண்முனை)

மீனினம் இசைபாடும்
வாவியில் கலமோடும்
வானுயர் கோட்டைநம்மை வியக்கும் - மனம்
கல்லடிப் பாலம் கண்டு மயங்கும்,
பாரம்பரிய இசை
வைத்தியம் விளையாட்டு
சோதிடம் சிற்பமுயிர் தரிக்கும் - மண்ணில்
பழமையும் புதுமையும் உறவாடும்

(மண்முனை)

கல்வியும் கூத்திசையும்
தேனக(ம்) இலக்கியமும்
பல்வளப் பெருக்குமிதன் வேரம்மா - வித்தகன்
விபுலானந்தன் வாழ்ந்த ஊரம்மா
போர்கள் அழிவுகண்டும்
வீழ்ந்து விடாமலின்னும்
ஊர்வளங் காக்குமெங்கள் தோளம்மா - இங்கு
உழைப்பவர்தானே மண்ணின் வேரம்மா

கரங்குவிப்போம் சேர்த்து - இந்தப்
பூமிக்கெங்கள் வாழ்த்து - செந்
தமிழைப்போல இளமையொடு
வாழிய பல்லாண்டு

*பாடலாக்கம்*
அ.ச.பாய்வா

# மலரின் உள்ளே . . .

## கட்டுரைகள்


திருமதி.பிரியதர்சினி ஜெதீஸ்வரன் - 10

ஆறுமுகம் கணபதிப்பிள்ளை - 15

பா. சுதாஜிதா - 20

மூலிகை வேந்தன் - 26

வ. கணபதிப்பிள்ளை - 29

திருமதி. பிரேமளாதேவி ரவீந்திரன் - 32

திரு. சுகுணதாஸ் ரவிசங்கர் - 33

பாஸ்கரன் பிரதீபா - 40

ஞா. சிவசண்முகம் - 45

அபிராமி வரதராஜ் - 50






## சிறுகதை


அ. கலைநிலா - 17

சுப்ரமணியம் கீர்த்தனா - 36

தில்லை - 48

கவிதாஞ்சலி - 54


## கவிதை


மைதிலி - 25

க. நிசாந்தன் - 28

தி. சிவலிங்கம் - 44

கி. சுபத்திரா - 53

அமுதநிலா - 57

மட்டுநகர் பிரேளந்திரன் - 58




# மட்டக்களப்பு மக்களும் மரபுசார் சடங்கிசை வழிவங்களும்

**திருமதி.பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன்**
இசை விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்த அழகியல்
கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

இலங்கையின் கிழக்கே அமைந்துள்ள மட்டக்களப்புப் பிரதேசம் இசைக்கலைக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது. என்பதனை வரலாற்று ரீதியான ஆதாரங்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. “மீன்பாடும் தேனாடு” என்று அனைவரும் இசையுடன் இணைந்து பார்க்கும் நிலையில் இருப்பதுவும் இங்கு இசைக்கான முக்கிய இடத்தினை விளக்குவதாகவே உள்ளது. இப்பிரதேசத்தின் இயற்கை எழிலும் அது தருகின்ற அமைதிச் சூழலும் இங்கு வாழ்கின்ற மக்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் பண்பாட்டு அம்சங்களில் முக்கிய கவனம் செலுத்துபவர்களாகவும் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாக்கும் கடப்பாடுடையவர்களாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் தம் பிரதேசத்தின் கலை கலாசார விழுமியங்களை பேணுபவர்களாகவும் வளர்த்தெடுப்பவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர்.

இங்கு வாழ்ந்த சமூகம் பல இன மக்களின் கூட்டு வாழ்க்கையோடு இணைந்ததாக இருக்கின்றமையினால் பண்பாட்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க தனித்துவ அம்சங்களையும் கொண்டு விளங்குகின்றன. ஆதியிலே குழுக்களாக வாழ்ந்த மக்கள் இங்கு அவர்கள் செய்யும் தொழில்களை அடிப்படையாக வைத்து சாதிப்பகுப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். மேலும் பகுப்பினுள் **குடிகள்** என்ற பிரிவும் குறிப்பிடத்தக்க அம்சத்தினை வகித்து வந்திருக்கின்றது. ஒவ்வொரு சாதியினரும் ஏழுகுடிகளாக பிரிக்கப்பட்டிருந்தனர். இந்நிலைமை இங்கு வாழ்கின்ற தமிழர் மத்தியில் இன்று வரை தொடர்கின்றது.

இங்கு வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் இனரீதியாக வேறுபட்டிருப்பினும் இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்க்கைப் பின்னணியோடு பின்னிப்பிணைக்கப்பட்டிருப்பதால் தமிழ் மக்களின் பண்பாட்டின் சாயல் சிலவற்றை உள்வாங்கிச் செயற்படுகின்றதை காணக் கூடியதாக உள்ளது. கலை வெளிப்பாட்டினை பொறுத்த மட்டில் கணிசமான அளவு பங்களிப்பினை முஸ்லிம் சமூகத்தினர் ஆற்றியிருப்பது குறிப்பிடத் தக்கது.



மட்டக்களப்பு வாழ் பறங்கியின மக்களின் தனித்துவமான கலாசார பண்பாட்டம்சங்கள் மட்டக்களப்பின் கலாசாரக் கட்டமைப்பில் சிறிதளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இவர்கள் தமிழர்களாக வாழ்கின்ற போதும் மதவழிபாட்டில் தம்மை கிறிஸ்தவ மதத்துடன் இணைத்துக் கொண்டுள்ளனர். இனரீதியில் பறங்கியர் எனப்பட்டபோதும் தமிழ் மக்கள் பேசும்மொழி நடையினைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். ஆனால் இவர்களது கலாசார செயற்பாடுகள் மேலைத்தேய நாகரீகத்தைத் தழுவியதாகவே உள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் கடந்த எழுபதுகள் வரை ஆங்காங்கு வாழ்ந்திருக்கின்றார்கள் ஆனால் பண்டைய மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதும் தமிழ் மக்களே வாழ்ந்ததற்கான ஆதாரங்களை கல்வெட்டுகளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஆங்காங்கு இப்பிரதேசங்களில் வாழ்ந்துவந்த சிங்களக் குடிகள் கடந்த இருதசாப்தங்களாக நடைபெற்று வந்த இன முரண்பாடுகளாலும், போர்ச் சூழல்களாலும் இருப்பொழிந்து விட்டது.

பொதுவாக பல்லின மக்களின் கூட்டமைப்பான மட்டக்களப்பு சமூகத்தினரிடம் பல்வகையான இசை முறைகள் வழங்கப்படுவதனை அவதானிக்கலாம். பெருமளவு தமிழ்மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் இந்துமதமே அதிகளவில் பின்பற்றப்படுகின்றது. முஸ்லிம்மக்கள் இஸ்லாம் மதத்தினையும், பறங்கியர் கிறிஸ்தவ மதத்தினையும் ஏனைய ஒரு பகுதி தமிழரும் கிறிஸ்தவ மதத்தினையே பின்பற்றுகின்றனர்.

இப்பிரதேச கலை பண்பாட்டம்சங்களும் மதத்தாக்கத்திற்குட்பட்டே காணப்படுகின்றன. பொதுவாக இக்கலைகளை கோயில் சார்ந்தவை எனவும் கோயில் சாராதவை எனவும் இருபிரிவாக எடுத்து நோக்கப்படுகின்றன. ஒவ்வொரு மதத்தினருக்கும் இது பொருந்தும் கோயில் சாராத கலைகள் சாதாரண வாழ்க்கையில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இடம்பெறுகின்றன.

இசை அம்சங்களை பார்க்கும்போது தமிழர் வாழ்வில் பல்வேறுபட்ட சடங்குகளிலும் வழிபாட்டுநிகழ்வுகளிலும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. இசை கேட்காத நிகழ்வுகளே இல்லை என்னுமளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. மேலும் மட்டக்களப்பு மக்கள் வாழ்வியலில் மண்சார்ந்த இசை அம்சங்கள் மலிந்து காணப்படுகின்றன. இம்மக்களின் பாரம்பரிய இசை வடிவங்களாக இவை இன்றும் போற்றி வளர்க்கப்படுகின்றன.

மட்டக்களப்பு சமூகத்தை ஆராய வேண்டுமாயின் நாட்டாரியல் பண்புகளை ஆய்வு செய்யும்போது புரிந்து கொள்ளலாம். அந்தளவிற்கு நாட்டாரியல் பாரம்பரியமான மரபுகள் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவேதான் "நாட்டாரியல் ஆய்வாளருக்கான தங்கச்சுரங்கம் மட்டக்களப்பு" என பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களும், பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் சிறப்பாகக் கூறியிருக்கின்றனர். இக்காரணம் பற்றியே மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் தனது ஆய்விற்கான களமாக மட்டக்களப்பைத் தேர்ந்தெடுத்தார். நாட்டாரியர் இசைபற்றிப் பார்க்கும்போது இது தனித்துவமான கவனிப்பிற்குரியது. மட்டக்களப்பின் தனிச் சிறப்பைக் கூறுவது என்றும் கூறலாம். ஏனெனில் வேறுஎங்கும் இல்லாத பலசிறப்பு அம்சங்களை மட்டக்களப்பு நாட்டார் இசையில் காணலாம். ஈழத்தின் பழந்தமிழகமான இம்மட்டுநகர் உணர்ச்சிக் கவிதைகள் நிறைந்த பிரதேசமாக காணப்படுகிறது.

கவிதையில் பேசி கவிதையில் வளர்ந்து கவிதையில் வாழ்ந்த பரம்பரையில் வந்த தமிழ்மக்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். இம்மக்களிடையே வழக்கத்திலிருக்கும் கூத்து வகைகளும், குரவைப் பாடல்களும் கண்ணகி வழிபாட்டு வழக்குகளும் குளுத்திப் பாடல்களும் சிலப்பதிகாரத்துடன் தொடர்புடையனவாக காணப்படுகின்றன. சிலப்பதிகார நடையை ஒட்டி எழுந்த "கண்ணகி வழக்குரை" ஏட்டுப் பிரதியாகவே இங்கு கிடைக்கும் ஓர் கண்ணகி வரலாற்று நூலாகும்.

**கூத்தும் கூத்திசையும் :-**

நாட்டுக்கூத்து என வழங்கப்பட்டுவரும் கூத்துக்கள் பன்நெடுங்காலம் தொட்டு இப்பிரதேசத்தில் ஆடப்பட்டுவருகின்றன. கூத்து என்பது ஆடலும் பாடலும் சேர்ந்தது. சமயச் சடங்குகளிடையாகத் தோன்றிய இக்கூத்து தாள அமைதி உணர்ச்சி பாவங்களிற்கேற்ப இசை அமைப்பு என்பவற்றுடன் இணைந்து வெளிப் படுத்தப் படுவது நாகரீக வளர்ச்சியால் அதிகமாக பாதிக்கப்படாத மட்டக்களப்பில் பாரம்பரிய பிரதேசங்களில் பொதுமக்கள் கலையாகிய இக்கூத்து மரபு இன்றுவரை நிலைத்திருப்பதில் வியப்பேதுமில்லை.

மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றி கூறிய அனைவரும் தென்மோடி, வடமோடி கூத்து வகைகளைக் குறிப்பிட்டுச் சொல்வர். இக்கூத்துக்கள் ஒரு நாட்டுக்கென அமைந்தன அல்ல எனினும் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டுவரும் கூத்துக்கள் தனித்துவம் வாய்ந்தவை. இவை தவிர "விலாசம்" எனினும

பெருவழக்காக நடக்கும் கூத்துக்களான வடமோடிதென்மோடி என்ற இரண்டிற்கு மிடையே பெரிதும் வேறுபாடுகளை காணமுடிகிறது. இவை கதைப் போக்கு, தாளக்கட்டு, ஆடல், பாடும்முறை உடை ஒப்பனை என்பவற்றில் தனித்துவங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தென்மோடியில் வடமோடியினைப் பார்க்க அறிய நுணுக்கமும் கடினமுமான ஆட்டங்கள் உள்ளன. தென்மோடி வரவுக்குரிய ஆட்டங்களை முடித்துப் பாட்டும் படிக்க வேண்டிய கட்டத்திற்கு வரும்போது கூத்துக்காரர் களைப்படைந்து விடுவார்கள். வடமோடி ஆட்டம் இப்படி உடம்பை அதிகம் முறிக்காது வரவு ஆட்டத்தின் பின் தம் வரவை குறிக்கும்பாடலை தாமே பாடி ஆடுவர். வடமோடியார் தம்விருத்தங்களை அதிகம் நீட்டி இசைக்காது படிப்பதும் தென்மோடியார் அவற்றை நீண்ட ஓசை புலப்பட இழுத்துப் பாடுவதும் வழக்கம் வடமோடியில் கூத்தர் ஒரு பாட்டைப் படித்தால் பக்கப்பாட்டுக் காரனும் அதனைத் தொடர்ந்து படிப்பர். தென்மோடியிலோ பாட்டை நடிகர் படிக்க அதன் கடைசிப்பாகத்தை மட்டும் பின்பாட்டுக்காரர் தொடர்ந்து படித்துவிட்டு பாட்டு முழுவதற்குமுரிய தருவை படிப்பார்கள். பாட்டுக்கு அமைக்கப்படும் ஸ்வரகோர்வை போன்று கூத்து பாட்டுகளைப்பாடும் முறையை அமைத்துக் காட்டும் ஒருவித சொற்கேற்ப "தரு" எனப்படும்.

கூத்திற்கு மிகமுக்கியமான உயிர்நாடி தாளக்கட்டாகும். பக்கப்பாட்டுக் காரரும் அண்ணாவியாரும் சொல்லும் தாளக்கட்டினை சொன்னவாறே மத்தளமும் தன்மொழியில் சொல்கிறது. மத்தளத்தின் இந்த சிறப்பு நிலையை மக்கள் "மத்தளம் நன்கு பேசுகிறது'' என்று சொல்லி மகிழ்கின்றனர்.

**மகிடிக் கூத்தும் பறைமேளக் கூத்தும் :-**

தென்மோடி வடமோடிக் கூத்துக்களுள் மகிடிக்கூத்து எனும் ஒருவகை, சமயச் சடங்கிலிருந்து விடுபட்ட நாடகம் இங்கு காணப்படுகின்றது. இது சமய சடங்கிலிருந்து விடுபட்டாலும் மட்டக்களப்பில் இந்துமத சமய சடங்குகளில் பயன்படுத்தப படும் வணக்க முறைகள் கிரியை முறைகள், தாளவாத்தியங்கள் பயன்படுத்தப் படுவதுமான ஒரு நாடகமாகும். இவ்வகையில் இது பெருவளர்ச்சி பெற்ற வடமோடி, தென்மோடிக் கூத்துகளுக்கும் சமயச் சடங்குகளுக்கும் இடைப்பட்ட ஒரு நாடகவடிவமாகும். இதேபோல மைத்த சொக்கரி எனும் நாடகவடிவம் சிங்களவர் மத்தியில் உண்டு.

மகிடி என்பதற்கு மந்திர தந்திரங்களைக் காட்டும் விளையாட்டு என்று ஒரு அர்த்தமும் அதற்குண்டு இம்மகிடிக் கூத்தில் பெரும் இடத்தைப் பிடிப்பதும் அதுவே மட்டக்களப்பு மந்திர தந்திரங்களுக்கு பேர்போனது என்ற கருத்தும் உள்ளதால் அப்பண்பு மகிடிக்கூத்தில் பிரதிபலிக்கின்றது எனலாம்.

மூன்றுவகை மகிடிக்கூத்துக்கள் மட்டக்களப்பில் ஆடப்படுகின்றன. முதலாவதான மகிடிக் கூத்தில் மலையாள நாட்டிலிருந்து வரும் ஒண்டிப்புலியும் அவன் மனைவி காமாட்சியும் தமது கூட்டத்தாருடன் மட்டக்களப்புக்கு வந்து அங்கு வாழ்ந்த மந்திர வாதியுடன் போட்டியிட்டு அப்பிரதேசத்தில் குடியேறியமையை சித்தரிக்கின்றமை.

இரண்டாவது வகை மகிடிக்கூத்தில் கதை அம்சம் அதிகம்மில்லாமலும் இருக்கும். மந்திர வேலைகள் நடைபெறுகின்ற மகிடியினை வேடன், பேடுவிச்சி, வெளவால்காரன், வெள்ளைக்காரி ஆகியோர் பார்க்க வருவது இதில் நிகழ்ச்சியில் காட்டப்படுகின்றது.

மூன்றாவது வகை மகிடிக்கூத்து முதலிரண்டு மகிடிகளைவிட வேறுபட்டது. இதில் மந்திர தந்திர விளையாட்டுக்கள் இருப்பினும் கம்ப காமாட்சி, மீனாட்சி, வசிட்டர் ஆகியோர் சம்பந்தமான கதையும் குற்றாலக் குறவஞ்சியின் சாயல் பொருந்திய குறவன், குறத்தி, கதையும் நிகழ்ச்சியில் காட்டப்படும். இம்மகிடிக் கூத்துக்கள் திறந்த வெளியில் செவ்வக சமதள அரங்கில் பகல் வேளைகளில் நடைபெறுகின்றன முதலிரு வகை மகிடிக் கூத்துக்களும் எழுத்து வடிவமைத்த நாடக பிரதிகள் இல்லை

மூன்றாம் வகை மகிடிக் கூத்துக்கு எழுத்துரு உண்டு. இதன் மேடை அமைப்பு கூட முன்னைய இரண்டிலுமிருந்து வேறுபட்டது.

தென்மோடி வடமோடி கூத்துக்கள் செல்வாக்கு பெற்றிருந்த பிரதேசத்தில் வாழ்ந்த பறைமேளம் அடிக்கும் வகுப்பினருக்கு உயர் வகுப்பினால் இணக்கத்துடன் ஒரு புலவர் மகிடிக் கூத்தை நாடகமாக்கிக் கொடுத்திருக்கலாம். என நாம் ஊசிக்கல் கூடியதாகவுள்ள **தென்மோடி வடமோடிக் கூத்துக்கள் மட்டக்களப்பிற்கு வந்த போது அவரை சமூகத்தில் உயர் வகுப்பினர் தமதாக்கிக் கொள்ள செல்வாக இழந்த மகிடிக் கூத்தினை குறைந்த வகுப்பினர் தமதாக்கியிருக்கக்கூடும். எவ்வாறாயினும் மகிடிக்கூத்து இன்று மட்டக்களப்பின் உயர் வகுப்பினர் மத்தியில் செல்வாக்கு பெற்ற கூத்தொன்று** என்பது மனம் கொள்ளத் தக்கதோர் அம்சமாகும்.

பறைமேளம் அடிக்கும் வகுப்பினரால் மாத்திரமே பறைமேளக்கூத்து ஆடப்படுகின்றது. வேடம் ஆணிந்த இருவர் தமது பறைகளை அடித்து பல்வேறு தாளப்பறைக்கு ஏற்ப தமது உடலை அசைத்து ஆடுவதே இக்கூத்தாகும். கோயிலின் வெளி வீதியில் சமதள அரங்கில் மக்கள் சூழ்ந்திருக்க இக்கூத்து நடைபெறும். இக்கூத்து பறை சொர்ணாளி என்ற இசைக் கருவிகளில் மீட்பொலியுடன் ஆடப்படுகின்றது. இது தவில் நாதஸ்வரம் இணைந்து வாசிப்பது போன்றான மற்றுமோர் அம்சமாகும். ஒருவர் பல மணித்தியாலங்களாக பறைமேளத்தினை அடித்து வாசிப்பதோடு அதன் ஒலி அமைதிக்கேற்ப சொர்ணாளி இசையும் இணைய ஆட்டக்காரர் ஆடுவர். மேலும் பறைமேளத்திற்கு மிகையான இசையாக சொர்ணாளி விளங்குகிறது.

இவ்வாறு ஆடப்படுகின்ற பறைமேளக் கூத்து மட்டக்களப்பு பிரதேசத்தில் தனித்து வமான அம்சங்களுடன் ஆடப்படுகின்றன. சில தாள இசைகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமை யாகவும் இன்னும் சில தனித்துவமாகவும் தொழில்படுவதை வாத்தியம் இசைக்கப்படும் போது அவதானிக்க கூடியதாக இருக்கும். இதில் சிலதாள வகைகளை வரையறை செய்யமுடியாது இருப்பது தவிர்க்க முடியாததேயாகும். மங்களகரமான நிகழ்வில்

'டாங்கிடுச் சிட்டணம் கெயிட்டுக்கோட்டாம்
டாங்குச் சோட்டாம் .. . . டாங்குச் சோட்டாம்"

எனும் அரட்டு தாள வடிவங்களில் வாசிக்கப்படும் முறையும் இங்கு காணப்படுகிறது. இது அடியார்களை வரவழைக்கின்ற தாளமாக இடம்பெறுகின்றது.

ஆலயங்களில் இடம்பெறுகின்ற வாசிப்பின் வகையாக ஆலய அபிஷேக அமைப்பு சுற்றுலா தாளம், பெரிய பூஜைதாளம் என்பன இடம் பெறுகின்றன மரணக்கிரியைகளில் ஆரம்பதாளம் திரியப்படுத்தும் எடுத்துச் சொல்லும், சந்தி கூடு என்பன இடம்பெறுகின்றன. இலங்கையை விட மேலதிகமாக இடம்பெறுபவை ஆடம்பர நிகழ்வுகளில் வாசிக்கப்படுபவையே.

அரங்கிலே இராசவரவு, மந்திரிவரவு கோணங்கி வரவு என அவர்களுக்குரிய வரவு தாளங்களைப் பறையில் எழுப்பி அவ்வோசைக்குத் தக்க ஆடுவர். இடையில் வரபுக்கோணங்கி, தைதா, பல்லாக்கு, நாலடி தாளம், ஆறடி தாளம், எட்டடிபட்டுத்தாளம், தட்டுமாறும் தாளம் என்பன சிறந்த இசை வெளிப்பாடுகளுக்கு இடமளிக்கின்றன.

**வசந்தன் கூத்தும் கொம்பு முறியாடல்களும் :-**

வசந்தன் கூத்து என்னும் ஆட்டமும் கலையாடல் என்னும் ஆட்டமும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையதாக காணப்படுகிறது. பன்னிருவர் வட்டமாய் நின்று கோல் கொண்டு தாள அமைதி பிசகாது ஆடும் ஆட்டம் வசந்தன் ஆடும் இவ்வாடல் சமயக் கரணங்களுடன் சம்பந்தப்பட்டது. ஊரிலே மழை பெய்யாதபோது உரிகை வடசேரி தென்சேரி என இரண்டாகப் பிரித்து கொம்பு முறிப்பார்கள். இதில் வெற்றி கொண்டோர் இக்கூத்தினை ஆடி மகிழ்வர் கண்ணகி அம்மன் மதுரையை எரித்துச் சினம் தணியாது கோபம் கொண்டு வருகையில் அவளை மகிழ்விக்க சிறுவர்கள் ஆடிய கூத்து இது என ஓர் ஐதீகம் உண்டு. கண்ணகி அம்மன் குளுர்த்தி நாட்களில் இது ஆடப்படுகின்றது.

வசந்தன் கூத்திலே கதை என்பது பெரிதாக இல்லை. ஆனாலும் ஆடலும் பாடலும் மிகையாக உண்டு விடிய விடிய நடைபெறும் இக்கூத்தில் மத்தளமும், சல்லரிப்புமே பக்க வாத்தியங்களாகும்.

தாளம், இராகம் என்பன தென்மோடிக் கூத்து வகையினைச் சேர்ந்தவை ஆடல்களின் செயலினால் பாடல்கள் பெயர் பெறுகின்றன. வேளாண்மை வெட்டு வசந்தன், பிள்ளையார் வசந்தன், முயிற்று வசந்தன், அம்மன் பள்ளு வசந்தன் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

**சடங்கும் இசையும் :-**

மிகப் பழங்காலத்திலிருந்தேதமிழ் மக்கள் மத்தியில் நிலவி வருவது பத்தினி தெய்வ, தெய்வவழிபாடு ஆகும். மட்டக்களப்பு மக்களிடையே பன்நெடுங் காலமாக வழக்கிலிருக்கும் கண்ணகியம்மன் வழிபாடானது வருடந்தோறும் மிகுந்த பக்திப் பெருக்கோடு வைகாசி மாத வளர்மதி நாட்களில் நடத்தப்படும் சடங்காக கொண்டாடப்படுகிறது. ஆண்டு முழுவதும் பூட்டப்பெற்றுக் கிடக்கும் கண்ணகி கோயி லெல்லாம் வைகாசி மாதம் பிறந்துவிட்டதும் பூசையினையண்டி குறிப்பிட்ட சில நாட்களின் முன்னர் திறக்கப்பட்டு விடும். இவ்விழா "கதவுதிறத்தல்" என்ற பெயராலே அழைக்கப் பெற்று அதனை தொடர்ந்து வரும் சடங்குகளில் இடம்பெறும். பூசைகளில் தெய்வம் ஏறியோர் உருவேறப்பெற்று ஆடுதல், உடுக்கு வாத்தியங்களோடு அம்மன் காவியம் உடுக்கு சிந்து என்பன பாடுதல், அம்மானைகாய், சிலம்பு என்பவற்றை சிறுவர் குலுக்குதல், குரவை , ஆலத்தி அனைத்து நிகழ்ச்சிகளும் சடங்கு எனும் சொல்லுள் அடங்கப்பெறும். இதனை நிகழ்த்துபவர் பூசாரியார் என அழைக்கப்படுவார்.

இவர் உரு ஏறி ஆடுபவர் காதருகே இனிய ஒலி எழுப்ப உடுக்கினை பல நடைகளில் ஒலிக்கச் செய்வார். பாடல்களையும் அதன் இசைவாகப் பாடுவார். இக்காலங்களில் அம்மன் காவியம், கும்மிப் பாடல்கள், கரகப்பாடல்கள் என்பவற்றை காதினிக்கப் பருகலாம்.

**கரகப் பாடல்கள் :-**

மட்டக்களப்பு மக்களிடையே பிரபல்யமாக விளங்கும் இசையும் நடனமும் சேர்ந்து விளங்கும் ஓர் கிராமிய கலை வடிவம் கரகமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் மிக்க பயத்தோடும், பக்தியோடும் தாய்கடவுளான மாரியம்மனை வணங்கி விழாக் காலங்களிலும் பஞ்சம் வந்தபோதும், கொள்ளை நோய் வந்தபோதும் மக்கள் தங்கள் இதயங்களுக்கு நெருங்கி தன் இறைவனை வேண்டி இங்கு கரக நடனத்தை ஆடி வழிபாடு நடத்து வார்கள். கரகம் என்பது நடுத்தர அளவிலான அலங்காரம் செய்யப்பட்ட ஒரு அழகிய மகுடமாகும். அதனை அதற்கேற்ப அணி மணிகளை அலங்கரிப் பார்கள். குடத்தினுள் அரிசி நிரப்பப் பட்டிருக்கும் மக்கள் அதனுள் கலந்திருக்கும் இக்குடத்தை தலையில் வைத்து கரகமாடுவர். இதனைப்பெரும் பாலும் பெண்களே இங்கு ஆடுவர். வயல்வெட்டு காலங்களில் **புதிர் அரிசியை குடத்தினுள் போட்டு கரகம் எடுத்து நெல்வயல் பொழிய வேண்டி பெண்கள் இங்கு கரகமாடுவது முண்டு.**

கரகத்திற்கு பாடுவதற்கென பெண்கள் இருப்பர். மேளமும் குழலும் ஒலிக்க இவர்கள் சல்லரியை தட்டி பாடுவார்கள். பாடலுக்கேற்ப இலாவகத்துடன் தலையி லுள்ள குடம் நழுவாது திறமையாக சுற்றிச் சுழன்று ஆடுவர். இங்கு கைகளுக்கும் கால்களுக்கும் தான்வேலை அதிகம். செம்பிக்கும் தலைக்கும் இடையில் வேப்பிலைக் கொத்துக்களை வைப்பர். கைகள் இரண்டிலும் வேப்பிலைக் கொத்துக்களை பிடித்துக்கொண்டு ஆடுவார்கள். பெண்கள் கூடிநின்று கைகொட்டி பாடி ஆடி மகிழ்வது கும்மியாகும். சுவையான இப்பாடல்கள் நல்ல தாளக்கட்டுடன் அமைந்திருக்கும். குனிந்து வளைந்து உட்கார்ந்த நிலையில் கைகொட்டி கும்மியடித்து இளம்பெண்கள் ஆடிமகிழ்வது கண்கொள்ளாக்காட்சியாகும்.

பத்தினி தெய்வமன்றி பேச்சியம்மன், திரௌபதை அம்மன், கடல்நாச்சி அம்மன், காளியம்மன் போன்ற பெண்தெய்வ வழிபாட்டு பாடல்கள் மட்டுமன்றி வீரபத்திரர், வைரவர், குமாரதெய்வம், வதனமார் போன்ற ஆண் தெய்வங்களும் சடங்குகள் செய்வது இங்கு மரபாக காணப்படுகின்றது. இதன்போது பாடப்படும் பாடல்களும் பிரத்தியேகமானவை இவைமட்டுமன்றி காவடிப்பாடல்கள் அலகு ஏற்றும்போது பாடப்படும் பாடல்கள் என மட்டக்களப்பு மண்ணில் தெய்வ வழிபாட்டு பாடல்கள் நிறைந்து காணப்படுகின்றன. மரபுக்கலைகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ள கலைவளம் மிக்க மட்டக்களப்பு மண் சடங்கிலும் மரபு இசையிலும் மாறுபடாது பேணிப்பாதுகாக்கும் போக்கினை கொண்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

# சிலம்பு விளையாட்டு - ஓர் அறிமுகம்

ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

சிலம்பு விளையாட்டு என்றால் கம்பு விளையாட்டு என்றும் பொருள்படும். விளையாடுபவரின் உயரத்திற்கு ஏற்ப சிலம்புகள் தெரிவு செய்யப்படும் இதனால் இதற்கு நெற்றிக் கம்பு என்றும் பெயருண்டு. சிலம்பத்தில் இரு நன்மைகளைக் கொண்ட கம்புகள் உண்டு. ஒன்று தடிப்பாகவும் மற்றது மெல்லியதாகவும் இருக்கும். தடிப்பாக இருக்கும் சிலம்பத்தை சல்லா சிலம்பம் என்றும் மெல்லியதாக இருக்கும் சிலம்பத்தை வீச்சி சிலம்பம் என்றும் சொல்வதுண்டு. தடிப்பாக இருக்கும் சிலம்பத்தினால் விளையாடும் விளையாட்டு ஆபத்தற்றதாக இருக்கும். இந்த முறை விளையாட்டு பொதுவாக கேளிக்கை கோயில் திருவிழா, ஊர்வலங்கள் செல்லும்போது விளையாடுவதை அவதானிக்கலாம். தீப்பந்தங்களும் இந்த முறையினைக் கையாண்டு விளையாடுவதுண்டு. ஆனால் மெல்லியதாக இருக்கும் வீச்சி சிலம்பு விளையாட்டு முறை ஆபத்துக்களையும் மரணத்தையும் ஏற்படுத்தக் கூடியது. இந்தமுறை விளையாட்டுத்தான் தற்பாது காப்பு, போர்முறைகளுக்கு பண்டைக்காலத்தில் பாவிக்கப்பட்டது காரணம் மனிதனின் வர்மங்கள் நிறைந்த உடல் பகுதியைத் தாக்கும் முறையாகும்.

**வீச்சி சிலம்பம் தற்பாதுகாப்பிற்கான பயிற்சி :-**

**01. வீச்சு பயிற்சி - முறை வீச்சி**

i) நிலை வீச்சி 4 மானம்
ii) பக்க அறுப்பு வீச்சி (வலம்)
iii) எத்து வீச்சி (இடம்)
iv) வெட்டு வீச்சி (இடம்)
v) நிலை வெட்டு வீச்சி (வலம்)

நிலை

**02. முறை வீச்சி 4 மானம்**

i) ஏறுமுறை வீச்சி
ii) இறங்கு முறை வீச்சி
iii) திரும்பு முறை வீச்சி
iv) குறுமான வீச்சி
v) ஒரு அடிமான வீச்சி
vi) இரண்டு திசை வீச்சி 1 அடிமானம்
vii) நான்கு திசை வீச்சி 1 அடிமானம்

நிலை

**03. முறை வீச்சி**

i) பெட்டி முறை வீச்சி 4 மானம்
ii) பெட்டி முறையுடன் படை வீச்சி அறுப்பு 4 மானம்

நிலை

**04. முறை வீச்சி**

i) சங்கிலி தொடர் வீச்சி ஏறுமுறை இறங்குமுறை
ii) சுற்று வட்ட வீச்சி

நிலை


**05. சிலம்பம் கட்டி விளையாடும் முறை**

i) குரு வணக்கம்
ii) நில வணக்கம்
iii) சபை அலங்காரம்
iv) எதிரி வணக்கம்

விளையாட்டு ஆரம்பமாவதற்கு முன் கால்மான மாற்றுமுறையும், சிலம்பு அசைவும் எதிரியை விளையாட்டிற்கு அழைக்கும் முறையும், ஏமாற்றும் முறையும் இவ்விளையாட்டில் முக்கிய இடத்தை வகிக்கும்.



சிலம்பு விளையாட்டு ஆரம்பம்



சிலம்ப பூட்டு

**06. சிலம்பம் கட்டி விளையாடும் முறை**

01) ஆரம்ப நிலை பயிற்சி :-

இதில் முறை வீச்சின் படி நான்கு அடிமுறையும் 4 கட்டுமான முறையும் அடங்கும்.

02) நடுநிலை பயிற்சி முறை :-

இதில் 8 அடிமானங்களும் 8 கட்டு முறையும் அடங்கும்.

03) முற்றுப் பயிற்சி :-

இதில் 12 அடிமானங்களும் 12 கட்டு முறைகளும் அடங்கும். இவையனைத்தும் சிலம்பு விளையாட்டு விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டதாக இருக்கும்.

**07. பக்கம் இறங்குதல்**

i) இடம்
ii) வலம்

பாய்ச்சலுடன் திசை மாறுதல்

**08. புலிப்பாய்ச்சல் :**

பாய்ச்சலுடன் இறங்கு முறைக்கு அறுப்பு, வெட்டு, குத்து, பின்நிலை சிலம்பத்துடன் தட்டிப்பாய்ச்சல் அறுப்பும் வெட்டும் குத்தும் அடிமான மாற்றலும். நிலை

**09. தரப்படுத்தல் :**

சிலம்பு விளையாட்டு சுமார் 3,6,9,12 மாதம் நன்றாக தெளிவான வீச்சும் அழகான கால்மான மாற்றங்களும் முறையான கட்டும் முறைகளையும் அவதானித்து அதற்கு ஏற்ப தரப்படுத்தல் செய்வதுண்டு. இதில் முக்கியமாக சிலம்பத்துடன் கால்களும் கால்களுடன் சிலம்பமும் செல்வது முக்கிய விடயமாக கவனத்தில் எடுக்கப்படும். இவைகள் அனைத்தும் ஒழுங்கான அழகான முறையில் காணப்படும் பட்சத்தில் அதற்கேற்ப தரப்படுத்தல் செய்து சன்மானம் வழங்கப்படும். கடைசியாக சிலம்புப்பயிற்சி பெற்றவர்களுக்கு மத்தியில் மட்டுப்படுத்தப்படாதமுறையில் ஓர் போட்டி நடாத்தப்படும். இந்த முறையில் ஒவ்வொருவரும் தாங்கள் பழகிய விளையாட்டை எவ்வளவு தூரம் வேகமாகவும், தந்திரமாகவும் விளையாடுகிறார்களோ அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். இந்தப் போட்டியில் வர்மங்கள் அடங்கிய பகுதிகளை தாக்கும் முறை ஏற்றுக்கொள்ளப்படும்.

**10. சல்லாச் சிலம்பம் :**

இச்சிலம்பு விளையாட்டானது வீச்சி சிலம்பத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட முறையாகும். சிலம்பத்தை நடுப்பகுதியில் பிடித்து சுழட்டிச் செய்யும் முறை கையாளப்படும். இதில் தீப்பந்த விளையாட்டு, பூட்டுக்கள் போடும் முறைகளும் இதிலே உள்ளடங்கும். இந்த வீச்சி முறையினை ''கல்யாண வீச்சி முறை'' என்றும் சொல்வதுண்டு.

சிலம்பு விளையாட்டு முடிவுற்றதும் ஆரம்பத்தில் எந்த விதமாக சிலம்பங்கள் ஏந்தி ஆரம்பித்தோமோ அந்த முறைப்படி சிலம்பத்தை வீசி முடிப்பது வழக்கம்.



சிலம்பம் கட்டும் முறை

(இக்கட்டுரையில் உள்ள படங்களில் காணப்படுபவர் கட்டுரையாளர் ஆறுமுகம் கணபதிப்பிள்ளையும், அவரிடம் பயிற்சி பெறும் அவரது மகனும்)

# தீர்வுகளும் திருத்தப்படலாம் . . .

சிறுகதை

அ. கலைநிலா

பஸ்ஸிலிருந்து இறங்கி பாடசாலைக்குள் நுழையும் போதே குழந்தைகள் எதிரே ஓடி வந்தனர். ஐந்தாம் ஆண்டு.... புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருப்பவர்கள்....

குட்மோர்னிங் ரீச்சர்.... ரீச்சர் இண்டைக்கு அகதிகளுக்கு கொடுக்க சாமான் கொண்டு வரச் சொல்லி கோயில்ல எலவுன்ஸ் பண்ணினவங்க நான் கொண்டு வந்தனான்..


நானும் தான் ரீச்சர்....
நானும் கொண்டு வந்தனான்..
நானும்..
எல்லோரும் அவளைச் சூழ்ந்து கோரஸ் பாட ஒன்றிரண்டு பேர் விலகி எட்டி
நிற்பதையும் சித்ரா ரீச்சர் கவனிக்கத் தவறவில்லை..
ரீச்சர் குமார் ஒண்டும் கொண்டு வரல்ல....
ஓம் ரீச்சர் வீணாவும் சுசியும் கொண்டு வரல்ல..
சரி.. சரி.. இப்ப எல்லோரும் வகுப்புக்குப் போங்கோ...
பிறகு பார்க்கலாம்..

பாடசாலை ஆரம்பித்து பாடம் நடக்கும் போதும்.... தாங்கள் கொண்டு வந்தவற்றைத் தொட்டுப் பார்ப்பதும் மற்றவர்களின் பொருட்களை எட்டிப் பார்ப்பதும் பேசுவதுமாக குழந்தைகள் பரபரத்துக் கொண்டே இருக்கின்றன.

இதுகள யாரிட்ட ரீச்சர் கொடுக்கிறது...?
பொருட்களைக் காட்டியபடி ஒரு குழந்தை
அண்ணன்மார் வருவாங்க அப்ப கொடுக்கலாம்...
ரீச்சர் அகதிகளுக்கு கட்டாயம் உதவி அனுப்ப வேணுமாம்...
அம்மா சொன்னா சரியான கஸ்ரமாம்...
ஓம் ரீச்சர்... அங்க சரியான கஸ்ரமாம்.. சண்டையாம்..
ஒண்டுமே இல்லையாம் ரீச்சர்... மாமா சொன்னார்...
நாங்கள் கட்டாயம் இங்க இருந்து அனுப்ப வேணுமாம்..

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்காக அத்தியாவசிய பொருட்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் ஆங்காங்கே நடந்து கொண்டிருக் கின்றன. அதன்படி பாடசாலையிலும் சில தொண்டு அமைப்புகள் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கியிருந்தன.
அதன் வெளிப்பாடு தான் இது!

வீணா - கெட்டிக்கார மாணவி அவளின் கண்கள் கலங்கி ஒதுங்கித் தவித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தவள் மெதுவாக வீணா கொப்பியைக் கொண்டு வாங்கோ எனத் தன்னருகே அழைத்தவள் அவளை விசாரிக்கையில்



"அம்மா சொன்னவ ரீச்சர் அவாட்ட ஒன்றும் இல்லையாம்" விம்மலும் விக்கலுமாக அவள் அழுகையில் வெடிக்கிறாள்.

"வீணா... என்ன இது? எல்லோரும் கொடுக்க வேணும் என்று இல்லை வசதியான ஆக்கள் குடுப்பினம் அவங்களிட்ட கூட இருக்கிறதை குடுப்பினம் இப்ப எங்களிட்ட இல்லாட்டி பிறகு ஒரு தடவை குடுக்கலாம் தானே !"

''இல்ல ரீச்சர் கோயில்ல ஸ்பீக்கரில்ல சொன்னவங்க பாவம் தானே அகதியள்.. ஆனா அம்மாட்ட ஒன்றும் இல்லை எண்டு சொன்னவ...''

வீணாவின் தாய் மூதூரிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவள் கணவனை பறிகொடுத்து விட்டுத் தன் குழந்தைகளுடன் இந்த மண்ணைச் சரணடைந்தவள். முகாம்களில் வாழ்க்கையை ஓட்ட முடியாமல் தூரத்து சொந்தங்களின் உதவியை நாடி இந்த ஊருக்குள் ஓரிடத்தில் குடி வந்தவள். திருப்பி அனுப்பும் போது சொந்த மண்ணில் எந்தவித ஆதாரமும் இல்லாமல் இங்கேயே தங்கி விட்டவள். தனது சிறு குழந்தைகளுக்காக வாழ்க்கையைக் கொண்டு செல்லும் அப்பெண்ணின் நிலை சித்ராவிற்கு குழந்தையின் வகுப்பாசிரியை என்ற ரீதியில் நன்றாகத் தெரியும்.

அப்படிப்பட்ட நிலையில் வீணாவைப் போய் சாமான் கொண்டு வா என்றால் ஒரு மாதிரி குழந்தையை சமாதானமாக்கிப் பாடத்தை முடித்து இன்ரேவலுக்குச் சாப்பாட்டுக்கு அனுப்புகையில் குழச்தைகளின் குதூகலப் பேச்சு கலகலப்புக்கிடையில் அவ்விடம் இரண்டுபடுகிறது.

எழுந்து Office நோக்கிப் போகையில் சித்திராவின் மனசு கனத்துப் போகிறது. இடப் பெயர்வு, முகாம் வாழ்வு அழிவுகள் இழப்புகள் நிவாரணம் இதிலிருந்து எப்போது மீளப் போகிறோம்? அகதி என்ற வார்த்தை எவ்வளவு இலகுவாக குழந்தைகளாலும் உச்சரிக்கப் படுகிறது அதன் தார்பரியம் உணராமலேயே!

என்ன ரீச்சர் கடும் யோசனை? கன்ரினுக்குப் போகலையா? என்றபடி கடந்த ஆசிரியைக்கு புன்னகையுடன் தலையாட்டி விட்டு மெதுவாக நடக்கிறாள்.

சத்தாரில் புது செலக்ஷன் கொஞ்சம் வந்திருக்கு... நல்ல கலர்ஸ்..
இங்க நீங்க இங்கிறீமன்ட் போர்ம் குடுத்தாச்சா?
ரீச்சர் போடருக்கு மட்டும் பண்ணின அந்த சாறி நல்லாயிருந்தது.

இஞ்சயப்பா.. கோலங்களில் கடைசியில் என்ன போனது? அந்த நேரம் கரண்ட் கட் நான் சமைக்கலயப்பா.. அது தான் ஸோட் லீவுக்கு எழுதிப் போட்டு வாறன்

சத்தமாகக் குரல்கள் வந்து காதில் படுகின்றன.. இவ்வளவு தான் மனிதர்கள். படித்தவர்களும் சரி... படிக்காதவர்களும் சரி இந்த வட்டத்திற்குள் தான் வளைய வருவார்கள். நானும் ஏதோ ஓர் வகையில் இதனுள் இவள் மனதில் எண்ணமிட்ட வாறே தொடர்ந்து ஸ்ராப் ரூமைக் கடந்து நடக்கிறாள்.


மெதுவா படியில் ஏறுவது கவனம்... மெதுவாக காலை வையுங்கள்... அந்த இடத்தின் பரபரப்பு இவளை நிஜத்துள் கொண்டு வருகிறது.

பயிலுனர் ஆசிரியை ஒருவரை தாங்கியபடி வந்த ஆசிரியை சொல்கிறார்.. இந்தப் பிள்ளை கிளாஸில் படிப்பித்துக் கொண்டிருக்கேக்க மயங்கி விழுந்திட்டு, முல்லைத்தீவுப் பிள்ளை அதுக்கும் என்ன என்ன யோசனைகளோ?... சொல்லியபடி அவர் நகர்கிறார்.

இரண்டொருவர் வந்து எட்டிப் பார்த்த விட்டுப் போகிறார்கள்... அந்த நிமிடத்தில் கொலிஜ் பிள்ளை மயங்கி விழுந்திட்டாம் செய்தி கசிகிறது.

முல்லைத்தீவுப் பிரச்சினையும் கஸ்ரங்களும் அவரவர் தகுதிக்கு ஏற்றபடி நுனிநாக்கில் வந்து போகின்றன..

ஒரு சில நிமிடங்களில் மீண்டும்.



ரி.வி.தொடர்களும் வீட்டு கதைகளுமாக அந்த இடம் நிஜத்துக்குத் திரும்புகிறது. சித்திராவும் எழுந்து தன் வகுப்பு நோக்கி நடக்கிறாள்... மனசு கனத்துப் போகிறது.

அங்கிருந்து இங்கு படிப்பு, வேலை என்று தனியாளாக வந்து விட்டு எதுவித தொடர்பும் இல்லாமல்... அவர்களைப்பற்றிய தகவலும் இல்லாமல் உறவுகளை நினைத்து எந்த நேரம் எந்தச் செய்தி வருமோ என்று பயந்த . . . சிந்தனைகளுடன் தனது வகுப்பிற்குள் நுழைந்தவளை ரீச்சர் இண்டைக்கு ஸ்கொலசிப் பேப்பர் செய்யிறதே என்ற குரல்கள் நிஜத்துக்கு கொண்டு வருகின்றன.

ரீச்சர் Office க்குப் போய் வந்ததால் பேப்பர் கொண்டு வருவா- என்ற நினைப்பில் அவளைச் சுற்றியவர்கள் திடீரென

''ரீச்சர்... அந்தப் புதுச் ரீச்சர் மயங்கிற்றாவாம்.. இதால கூட்டிப் போனவங்கள்...'' ஓம் ரீச்சர்... நாங்களும் பார்த்தனாங்கள் சத்தம் அதிகரிக்கிறது.

அவர்களை அமைதியாக்கிய சித்ரா வீணாவைப் பார்க்கிறாள் இன்னமும் முகம் தெளியாமல் ஏதோ யோசனையில் அவள்...

இடப் பெயர்வின்- இழப்புக்களின் வலி அந்தக் குழந்தைக்கு தெரியும். நிஜமாகவே அந்தப் பயங்கரத்தை அனுபவித்து கடந்து வந்திருப்பவள் கற்பனையில் கண்டு ஒப்புக்கு பரிதாபப்பட்டு - விளம்பரத்துக்காக உதவி செய்யும் மனிதர்கள் நடுவில் - அந்தக் குழந்தையின் ஆதங்கமும் தவிப்பும் நிஜமானவை என்று இவளுக்குப் புரிந்தது.

அந்தக் குழந்தைகளை ஒரு கணம் தீர்க்கமாகப் பார்த்த சித்திரா
இஞ்ச பாருங்கள் பிள்ளையள்.... இப்ப நீங்க சாமான் கொண்டு வந்திருக்கிறீங்க தானே...? எதுக்கு..?

''அகதிகளுக்கு கொடுக்க, வன்னிக்கு அனுப்ப, உதவி செய்ய பல குரல்கள் எழுந்தன.

''ஓம் நாங்க உதவி செய்யத் தான் வேணும்... ஆனா அதுக்காக... பெரிய பொருட்கள் கொடுக்க வேணும் கூட காசு கொடுக்க வேணும் எண்டில்லை.. இங்க இருந்து அங்க அனுப்ப நினைக்கிறதை விட எங்களுக்குப் பக்கத்தில் இருக்கிறவங்களின் கஸ்ரத்தில் உதவலாம் அவங்களுக்கு எங்களால் இயன்றதைச் செய்யலாம். ஆதரவா, அன்பா இரண்டு வார்த்தை கதைக்கலாம்.

முல்லைத்தீவு மட்டுமல்ல, தங்கட சொந்த இடங்களில் இருந்து இஞ்ச வந்து இருக்கிறது நிறைய பேர் இருக்கினம். அவை... இப்ப கஸ்ரப்படுவாங்க ஏன் அவங்கட அம்மா.. சொந்தக்காரர் எல்லோரும் அங்க தானே...

ஓம் ரீச்சர்... பாவம்.... அவங்க சாப்பிடவும் மாட்டாங்க என்ன? அந்த முல்லைத்தீவு ரீச்சரும் சாப்பிடாம இருந்திருப்பா.... அது தான் மயங்கியிருப்பா...
குழந்தைகள் அங்கலாய்க்கின்றன...

இவர்கள் புரிந்து கொள்வார்கள்... இவர்களிடம் ஏற்படும் மாறுதல் தான் இனி வரும் சமூகத்தையாவது கொஞ்சம் மாற்றும்- மனதிற்குள் உறுதியுடன் நினைத்த சித்ரா

பார்த்தீங்களா எங்களுக்குப் பக்கத்தில் இருக்கிறவை எங்களுக்குத் தெரிஞ்சவையே எவ்வளவு கஸ்ரப்படுறாங்க எண்டு... இவங்கள விட்டுட்டு-எங்களுக்குத் தெரியாத வைக்குத் தான் கட்டாயம் உதவ வேணும் எண்டில்லை இவங்க... இப்ப இங்க தனிய இருக்கிறாங்க ... நாங்க தான் உதவ வேணும்.. காசு பொருள் தான் கொடுக்க வேணும் எண்டில்ல... வேறு உதவிகளும் செய்யலாம்.''

''ஓம் ரீச்சர் அவங்களுக்கு உதவியா ஏதாவது செய்து கொடுக்கலாம்.''
தனிய இருக்கேக்க நாங்க போய்க் கதைக்கலாம்...
விளையாடலாம்.. என்ன ரீச்சர்?

ஓம் ரீச்சர்... இப்ப இங்க அவங்களுக்கு சொந்தக்காரர் இல்ல தானே... நாங்க தான் இப்ப சொந்தக்காரர்
நாங்க தான் உதவ வேணும்.
ஆளாளுக்கு தீர்மானம் எடுத்துக் கொள்கிறார்கள்.
சித்ரா. புன்னகைத்துக் கொள்கிறாள்.



# நவீன சிறுகதை உலகின் பிதாமகன் புதுமைப்பித்தன்

**பா. சுதாஜிதா**
மட்/ வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை

**வி**ஞ்ஞானமும், தொழில்நுட்பமும் நிறைந்த இன்றைய உலகிலே பல தலைசிறந்த இலக்கிய கர்த்தாக்கள் தோன்றி மறைந்திருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள், இன்னும் தோன்றுவார்கள். அந்தவகையில் என்மனம் கவர்ந்த இலக்கியகர்த்தாவாக புதுமைப்பித்தன் விளங்குகின்றார். இவர் தமிழ் உலகிற்கு சிறுகதை, கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு, நாடகம், நாவல், வாழ்க்கை வரலாறு என பல படைப்புருவங்களை படைத்துள்ளார். ஆயினும் அவரது படைப்புக்களில் மிக முக்கியமானவை சிறுகதைகளாகும்.



தமிழ் நாட்டிலே திருப்பாதிரிப்புலியூர் என்னும் இடத்தில் வ. சொக்கலிங்கம் பிள்ளை என்பவருக்கும் பர்வதத் தம்மாள் என்பவருக்கும் 1906ம் ஆண்டு சித்திரை 25ம் நாள் பிறந்தார். இவரது உடன் பிறப்பாக தங்கை ருக்மணி அம்மாள் காணப்படுகிறார். உடன் பிறந்த தம்பியாக முத்துசாமி விளங்குகின்றார். அவரது தொடக்கக் கல்வியை செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய ஊர்களில் பயின்றார். 1931ல் பி.ஏ. பட்டதாரி ஆனார். 1931 ஜூலையில் தனது துணைவியான கமலாவை கைப்பிடித்தார்.

1930களில் சிறுகதை உலகில் நுழைந்த இவர் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கதைகளை எழுதி தமிழ் சிறுகதை வரலாற்றில் தனக்கென தனித்துவமான இடத்தைப் பிடித்துக்கொண்டார். இவருடைய கதைகள் பெரும்பாலும் சமூக அவலங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமை சிறப்பிற்குரியது.

அவரது கதைகளில் சமூக அவலங்களை பிறருக்கு வெளிக் காட்டியமையும் எனது மனதைக் கவர்ந்ததற்கு முக்கிய காரணமாகும். இவர் தனது கதைகளில் கையாண்டுள்ள மொழிநடை சிறப்பிற்குரியது. சமூக நிலைமைகளை அப்படியே வெளிக்காட்டுவதாகவும், சில கற்பனைக் கதைகளையும் எழுதியுள்ளார். இவரது கற்பனைக் கதைகள் முற்றிலும் வேறுபட்டதாகவும், வேடிக்கையானதாகவும், அமைந்துள்ளன. இது அவரது கற்பனைத் திறனை நன்கு வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இவர் தனது சமூகப் பாங்கான கதைகளில் ஒன்றான "ஒரு நாள் கழிந்தது'' எனும் கதையில் அன்றாட வாழ்வில் நாம் காணக்கூடிய வறுமை நிலையை தக்க முறையில் வெளிப் படுத்தியுள்ளார். அவர் அக்கதையில் அவர்களது வறுமை நிலையை எடுத்துக் கூறுவதற்கு கையாண்ட வசனங்கள் எம் மனக்கண் முன்னே காட்சிதரக் கூடிய ஒன்றாகக் காணப்படுகிறது. உதாரணமாக அவர் அக்கதையில் குறிப்பிடும் ஒரு சந்தர்ப்பத்தில் பாய் விரிப்புச் சம்பவமானது "கையிலிருக்கும் கோரைப் பாயை விரிப்பது என்றாலே ஒரு ஜால வித்தை நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்சன் வழங்கப்படாததால் அது நடுமத்தியில் இரண்டாக கிழிந்து ஒரு கோடியில் மட்டிலும் கிழிந்து ஒட்டிக் கொண்டிருந்தது . . ." என்னும் வரிகள் மூலம் ஒரு வறுமை நிலை எப்படி வர்ணிக்க வேண்டுமோ அந்த அளவிற்கு சித்தரித்துக் காட்டியுள்ளார்.

மேலும் இவர் இக்கதையில் அக்குடும்பத்தின் வறுமை நிலையை வெளிக்காட்ட படைத்துள்ள பாத்திரப் படைப்புக்களில் "அலமு'' என்னும் ஒரு குழந்தைப் பாத்திரத்தைப் படைத்து அதன் மூலம் அக்குடும்பத்தின் வறிய நிலையை வெளிக்காட்ட முயற்சித்துள்ளது மிக மிக



சிறப்பாக உள்ளது. இவர் கதைகளை வாசிக்கும் போது வாசகர்கள் அக்கதை நேரிலே நிகழ்வது போன்ற உணர்வு எற்படும்படி தனது கதைகளை சிறந்த முறையில் சித்தரித்துக்காட்டி வாசகர்களை கவரும்படி செய்வது சிறப்பிற்குரியது.

இவர் தனது கதைகளை எழுதும் போது கையாளும் முறை இன்னுமொரு அம்சம் தனது கதைகளில் பெரும்பாலும் வேடிக்கைகளை கையாண்டுள்ளமையே ஆகும். அதாவது தனது கதைகளில் படைக்கும் பாத்திரங்கள் மூலம் அவர்களது உரையாடலின் ஊடாக கேலி கிண்டலாக பேசுவதாக எடுத்துக்காட்டி அதன் மூலம் சமூக அவலங்களை தகுந்த முறையில் வெளிக்கொணர்ந்துள்ளமை சிறப்பிற்குரியதும், வாசகர்களின் மனதை கவர்வதாகவும் அமைந்துள்ளன. இதுவும் என் மனதைக் கொள்ளை கொண்ட அம்சங்களில் ஒன்றாகும்.

உதாரணமாக "ஒரு நாள் கழிந்தது" எனும் சிறுகதையில் முக்கிய கதாபாத்திரமான முருகதாஸர் கடைக்காரனுடன் உரையாடுகையில் கேலி, கிண்டலாக பேசுகிறார் "சாமி இந்த மாதிரி இருந்தாக்கட்டுமா? போன மாசத்திலேயே தீர்க்கலயே நானும் சொல்லிப் பார்த்தாச்சு . . ." எனக் கடைக்காரர் கூற அதற்கு முருகதாஸர் "நானும் பிழைக்க வந்தவன்தான் எல்லோரும் சாகவா வருகிறார்கள்? மின்னே பின்னே தான் இருக்கும் . . ." எனக்கூறுவதன் மூலம் ஒரு கதையில் கேலி, கிண்டல்கள் மூலம் இவ்வாறு ஒருவறிய நிலையை தகுந்த முறையில் வெளிக்காட்டியமை வேறு எந்த இலக்கியப்படைப்பாளிகளுக்கும் வராது.

புதுமைப்பித்தனின் கதைகளில் இன்னுமோர் சிறப்பம்சம் யாதெனில் தனது கதைகள் அனைத்தையும் நடைமுறைப் பேச்சு வழக்கில் அமைந்ததாக எழுதியுள்ளமையே ஆகும். தனது கதைகள் மூலம் சமூகத்தின் நிலையை வெளிக்காட்ட முயற்சிக்கும் எழுத்தாளர் அதை சமூகத்தில் பேசும் பேச்சு வழக்கைக் கொண்டே கதைகளை எழுதியுள்ளார். உதாரணமாக "சங்குத் தேவனின் தர்மம்" எனும் கதையில் "என்னமோ ஏனெக்கு ஏத்தப்பியே எல்லாஞ் சேந்து ரெண்டு நூறு ஆகும்." நகை எம்பிட்டு" போன்றனவும் மேலும் "நிகும்பலை" எனும் கதையில் "என்னவே, அதுக்குள்ளேயா குளித்து சாப்பிட்டு விட்டீர்" போன்ற பேச்சு மொழிகளை அமைத்து பாத்திரங்களினூடாக தனது கதையின் நோக்கத்தை வெளிக்காட்டி உள்ளமை சிறப்பிற்குரியது.

இவரது கதைகளில் மற்றுமோர் முக்கிய அம்சமாக குறிப்பிடக்கூடியது வேற்று மொழிகளையும் கையாண்டுள்ளமையாகும். தற்கால கட்டத்தில் நடைமுறையில் தமிழோடு சேர்ந்து அதிகமாக ஆங்கிலமும் கலந்துள்ளது. இதனால் நம்பேச்சு வழக்கில் கூட தமிழ்பாதி ஆங்கிலம் பாதி எனக் கலந்தே பேசுகின்றோம். இதற்கு ஏற்றாற்போலவே புதுமைப்பித்தனும் தனது கதைகளில் தமிழ் மொழியோடு சேர்ந்து வேற்று மொழிகளையும் சிறந்த முறையில் பிரயோகித்து வாசகர்களை உணர்வு பூர்வமாக தன் கதைகளில் உள்ளீர்த்துள்ளார் அதற்கு எடுத்துக்காட்டாக அவரது பல கதைகளைக் கூறலாம். உதாரணமாக "நிகும்பலை" எனும் கதையில், " என்ன மிஸ்டர் மணி ஒன் ஆகிவிட்டது போலிருக்கே . " "இந்த ஹாட்ஸன்லே வந்தது ரொம்ப டயர்டாக இருக்கு" போன்ற வேற்று மொழியாகிய ஆங்கில மொழியைப் பயன்படுத்தியது சிறப்பிற்குரியது. இவ்வாறு இவர் வேற்றுமொழிகளை பிரயோகிக்கும் போது எந்தந்த இடத்தில் எவ்வாறு பிரயோகிப்பது

என்பது தெரிந்து அவர் தகுந்த முறைகளை பிரயோகித் திருப்பது சிறப்பிற்குரிய விடயமாகும்.

இவர் தனது கதைகளை எழுதி அக்கதைகளுக்குப் பொருந்தக்கூடிய வகையில் தலைப்புகளை இட்டிருப்பதும் மற்றுமோர் சிறப்பம்சமாகும். ஒரு கதையை எழுதிவிட்டு அதற்கு தலைப்பு இடும் போதே பிரச்சினை ஏற்படுகின்றது. சில வேளைகளில் நாம் வாசிக்கும் தலைப்பு ஒன்றாகவும், கதை வேறொன்றாகவும் இருக்கக் காண்கிறோம். ஆனால், இவரது கதைகள் அவ்வாறு இல்லாமல் தலைப்புக்கேற்பவகையில் கதை காணப்படுவதும், கதை ஓட்டத்தில் தன் தலைப்பை வலியுறுத்தும் வகையில் உரையாடல்கள் அமைந்திருப்பதும் சிறப்புக்குரியது. எடுத்துக்காட்டாக "ஒரு நாள் கழிந்தது" எனும் கதையில் அந்த வறிய குடும்பம் ஒரு நாளை நகர்த்துவதற்கு படும்பாடுகளும் இந்த ஒருநாள் கழிந்தால் போதும் அடுத்த நாளை நாளைப் பார்ப்போம் போன்ற உரையாடல்களும் கதைக்கும், தலைப்பிற்கும் உள்ள பொருத்தப்பாட்டை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

இவரது கற்பனைக் கதைகளானவை மிகவும் வித்தியாசமாகவும், சுவாரஸ்யமான தாகவும், வேடிக்கையானதாகவும் அமைந்திருக்கின்றது. ஆனாலும் அக்கற்பனைக் கதைகள் வாயிலாகவும் சமூகத்தில் நிலவும் அவலங்களையே வெளிக்காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக "கட்டில் பேசுகிறது" எனும் கதையில் ஒரு வைத்தியசாலையில் உள்ள கட்டில் பேசுவதாகவும், அதனை வேடிக்கையாகவும் நகைச்சுவையாகவும் எடுத்துக்காட்டி அதன் வாயிலாக ஒவ்வொரு மனிதனும்படும் அவலத்தையும் வெளிக்காட்டியுள்ளார். இதேபோன்று "ஆற்றங்கரைப் பிள்ளையார்" எனும் கதையில் கூட பிள்ளையார் பேசுவதாகவும், அதனை வேடிக்கையாக அமைத்து சமூகக் கருத்துக்களை எடுத்துக் கூறியமையும் இன்னுமோர் சிறப்பாகும்.

தமிழ் வாழ்வின் வெவ்வேறு கோலங்களைக் காட்டி அதன் முழுப்பரப்பும் தன் அனுபவத்திற்குள் வந்து விட்டதான் பிடிப்பை வாசகனுக்கு அளித்திருப்பது புதுமைப்பித்தனின் மிகப்பெரியசாதனையாகும். வாழ்வில் பெறும் எல்லா அனுபவங்களையும், படைப்புக்குரியதாய் மாற்றி விடலாம். என்ற நம்பிக்கை சார்ந்த செயற்பாடு மிகக் கடினமானது. இந்தச் சவாலை துணிந்து ஏற்றவர் புதுமைப்பித்தன் ஆவார். தன் ஆக்கங்களின் தோல்வியை எண்ணி அஞ்சும் படைப்பாளியால் இந்த சவாலை ஏற்கமுடியாது. புதுமைப்பித்தனுக்கு படைப்புக்களில் கூடிவரும் நிறைவைவிட புதிய சோதனைகள் தனக்கும், மொழிக்கும் தரும் ஆற்றல்கள்தான் முக்கிய மானவையோ எனச் சந்தேகம் கொள்ளும் அளவிற்கு அவரது படைப்புக்கள் முழுமையை நோக்கமாக கொள்ளாத சரிவுகளுக்கு ஆளாகியிருக்கின்றன.

இவரது படைப்புக்களில் நாம் இன்னுமொரு அம்சமாகக் காணக்கூடியது என்னவெனில் வாழ்க்கை அனுபவங்களை தனது படைப்புக்களில் ஆழமாக வெளியிட்டமையே ஆகும். சில வகையான அனுபவங்கள் படைப்பாளியின் மனதில் ஆழமாகப் புதைந்து படைப்புக்களில் மீண்டும் மீண்டும் சுழன்று வருகின்றன. இந்த ஆழமான அக்கறைகளை நாம் இனங்கண்டு கொள்கின்றோம். இவை தந்த எழுச்சியில் இருந்துதான் இவரது கதைகள் சில சிகரம் தொட்டுள்ளன. அவர் கொண்டிருந்த பாதிப்புக்களில் முக்கியமாக வறுமையின் கொடிய கோலங்கள், மனதை மீறும் உடல், ஹிந்துமதம் மனித சுதந்திரத்தை நெரிக்கும் விதம், ஒடுக்கப்பட்டு மக்கள்படும் துயரம் போன்ற பாதிப்புக்களைக் குறிப்பிடலாம்.

வெவ்வேறு காலங்களுக்குரிய செய்திகளை ஒரே வாக்கியத்தில் இணைப்பதும், பழைமையான செய்தியை ஒட்டியவொரு புத்தம்புதிய செய்திகை இணைப்பதும் அவருக்கு கைவந்த கலை, அவரது எழுத்தில் வெகுதீவிரமான சிந்தனைகளும், தெறிப்புக்களும் அநாவசியமான வெளிப்படுவது நம்மைக்

கவருகிறது. நடையில் நிகழ்ந்த ஜாலங்களுக்கு நான் உதாரணம் தரத் தொடங்கினால் அது சுலபத்தில் முடியும் காரியமாக இருக்காது. அறுபது வருடங்களுக்கு முன்னால் அவர் உருவாக்கிய தமிழ் இன்றும் அலுப்பின்றி படிக்கக் கூடியதாகவே இருக்கின்றது. நேற்றைய தமிழ் என்ற அனுதாபத்தை நாம் அதற்கு வழங்க வேண்டியதில்லை.

புதுமைப்பித்தனின் மற்றுமோர் கதை சிறப்பம்சம் யாதெனில் கதைகளில் பல்வேறு பட்ட கதாபாத்திரங்களை படைத்திருத்தல் ஆகும். உதாரணமாக கணவர்கள், மனைவிகள் மாணவர்கள், குழந்தைகள் உழைத்து ஓடாகிப் போனவர்கள் வேசிகர்கள், பிச்சைக்காரர்கள் எழுத்தாளர்கள், கிராமவாசிகள், சாமியார்கள் வெவ்வேறு ஜாதி மதத்தைச் சேர்ந்தவர்கள். புரட்சிவாதிகள், கட்டில், வேதாளம், நரி, நாய், முயல், பதுமைகள் எனப் பல கதாபாத்திரங்களை உலவ விட்டிருக்கிறார். இப்படைப்புக்களில் இருந்து அவரது சுய அனுபவம் சார்ந்த இரண்டு உலகங்கள் தெள்ளத்தெளிவாக தெரிகிறது. ஒன்று நெல்லை மண், மற்றொன்று சென்னை நகரம் இவை சார்ந்த அனுபவங்கள் கதைகளில் பிரதிபலிக்கும் போது அவை பொதுவாக அழுத்தம் கொடுக்கின்றன. இவற்றை அவர் தகுந்த முறையில் அமைத்துள்ளமை வாசகர்களை கவரத் தூண்டும்.

பெண்களின் மன உணர்வை மதிக்கும் ஒரு படைப்பாளியாகவும் அவர் விளங்குகிறார். அவரது கதைகளின் ஊடாக பெண்களை இக்கட்டில் மாட்டிக் கொண்டிருக்கும் ஜீவன்களாக பார்க்க வைக்கிறது. இந்தப் பார்வை அவரது வழக்கமாக கறாரான பரிசீலனைகளில் இருந்து அவர்களுக்கு விலக்களிக்கின்றது. அவர்களின் நிலையை எண்ணி தார்மீக கோபத்தில் சமநிலையை இழந்து விடுவதையும் நாம் பார்க்கலாம். பெண்களின் தத்தளிப்பு உணர்வுகளையும் முழுமையாக ஏற்று அவற்றுக்கு அழுத்தம் தரும் பெண்களின் மன உணர்வை வெளிப்படுத்தும் இவரது கதைகளாக கலியாணி, துன்பக்கேணி, பொன்னக்கரம், செல்லம்மா, வாடாமல்லிகை, பாட்டியின் தீபாவளி, ஆண்மை, காலனும் கிழவியும், புதிய கூண்டு போன்ற பல கதைகளைக் குறிப்பிடலாம்.

தமிழ் வாழ்வை புரிந்துகொள்வதற்கு புதுமைப்பித்தன் ஆற்றியுள்ள பங்கு மிக முக்கியமானது. அவரது மொழி மரபின் ஜீவனையும், மண்ணின் சாரத்தையும் இணைத்தது. படைப்புக்கு வலு சேர்க்க உதவிய இவரது ஆற்றல்கள் பல்வேறு தளங்களை சார்ந்தவை, இலக்கியம், புராணம், சமயம், ஜாதி, சமூகம், குடும்பம் போன்ற எந்தத் தளத்திலும் செயற்படும்போதும் அந்த தளத்திற்குரிய வாசனைகளை ஏற்றி மிகுந்த நம்பகத் தன்மையை அவரால் வாசகனின் மனத்தில் உருவாக்கிவிட முடிகிறது. அவரது படைப்புக்கள் தமிழ்க் கலையின் சாதனை என்று பெருமைப்படும் வகையில் இருக்கின்றன. தமிழ் வாழ்வை புரிந்து கொள்வதற்கு அவர் ஆற்றியுள்ள பங்களிப்பை அவரது கதைகளில் காணமுடியும்.

இன்றைய காலத்தில் பல்வேறு எழுத்தாளர்கள் தோன்றி இருந்தாலும் புதுமைப்பித்தனே என்மனம் கவர்ந்த எழுத்தாளராகக் காணப்படுகின்றார். இதற்கு இன்னுமொரு காரணத்தையும் கூறலாம். அதுதான் வாசகர்களை கவரும் அவரது மொழிநடை "அவரது மொழி சுயமானது அவரால் கண்டு பிடிக்கப்பட்டது." என்று நாம் கூறுமளவிற்கு அவரது மொழிநடையில் அவருடைய ஆளுமை வெளிப்படும் கோலங்கள் நூதனமானவையாகவும், எண்ணற்றவகை பேதங்கள் கொண்டன வையாகவும் வெளிப்படுகின்றன. எழுத்து மொழியின் பாதிப்பை பெற்றிருந்த அளவிற்கு அவர் பேச்சு மொழியின் பாதிப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தால். இதன் பொருள் மொழி உருவானதில் அவரது கண் ஆற்றிய பங்கை அவரது செவியும் ஆற்றியிருக்கிறது என்பதுதான்.

இவரது கதைகள் மூலம் நம் மனதில் உருவாகி வரும் உலகின் வீச்சு மிகப்பெரிய அனுபவ உலகத்தை அவர் வாழ்நாளில் தேடிக் கண்டடைந்திருப்பதற்கான தோற்றத்தை நமக்குத் தருகிறது. வாழ்வின் சகல நுட்பங்களையும், ரகசியங்களையும் அறிந்தவர் என்ற பிரமையையும் உருவாக்குகிறது. ஆனால் அது உண்மை அன்று அவர் புதிய மனிதர்களையும், பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களையும், புதிய

இடங்களையும் தன் வாழ்க்கைப் பின்னணி முற்றிலும் மாறுபட்ட அனுபவங்களையும் பெறுவதற்கான வாய்ப்புக்களும் அவர் அதிகம் பெற்றிருக்கவில்லை. அதற்கான காரணங்களை முதலில் குறிப்பிடுவது அவர் வாழ்ந்திருந்த காலங்கள் மிகக்குறை வானாலும் அவரது கதைகளோ அவ்வாறில்லை. பலபுதிய அனுபவங்களை பெற்றவர் என்ற எண்ணம் வாசகர்களுக்கு வரும் தனது கதைகளை எழுதியுள்ளமை சிறப்பிற்குரியது.

புதுமைபித்தனுக்கே உரிய இன்னுமோர் சிறப்பம்சம் தனது கதைகளின் பொருளை மேலும் ஆழப்படுத்தும் நோக்கில் தகுந்த முறையில் உரிய இடங்களில் நீண்ட கூற்று வாக்கியங்களையும் சிறு கூற்று வாக்கியங்களையும், பொருத்தமான இடங்களையும் பொருந்தக்கூடிய உவமை யணிகளையும் பிரயோகித்திருப்பது சிறப்பிற்குரியது. எடுத்துக் காட்டாக "ஒரு நாள் கழிந்தது" என்ற சிறுகதையில் "பாய் விரிப்பு சம்பவத்தைக் " கூற வந்த ஆசிரியர் அக்கதையின் கருவாக இருந்த வறுமை நிலையை வெளிக்காட்ட தகுந்த முறையில் நீண்ட கூற்று வாக்கியங்களைப் பிரயோகிக்கத் தகுந்தமுறையில் வெளிக்காட்டியமை சிறப்பிற்குரியது.

இவர் எழுதிய கதைகளில் விபச்சாரக் கொடுமைகள் பற்றிய கதைகளையும் எழுதியுள்ளார். அது தவறு என்பதையும் விபச்சாரத்தில் ஏற்படும் இழுக்கு பற்றியும் தகுந்த முறையில் எடுத்து சமூகத்திற்கு காட்டி அதை நகைச்சுவை மூலம் மக்களிடம் விழிப்புணர்வைத் தூண்டியுள்ளார். விபச்சாரக் கொடுமைகள் பற்றிய அவருடைய கதைகளாக, "கவந்தனும் காமனும்", 'பொன்னகரம்'' ஆகிய கதைகளைக் குறிப்பிடலாம். தனக்கு அதிர்ச்சியும் ஏமாற்றமும் தந்த அனுபவங்கைளப் படைப்புக்குள் கொண்டு போகும் போது மொழியில் ஓலமிடுபவர் அல்ல புதுமைப்பித்தன். தான் நன்கு அறிந்த விசயங்களை வாசகர் தம் சுரணை கெட்டதனால் தான் இன்னும் புரிந்து கொள்ளாதிருக்கும். நிலை தன் பொறுமையை சோதிப்பது போன்ற பாவனையை அவர் பல கதைகளிலும் மேற்கொண்டிருக்கின்றார்.

புதுமைப்பித்தன் சிறுகதைகள் மட்டுமன்றி கட்டுரைகளும் எழுதியுள்ளார். அந்த வகையில் அவர் பாரதி பற்றிப் பல ஆக்க பூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார். பாரதி ஏற்றுக்கொண்ட வகையிலான புரட்சிகரமான சிந்தனை களையும் பாரதியின் அதீத கற்பனைவாதம் சார்ந்த வெளிப்பாட்டு முறையையும் முற்றாகவும், வெளிப்படையாகவும், நேர்மையாகவும் நிராகரித்தவராவார். பாரதி காலத்தில் சோதனையால் அவர் எவ்வளவு தாழ்வுற்றிருப்பார். எத்தனை துன்பங்களை அனுபவித்து உள்ளார் என்பதை தனது பாரதி பற்றிய கட்டுரையில் சிறந்த முறையில் வெளிக்காட்டியுள்ளமை சிறப்பிற்குரியதாகும். தமிழ் வாழ்வை புரிந்து கொள்வதற்குப் புதுமைப்பித்தன் ஆற்றியுள்ள பங்கு மிக முக்கியமானது அவருடைய மொழி மரபின் ஜீவனையும், மண்ணின் சாரத்தையும் இணைத்தது. படைப்புக்கு வலுசேர்க்க உதவியது. அவரது ஆற்றல்கள் பல்வேறு தளங்களைச் சார்ந்தவை. இலக்கியம், புராணம், சமயம் ஜாதி, சமூகம், குடும்பம் போன்ற எந்தத் தளத்தில் செயற்படும் போதும் அந்தத் தளத்திற்குரிய வாசனைகளை ஏற்றி மிகுந்த நம்பகத் தன்மையை அவரால் வாசகரின் மனதில் உருவாக்கி விட முடிகிறது. அவரது படைப்புக்கள் தமிழ்க் கலையின் சாதனை என்று பெருமைப்படும் வகையில் இருக்கின்றன.

இவ்வாறு இவர் தனது ஆற்றலை கதைகள், கட்டுரைகள் கவிதைகள் என்பவற்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஆனாலும் அவரது படைப்புக்களில் சிறுகதைகளே அவருக்கு பெருமை சேர்த்தனவாகும். இவ்வாறு இவரது கதைகளை வாசிக்கும் போது அவர் கையாண்ட மொழிநடை, கதைகளின் நோக்கம், கேலி கிண்டல்களை தனது கதைகளில் கையாளுதல் வேற்று மொழிகளை தகுந்த முறையில் கையாளுதல் போன்ற அவரது நடைமுறையே எனது மனதைக்கவரக்கூடிய விதத்தில் அமைந்துள்ளது. இவ்வாறு தமிழ் நாட்டில் உதித்து தமிழுக்கு அரும்பெரும் தொண்டாற்றிய புதுமைப்பித்தன் 1948ம் ஆண்டு ஆனி மாதம் 30ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

"தமிழ் கூறும் நல்லுலகு உள்ளவரை
புதுமைப்பித்தனின்
புகழ் மணம் வீசிக் கொண்டே இருக்கும்."


**(இலக்கிய விழா போட்டியின் பிரதேச ரீதியிலான பாடசாலை சிரேஷ்ட பிரிவு கட்டுரை போட்டியில் 2ம் இடம் பெற்ற கட்டுரை)**

# மீள்வு பயணம்

தாபங்களின் காட்டில்
எரிந்தது காதல் தீ
மழைநாள்
மண்ணின் மணம் போல்
இதயத் துவாரங்கள்
எங்கும்
காதல் மணம்
விலைபேசா ஒரு முத்தம் தா
என் காதலா
இந்த உலகையே உனக்குத் தருகிறேன்

பகல்கள் தோறும்
இரவுகள்
இரவுகள் தோறும் என் கண்ணோரங்களை
என் கடலில்
உன் துடுப்பைப் போடு
போகட்டும் காதல் படகு

தாபங்கள் தணியட்டும்
மீளவே முடியாத
பெரு வெளிக் காட்டின் திக்குகள் இடையே
எப்போ மீள்வேன்
நான் . . ..



இது
பயணங்களை முடித்தபடகா
இல்லை
இதுவரை யாரும் பயணிக்காத படகா .?

யார் சென்றது இந்தப் படகில்
பத்திரமாய்
இடம் சேர்த்த திருப்தியில்
மௌனத் தவம் கொள்கிறதோ . . .
இல்லை
யாருக்காகவோவான காத்திருத்தலோ ...?

இந்தப் படகும்
நானும்
ஒன்று

யாரும் கவனிக்காத படகும்
நீ
கவனிக்காத
நானும்.



மைதிலி

# சித்த மருத்துவத்தில் மனோ சக்தியும் மந்திர சக்தியும்

மூலிகை வேந்தன் Dr. ஸ்ரீராமநாதன் கலைவாணன்

மனம் என்பது என்ன? அது மனித உடலினுள்ளே எங்கே இருக்கின்றுது? அது இருப்பது இதயத்திலா மூளையிலா மனம் மனிதனுக்குள்ளே எந்த வடிவில் இருக்கின்றது? எந்த அளவில் இருக்கின்றது? எப்படி இயங்குகின்றது? இவற்றைப் பற்றிய எந்த விதமான பதிலையும் இன்றும் எத்தகைய விஞ்ஞானிகளினாலும் இன்று வரை உறுதியாக கூறிக்கொள்ள முடியாத நிலையில், மனித உடலினுள்ளே மனம் என ஒன்று இருப்பதைப் பற்றி ஒப்புக் கொள்கின்றனர். தோன்றிய பொருள்கள் யாவுமே நிலையானவையல்ல இந்த உண்மையை இதைப்பற்றிய அறிவை நமக்கு வழங்கியது மெய்ஞ்ஞானமாகும் ஆனால் மனித மனமோ தோன்றியவை யாவும் நிலையானவை அழியாதவை என்று நினைக்கும்படி செய்யும் வல்லமை உடையது அது மனிதனுக்கு அவனது உடலின் மீதும் உயிரின் மீதும் உலகத்தின் மீதும் வாழ்க்கையின் மீதும், நம்பிக்கையை ஏற்படுத்தி அவனுக்கு ஊக்கமூட்டி உற்சாகமூட்டி உயர்வளிக்கின்றது அதனால் தான் மனிதன் தன் அறிவையே மயக்கக்கூடிய மனதின் சக்தியையே மகத்தான ஒரு சக்தியாகக் கருதலானான்.

சுவாமி விவேகானந்தர் ஒரு முறை ஹைதராபாத் நகருக்குச் சென்றிருந்தார் அங்கு ஓர் அந்தனர் அற்புதம் செய்து காட்டுவதாகக் கேள்விப்பட்டு அவரிடம் சென்றார் அற்புதம் செய்தவர் ஓர் வியாபாரி யாவரினாலும் மதிக்கப்பட்டவர் அவருக்குத் தெரிந்த வேடிக்கையைச் செய்து காட்டும்படி விவேகானந்தர் கேட்டார் அற்புதம் செய்பவர் உங்களில் ஒவ்வொருவருக்கும் தேவையான பொருட்களை ஒவ்வொரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுங்கள் என்றார் விவேகானந்தரும் மற்றவரும் வாழைப்பழம், திராட்சை போன்றவற்றை எழுதி அவரிடம் கொடுத்தார்கள். சிறிது நேரத்தில் திராட்சைப் பழங்களையும் வாழைப்பழங்களையும் அவர் வாரி வாரிக் கொடுக்க ஆரம்பித்தார். இதனால் அவர்கள் வியப்பினால் திகைப்படைந்தனர். இதனை விவேகானந்தர் வியப்படைந்தவர் களைப்பார்த்து வியப்படையாதீர்கள் இது தான் இராஜயோகக்களை இதனையாரும் ஒழுங்குமுறையுடன் பயின்று பயிற்சி செய்தால் எல்லோரும் இச்சக்தியைப் பெறலாம் என்று விளக்கினார்.

அந்த அந்தனரின் சக்தியை என்னவென்று கருதுவது அத்தகைய சக்திக்குப் பெயர்தான் மந்திர சக்தி என்பது புலனாகும். மேற்சொன்ன அற்புதம் செய்யும் வல்லமையைப் பெற்ற அந்த அந்தனரைக்கான சுவாமி விவேகானந்தர் மீண்டும் ஒருமுறை சென்றிருந்தார் அச்சமயத்தில் அந்த அந்தனருக்குக் காய்ச்சல் இருந்தது அந்தக் காய்ச்சலை அவர் தமது மந்திரசக்தியால் குணப்படுத்திக் கொள்ள முடியவில்லை அவர் சுவாமி விவேகானந்தரை நோக்கி சுவாமி என் தலைமேல் தங்கள் திருக்கரத்தை வையுங்கள் எனது உடல் துன்பம் முதலில் நீங்கட்டும் என்று வேண்டிக் கொண்டார், சுவாமியும் அவ்வாறே செய்தார் உடனே அவர் காய்ச்சல் நீங்கியது. இத்தகைய சக்தி சுவாமி விவேகானந்தரிடம் இருந்ததே அதை என்ன சக்தி என்று வழங்குவது? இத்தகைய சக்தி சுவாமி விவேகானந்தரைப் போன்ற ஆன்மீக சக்தி கொண்டயோகிகள் சித்தர்களுக்குத் தான்



இருக்கமுடியும் இந்த விடயத்திலிருந்து ஒன்றை அறியக்கூடியதாக உள்ளது என்னவெனில் இத்தகைய மந்திர ஜாலங்களினால் வாழ்க்கையில் மனிதன் அடைய வேண்டிய நலன்கள் வசதிகள் செல்வங்கள், பதவி உயர்வுகள், கௌரவங்கள் சொத்துக்கள் புகழ், பெருமை ஆகியவற்றை அடைவதற்குப் பயன்படுவதில்லை தேள், பாம்பு கொட்டிவிட்டால் அதற்கு வைத்தியம் செய்யாமலே மந்திரத்தினால் அவ்விஷத்தினை நீக்கி விடுவதை பலரும் அறிந்திருப்பீரகள் இது ஒரு ஏமாற்று வித்தை அல்ல விஷவேதனையால் தவிக்கும் நோயாளிமந்திரித்து சில நிமிடங்களிளேயே குணம் பெற்றுவிடுகின்றார். என்றால் அது எப்படி ஓர் ஏமாற்று வித்தையாக இருக்கமுடியும். விஷம் கடித்தவனுக்கு விஷம் இறங்காமல் இருந்தால் அவன் சிரிப்பான் இதுபோன்ற பல சிகிச்சை முறைகள் சித்த வைத்தியத்துறையில் உள்ளது. மணி மந்திர ஔஷதங்களில் வல்லவர்கள் சித்தர்கள் அவர்களால் உருவாக்கப்பட்ட மருத்துவம் தான் சித்த வைத்தியமாகும். அவர்கள் அட்டமா சித்துக்களை செய்யும் வல்லவர்களாகவும் விளங்கினார்கள். தேள், பாம்பு ஆகிய கொடிய நஞ்சுள்ள பிராணிகள் கடிப்பதாலும் ஏற்படும் விஷத்தை மருந்தின்றி மந்திரத்தாலேயே நீக்கிவிடும் சக்தியை மனோசக்திக்கு அளிப்பது மந்திரசக்தியே இவ்விதமான மாந்திரீக சக்தியோடு கூடிய வைத்தியமுறையானது சித்தர்களால் அருளப்பட்ட சித்த வைத்தியத்திலேயே உள்ளது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மனோ சக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றால் அந்த மனதிற்கு அத்தகைய சக்தி இயல்பிலேயே அமைந்திருக்க வேண்டும் எல்லோருக்குமே மனம் இருக்கிறது. ஆனால் எல்லோருமே ஒரேதுறையில் முன்னேறி வளர்ச்சி பெறவிரும்புவதில்லை எந்தத்துறையில் என்றாலும் எடுத்த எடுப்பிலேயே திடீரென்று முழுவெற்றியை அடைந்துவிட முடியாது தொடக்கத்தில் நிதானமாக முயலவேண்டும் பிறகு முழுச்சக்திகளையும் சேர்த்துக் கொண்டுதான் முழுவேகத்தையும் அடைய முடியும். அதுபோல மனோசக்தியின் விஷயத்தில் மெல்லமெல்லதான் முன்னேற முடியும் அந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன் மனதைப் பற்றிய அடிப்படை உண்மைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும் இதனை அகத்தியமுனிவர் கீழே வரும் பாடல் வரிகள் மூலம் அழகாக கூறுகின்றார்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரம் செய்மையாகுமே!

மனம் இயற்கையிலேயே செம்மையாக அமையப் பெற்றவர் மந்திரங்களைச் செபிக்க வேண்டியது இல்லை. வாசியை நிறுத்த வேண்டியதில்லை வாயுவை உயர்த்த வேண்டியதில்லை அவர்க்கு மந்திரம் பலிக்கும் இது

அகத்தியமுனிவரின் கருத்தாகும் மனதில் உறுதி வேண்டும் என்றார் பாரதி மனதில் உறுதி ஏற்பட்டால்தான் அதில் தோன்றும் எண்ணத்திலும் உறுதி ஏற்படும் உறுதி வாய்ந்த எண்ணமே செயலுக்கு வித்தாகும் இது பாரதியார் கருத்தாகும்.

மனித மனதிற்கு ஐந்து வகையான அவஸ்தைகள் உண்டு அவையாவன நனவு நிலை, கனவு நிலை, சுமுத்திநிலை, துரியநிலை, துரியாதீதம் என்பனவாகும் நாம் தூங்கும்போது மன இயக்கமும் உடலியக்கமும் ஒடுங்குகின்றது. உள் மனம் மட்டுமே இயங்குகிறது. மனித உடலுக்குப்புற அவஸ்தைகள் ஒடுங்கிவிடுவதால் தூக்கத்தின் போது மனித மனதின் உள்ளியக்கங்களிலேயே விரைவும் செறிவும் நிகழ்கின்றன. அந்நிலையில் கண்கள் மூடியிருந்தாலும் மற்ற உறுப்புக்கள் ஓய்வு நிலையிலிருந்தாலும் உள் மனம் ஒன்று மட்டுமே கனவு காணும் வலிமையுடன்

திகழ்கிறது கனவிலே நாம் காண்கின்றோம் கேட்கின்றோம் முகர்கின்றோம் உணர்கின்றோம் ஆனால் அப்பொழுது மனிதனின் புற உறுப்புக்களான மெய்வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து இந்திரியங்களும் செயல்படுவதேயில்லை ஆரோக்கியமான உடலும் மனமும் கொண்டவர்களுக்கு கனவுகள் தோன்றுவதில்லை அவர்கள் உடலும் மனமும் தூங்கி விழிக்கும் போது அவர்கள் உடலும் மனமும் புத்துணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இருக்கின்றனர்.

மூளைதான் ஆன்மாவோடு தொடர்புடையதாகத் திகழ்கின்றது. அதுவே உடலிலுள்ள மிக நுட்பமான சக்தி நிலையமாக திகழ்கின்றது. எந்த வேளையிலும் உடலிலுள்ள எந்தப்பகுதியிலும் நொடிப் பொழுதில் சக்தியைப் பாய்ச்சி செயற்படுகின்றது. ஒருவரின் அடிப்படை காந்த சக்தியானது மற்றொருவரின் காந்தசக்தி அதிர்வுகளின் தாக்குதலால் விரைவிலேயே தூண்டப்பெற்று விடும். தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பது பழமொழி. இப்பழமொழி இரத்தத் தொடர்புள்ள உறவினர் உடன் பிறந்தவரிடையே நிகழ்வதைச் சுட்டிக்காட்டும் அனுபவத்தொடராகும். உடலிலுள்ள சக்திகளின் இயக்கத்திற்கே ஆதாரமாய் இருப்பது பஞ்ச பூதங்களின் சக்தியாகும். மனித உடல் பஞ்சபூத சேர்க்கையினால் உருவானது உடல், உயிர் ஆகியவற்றின் ஆதிக்கத்தினால் உயிரிணங்கள் அனைத்துமே இயங்கி வருகின்றன.

உயிர் பிரிந்ததும் உடல் பஞ்சபூதங்களோடு கலந்துவிடும் இதை சித்த மருத்துவம் ஒன்றே அழகாக விளக்கியுள்ளது. இதனால் சித்த மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவங்கள் 96 ஆகவும் உள்ளது. இது சித்தர்கள் வழிவகுத்துள்ள உடலமைப்புத் தத்துவமாக உள்ளது. இந்தத் தத்துவங்களின் படியே உடல் அமைகின்றது. உடல் இயங்குகின்றது. இதைத் தெளிவாக அறிய அனுபவம் மிகவும் தேவையானது. இந்த அடிப்படைத்தத்துவமே சித்த மருத்துவமாகும்.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற
இலக்கி விழா போட்டியில் சிரேஷ்ட பிரிவில்
முதல் பரிசு பெற்ற கவிதை

## உரமேற்றும் உபதேசங்கள்



முயற்சியின் முதற்படியிலேறி – நீ
மூவுலகில் நின்றாலும் – நிற்காது
உனது தேடல் – தேடு
உன் உடலின் உதிரத்துளி
உள்ளவரை தேடு
தேடல் உன்னிடம் இருந்தால்
தேடிவரும் உன்னிடம் ஞானம்
ஞானம் பிறக்க நீ ஞானி அல்ல
ஞாலம் சிறக்கச் செயலாற்று
– அன்று
ஞாலம் சொல்லும் உன்னை ஞானி
– என்று

க. நிசாந்தன்
மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி



# முதியோர் நலம்

திரு.வ. கணபதிப்பிள்ளை

முற்காலத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் முதியோராகக் கணிக்கப்பட்டார்கள். இதையடுத்து 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் முதியோராகக் கணிக்கப்பட்டார்கள். இப்போது 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் முதியோராகக் கொள்ளப் படுகின்றனர். மக்களின் தேகாரோக்கியம் வளர்ந்து செல்வதே இதற்கான காரணமாகும். மக்களின் தற்போதய தேக ஆரோக்கியத்தை அவதானிக்கும் போது இந்த வயதெல்லை மேலும் 65-70 என்றவாறு அதிகரித்துச் செல்லலாம் என எதிர்பார்க்கலாம்.

முதியோர் பருவத்தின் தொடக்க வயதெல்லையை 60 ஆக வரையறை செய்தாலும் இப்பருவத்தின் கடைசி வயதெல்லையை யூகிக்க முடியாதுள்ளது. மனிதரின் தேகநலம், அவர்களுக்குக் கிடைக்கும் பராமரிப்பு என்பவற்றிற்கு ஏற்ப இந்தப் பருவத்திற்குரிய காலம் குறைந்தோ கூடியோ அமையலாம் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்கள் 100 வயதிற்கு மேலாகவும் சுகமாக வாழ்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மனித வாழ்வில் முதுமைப் பருவம் மிகவும் சந்தோசமானதும் அமைதியானதும் ஆறுதலானதும் ஆகும். கடந்த காலத்தில் தான் பெற்ற அனுபவங்களை அசைபோட்டுப் பார்ப்பதற்குப் பொருத்தமான காலம் இதுவாகும். தனது வாழ்நாளில் பெற்ற கசப்பான அனுபவங்களை பரிசீலித்துப் பார்ப்பதற்கும் சுவையான அனுபவங்களை நினைத்து மகிழ்ச்சியடைவதற்கும் உரியகாலம் இதுவாகும். குடும்பப் பாரங்களையும் தொழில் சுமைகளையும் தமது பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களின் நடவடிக்கைகளை அவதானித்து நெறிப் படுத்தும் வாய்ப்பு இப்பருவத்தில் உண்டு. தங்கள் வாழ்நாளில் பெற்ற அர்த்தமுள்ள அனுபவங்களை அடியொட்டி தங்கள் வழித்தோன்றல்களை சீரியவழியில் நடக்க வழிப்படுத்தும் பொறுப்பு இந்த முதியோருக்கு உரியதாகும், தமது வாழ்நாளில் பெற்ற சிறந்த அனுபவங்களைக் குருவாக வைத்து கதைகள், கவிதைகள், கட்டுரைகள் நாடகங்கள் முதலியவற்றை இந்த முதியவர்கள் எழுதுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. மேலைத் தேசங்களில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் சேவை செய்து ஓய்வுபெறும் புத்தி ஜீவிகளை அந்த நிறுவனங்களை விட்டு வெளியேற விடுவதில்லை அந்த வளாகத்தின் உள்ளேயே அவர்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொடுத்து அவர்களை ஆலோசகர்களாகப் பயன் படுத்துகின்றனர். எனவே முதியோர் சமூகத்திற்கு வேண்டிய மிகவும் பெறுமதிமிக்கவர்களாகும்.



முதியோரில் சிலர் சந்தோஷமாக இருப்பதையும் சிலர் முதுமைக்காலத்திலும் கஷ்டப்பட்டு உழைப்பதையும் சிலர் குடும்பத்தினரால் புறக்கணித்து ஒதுக்கப்படுவதையும் அன்றாட வாழ்க்கையில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

முதியவர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்குத் தேவையான வதிவிடவசதி, உணவு, உடை மற்றும் மருத்துவசதிகள் முதலியவற்றைச் செய்து கொடுக்க வேண்டியது அவர்களின் பிள்ளைகளுடைய கடமையாகும். இந்த வசதிகள் வசதி குறைந்த குடும்பங்களில் கூட செய்து கொடுக்கப்படுகின்றன. சில குடும்பங்களில் எத்தகைய கவனிப்பும் இல்லாமல் வயோதிபர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். அவர்கள் அநாதைகளாக அலைந்து கஷ்டப் படவேண்டியுள்ளது. இது மனிதநேயமற்ற செயலாகும். சில முதியோர்கள் தங்களின் குடும்பத்தேவை கருதி இயலாத வயதிலும் உழைக்கின்றார்கள் இதற்கு ஏற்றவகையில் சம்பந்தப்பட்டவர்கள் இவர்களைப் பராமரிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். இல்லை எனில் இவர்கள் இயலாத வயதிலும் உழைப்பது அர்த்தமற்றதாகிவிடும்.



ஒவ்வொருமனிதனும் தனது முதுமைக் காலத்தை மற்றவர்களின் தயவு இல்லாமல் கழிக்க வேண்டுமாயின் ஏதாவது ஒருகைத் தொழிலைப்பழகி இருக்கவேண்டும். வேலைகள் எதுவும் இன்றி வீட்டில் இருப்பவர்களுக்கு பல தொல்லைகள் வந்து சூழும். வீட்டில் உள்ளவர்களுக்கு சில வேளைகளில் ஆலோசனைகள் சொல்ல வேண்டி வரலாம். வயோதிபர்கள் சொல்லும் ஆலோசனைகளை சில குடும்ப அங்கத்தவர்கள் மதிப்பதில்லை இவருக்கு அறளை பிடித்துவிட்டது என்று தட்டிக் கழித்து மனம் புண்படும்படி பேசுவார்கள். ஆனால் இவர்கள் ஏதாவது ஒரு கைத்தொழிலில் ஈடுபட்டால் மற்றவர்களுடன் தொடர்பட வேண்டிய தேவைவராது முதியோர்கள் பயனுள்ள பொழுது போக்காக கயிறு திரித்தல், தும்புத்தடி செய்தல், பாய் இழைத்தல் அகப்பை செய்தல், கூடை பின்னுதல், காய்கறி தோட்டம் செய்தல், கோழி, முயல், ஆடு போன்ற கால்நடைகளை வளர்த்தல் முதலிய முயற்சிகளில் ஈடுபடலாம். அப்போது வருமானமும் வரும் குடும்ப அங்கத்தவர்களின் அன்பும் வரும்.

முதுமைப்பருவத்திலும் கல்வி அவசியமாகும். முதியோருக்கான கல்வி என்பது சாதாரண கல்வி முறையில் இருந்து வித்தியாசமானதாகும். முதியோர்கள் மொழி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலிய துறைகளில் கவனம் செலுத்த வேண்டிய தில்லை. மனதிற்கு அமைதியைத்தந்து ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கக் கூடிய சமயம் சார்பான கல்வியே முதியோருக்கு அவசியமானது. வாசிக்கத் தெரிந்தவர்கள் புராண இதிகாசங்கள், நீதிநூல்கள், பைபிள் பெரியாரின் வரலாறுகள் முதலியவற்றைப்படிக்கலாம். மேலும் இவர்கள் வாசிக்கும் பழக்கம் இல்லாதவர் களுடன் கண்பார்வை கஷ்டமானவர்களுடனும் சேர்ந்து தேவாலயங்களில் பிரார்த்தனைகளில் ஈடுபடலாம் கதாப்பிரசங்கங்கள் செய்யலாம்.

ஆன்மீகக் கதைகள் தெரிந்தவர்கள் சொல்ல மற்றவர்கள் கேட்டுப் பயனடையலாம். எல்லாவற்றிற்கும் மேலாக எழுத்து ஆற்றல் உள்ளவர்கள் சமூகத்திற்குப் பயனளிக்கக்கூடிய கதைகள் நாடகங்கள் முதலியவற்றை எழுதலாம். இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மனம் அமைதிபெறும்.

முதுமைப் பருவத்திலும் தேக ஆரோக்கியத்திலும் ஈடுபாடு காட்ட வேண்டியது மிக மிக அவசியமாகும் ஒழுங்கான உணவுப் பழக்கம், சுத்தமாக இருத்தல் எளிமையான தேகாப்பியாசம், ஒழுங்கான ஒய்வு, ஒழுங்கான உறக்கம் முதலியவற்றில் கவனம் செலுத்துவதுடன் முறையான வைத்தியப் பரிசோதனை களுக்கும் செல்ல வேண்டும். குறிப்பாக நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், இருதய நோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்டவர்கள்

ஒழுங்காக வைத்திய ஆலோசனைகளைப் பெறுவதுடன் வைத்தியர்கள் வழங்கும் ஆலோசனைகளையும் தவறாது கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும். பராமரிப்பதற்கு உறவினர்கள் இன்றி அல்லலுறும் முதியவர்களைப் பராமரிப்பதற்கு நாட்டின் பல பாகங்களிலும் முதியோர் இல்லங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இங்கு முதியவர்களுக்கு ஏற்றவகையில் படுக்கைவசதிகளும், உணவு உடை வசதிகளும், வைத்திய வசதிகள் முதலியவையும் வழங்கப்படுகின்றன. மேலும் தொலைக்காட்சி வானொலி பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலிய பொழுது போக்கு வசதிகளும் சிறப்பாக வழங்கப்படுகின்றன. அத்துடன் காய்கறித்தோட்டம், பூந்தோட்டம் முதலிய தேகாப்பியாசத்துடன் சம்பந்தப்பட்ட பொழுதுபோக்கு வசதிகளும் உண்டு. ஒவ்வொருவரும் தாம் விரும்பிய தெய்வங்களை வணங்குவதற்கு ஏற்று வசதிகள் உண்டு. முதியோர் இல்லம் பராமரிப்பதற்கு ஒருவரும் இல்லாமல் துன்பப்படும் வயோதிபர்களுக்கு சிறந்த புகலிடமாகும். இந்த முதியோர் இல்லங்களைப் பற்றி அறியாது அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் வயோதிபர்களும் உண்டு. இவர்கள் இந்த வசதியை பயன்படுத்துவதற்கு விடயம் அறிந்தோர் வழிப்படுத்தவேண்டும். இவ்வகையில் எல்லாக் கிராமங்களிலும் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராமசேவை உத்தியோகஸ்தர்கள் மூலமாக முதியோர் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்கள் மூலமாக முதியோர் தேவைகளும், குறைபாடுகளும் அடையாளம் காணப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுவருகிறது. கிராமத்திலுள்ள முதியவர்கள் ஒவ்வொருவரும் ஏனைய முதியவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வாய்ப்பாக உள்ளது. இச்சங்கங்களின் ஊடாக முதியோர் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இது முதியவர்கள் சேவைகளைப் பெறுவதற்கு முன்னுரிமைப்படுத்தும் கௌரவ ஆவனமாகவும் பயன்படுகின்றது. மாதமொரு முறை முதியோர் சங்கக்கூட்டம் நடைபெறும் வேளைகளில் முதியோர்கள் தங்கள் குறைநிறைகளை தம்மிடையே கலந்துரையாடிக் கொள்கின்றனர். இதன்மூலம் இன்பதுன்பங்களைப்பரிமாற அமைதி பெறுவதற்கு இது வாய்ப்பாக உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக சர்வதேச முதியோர் தினம், முதியோர் வாரம் என்றெல்லாம் கொண்டாடப்படுகிறது. இச்சந்தர்ப்பங்களில் எல்லா முதியோர்களும் எதோ ஒருவகையில் கௌரவிக்கப் படவேண்டும் அப்படிச் செய்தால்தான் இத்தினம் அர்த்தமுள்ளதாகும். இத்தினத்தில் முதியோருக்கு கோயில்களில் அர்ச்சனை செய்தல் அவர்களுக்கு உணவு உடுப்புப் பொதி முதலியவற்றை வழங்குவதுடன் அவர்களை வணங்கி அவர்களின் நல்லாசிகளைப் பெறுதல் போன்ற நற்கருமங்கள் நடைபெறுகின்றன. எமது அரிய செல்வங்களான முதியோர்கள் நூறு ஆண்டு காலத்திற்கு மேல் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழப் பிரார்த்திப்போமாக.

## சரித்திரம் படைக்க

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் மானிடன் கைகள் சேர்வதில் கண்டபயன் எதுவுமில்லை இருமனம் ஒத்த கைகள் சேரும்போதுதான் சரித்திரம் உருவாகும்.

## வாழ்வியல்

வாழ்வில் வரலாறும், சாதனையும் படைக்க வேண்டுமெனில் நாமும் ஒரு வரலாறாக மாற வேண்டும்.

நாலினமும் நன்னெறியின் வழியிலே வாழ்ந்தால் புன்னெறியும் இனவெறியும் பொடிப்பொடியாய்ப் பறக்கும்.

வாழ்க்கை எனும் சோதனைக் களத்திலே தினமும் சரியாகச் சோதிக்கப்படுபவன் தான் சக்தி வாய்ந்த மனிதனாகிறான்.



# பரதக் கலை ஓர் அறிமுகம்


**திருமதி. பிரேமளாதேவி ரவீந்திரன்**
பிறேமலாயா நாட்டிய சித்ரா,
லண்டன்.


ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் மிக உயர்ந்த கலை பரதக்கலை இக்கலை இன மத, மொழி பேதம் இன்றி எல்லோரையும் கவரக் கூடியதுமான ஒரு உன்னதக் கலையாகும். உள்ளகக் குறிப்புக்களையும் அவற்றை வெளிப்படுத்துவதற்குரிய கண், கை முதலிய உறுப்புக்களின் இயக்கங்களை உடையது ஆடற்கலை அதாவது :

"யதோ கஸ்த ஸ்ததோ திருஷ்டி
யதோ திருஷ்டி ஸ்ததோ மனக
யதோ மனக ஸ்ததோ பாவ
யதோ பாவ ஸ்ததோ ரஸக"

அதாவது எங்கு கை செல்கிறதோ அங்கு கண் போக வேண்டும். எங்க கண் செல்கிறதோ அங்கு மனம் செல்ல வேண்டும். எங்கு மனம் செல்கின்றதோ அங்கு பாவம் உண்டாக வேண்டும். எங்கு பாவம் தோன்றுகிறதோ அங்கே ரஸம் உண்டாகும். எனவும் கலைகளிலெல்லாம் சிறந்ததாக போற்றப்படுவது பரதக்கலையாகும்.



இந்நாட்டிய இலக்கணமானது பிரம்ம தேவனால் வரையறுக்கப்பட்டது என வரலாறு கூறுகிறது. நான்முகன் "ரிக்" வேதத்திலிருந்து பாட்டியமும் (வாக்கியமும்) யசுர் வேதத்திலிருந்து அபிநயமும் சாம வேதத்திலிருந்து கானம் என்கின்ற பாடலும் அதர்வண வேதத்திலிருந்து ரஸ பாவங்கள் ஆகிய நான்கையும் ஒன்றாக்கி உலகத்தின் மேன்மையான கலையாக நாட்டியக் கலையின் இலக்கணத்தை வகுத்தார். நாட்டியத்தைப் பார்ப்பதிலும் அதை ஆடுவதிலும் ஒரு மனிதன் தனது மனதில் உள்ள துன்பங்களை மறந்து ஆனந்தம் அடைகின்றான். பிரம்மன் தான் எழுதிய நாட்டிய வேதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அதாவது இப்பூலோகத்தில் ஜனன மரண பாசத்திலிருந்து விடுவதற்கும் கடவுளை மிக எளிதாக காண்பதற்கும் ஐம்புலன்களை அடக்கி ஆளுகின்ற முனிவரைக் காட்டிலும் மிக அதிகமான பலன் பெறக் கூடியதுமான கலை நாட்டியக் கலை ஒன்றே என்று நாட்டியக் கலையின் சிறப்பைக் கூறுகின்றார்.

நாட்டியத்தைப் பயில்வோர்கள் பரலோகம் என்கின்ற சொர்க்கலோகத்தினை பூலோகத்திலேயே அடைகிறார்கள். ஒரு குழந்தையை கையில் எடுத்து கொஞ்சும் போது அடைகின்ற இன்பம் பேரானந்தம் ஆகும். அந்த பேரானந்தத்தை விட நாட்டியத்தைக் கற்கும் போதும் கண்ணுறும் போதும் அடைகின்ற ஆனந்தம் அளவிட முடியாதது. ஆதலால் உலகத்திலே கிடைக்கின்ற ஆனந்தத்திலே மிகப்பெரியதும் ஈடு இணையற்றதும் மீண்டும் மீண்டும் நினைத்து ஆனந்தப்படக் கூடியதுமானது இந்த பரதகலையாகும்.



# முரண்பாடுகளும் மற்றும் முரண்பாடுகளுக்கான மீள் தீர்வுகளும்

# CONFLICT AND CONFLICT RESOLUTION

திரு.சுகுணதாஸ் ரவிசங்கர் (B.A)

***அறிமுகம் :-***

அதிகமாக சிறுவர்கள் முரண்பாடுகளிலிருந்து விடுபடுதலை தங்களது சமூகச்சூழலிலிருந்தே அறிந்து கொள்கின்றனர். (கலாச்சாரம், நண்பர் வட்டம், குடும்பம், ஊடகங்கள் மற்றும் சமூகம்) அதேபோல் அதிகளவான இளைஞர் யுவதிகளும் முரண்பாட்டுடன் போராடி வெற்றி காண்பதை ஒரு அங்கிகரிக்கப்பட்ட வழியாக கற்றுக் கொள்கின்றனர்.

சில மூர்க்கத்தனமான நடத்தைகள் முரண்பாட்டு நிலையை அல்லது தரத்தை அடையாளப்படுத்துவதற்காக காணப்படுகிறது. இதன் விளைவாக பாடசாலைகளிலும் சமூகங்களிலும் Epedimic of Violence வன்முறை பரவலானது அவதானிக்கப் பட்டுள்ளது. வளர்ந்தோரிடையே ஏற்படும் இவ்வாறான பரவல் தன்மை வாய்ந்த முரண்பாடானது கட்டுப்படுத்துவதாகவோ அல்லது மிகச்சரியாக கையளிக்கக் கூடிய தாகவோ பெரும்பாலும் இருப்பதில்லை.

பிள்ளைகளைப் பொதுவாக வழி நடத்துதலையும் குறிப்பாக பெரியோர்களை வழிநடத்துதலையும் நமது எதிர்கால சந்ததியினரின் இலக்குகளை அடைய வழிகாட்டுதலையும் அவர்கள் வாழ்வில் நல்ல மாற்றங்களையும் கொண்டுவர உதவுகிறது. மேலும் மனப்பாங்கு ரீதியான மாற்றங்களும் விழிப்புணர்வும் சமூக மட்டத்திலே மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் போது முரண்பாடானது ஒரு பிரச்சினை அல்ல என்பதனை அவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்வதுடன் உண்மையில் முரண்பாடு என்பது பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு வழிமுறையாகும் என்பதை மையப்படுத்தி செயற்பட வேண்டும்.

**முரண்பாடு என்றால் என்ன?**

01. அரசியலின் பார்வையில் முரண்பாடு எனும் பதமானது இருமக்கள் குழுக்களுக் கிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற எதிர்நிலைப் பாடுகளின் நிலை என பொருள் படுகின்றது. (Ongoing state of hostility between two group of People)

02. தொழில் ரீதியாக பார்க்கும் போது முரண்பாடுகள் என்ற வகையில் அது பெரும்பாலும் முரண்பாட்டுக்குரிய தீர்வுகளை முன்வைப்பதனையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஆட்களுக்கு மேற்பட்ட குழுக்கள் எப்பொழுதும் தெளிவான ஒருங்கமையாத இலக்குகளை அல்லது ஒவ்வொருவருடைய இலக்குகளை அடையச் செய்யும் இயலுமைகளை பலலினப் படுத்த முயற்சிக்கின்றார்கள் அங்கேயே முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.

ஒருவர் முரண்பாடுகளின் சிறந்த பெறுபேற்றை அல்லது நன்மையை அதாவது தோற்றத்திலோ அல்லது மறைந்திருப் பதனையோ கொண்டு குழம்பிக்கொள்ளக் கூடாது. இது போட்டித்தன்மைக்கும் ஒத்துழைப்புக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை ஒத்ததாக இருக்கும்.

போட்டித்தன்மையான நிலைமைகளில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குழுக்கள் ஒன்றுக்கொன்று நிலையற்ற அல்லது உறுதியற்ற இலக்குகளைக் கொண்டுள்ள போது ஒவ்வொருவரும் அதனை அடைய முயற்சிக்கையில் அதிகமாக முயலும் குழு மற்றைய குழுவை அல்லது குழுக்களை பின்தள்ளி அல்லது பிந்தச்செய்து விடுகிறார்கள். (Undermine) ஆகவே போட்டி நிலமைகளானது இயற்கையான முரண் பாடுகள் தோன்றுவதற்குரிய காரணங்களாக அமைகின்றது. இவை இயற்கை காலணி முரண்பாடுகள் என அழைக்கப்படுகின்றன.

## முரண்பாட்டுக் காரணிகள்

01. பார்வைக் கோணம் எண்ணங்கள் உணர்வுகள் மற்றும் நடத்தைகள் (Perceptions, Thoughts Feeling and behaviors)

முரண்பாடானது பார்வைக் கோணங்களினதும் கூட்டாக ஒரு கிளையாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் முரண்பாடுகள் ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. மற்றும் ஒவ்வொரு முரண்பாட்டிற்கும் ஒன்றுபட்ட முக்கியத்து வமான காரணிகள் அடிப்படையில் வேறானதாக காணப்படுகிறது. உதாரணமாக கணவன் மனைவியிடையே உள்ள உறவு முறையில் பிரச்சினைகள் எழுகையில் அவர்களது உணர்வுகளானது அங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் ஒரு வியாபார ரீதியான முரண்பாட்டில் இரு குழுக்களுக்கிடையே நடத்தைகள் முக்கியம் பெறுகின்றன.

02. முரண்பாடுகளின் வெளிப்படையானது உள்ளார்ந்த (Interpersonnel) குடும்ப ரீதியான சமூக ரீதியான அல்லது தேசிய ரீதியானவையாக காணப்படுகின்றன.

முரண்பாடுகள் நண்பர்களுக்கிடையே தொழில் ரீதியாக, ஒன்றுபட்ட இருவருக் கிடையே குடும்பங்களுக்கிடையே சமூகங் களுக்கிடையே, அல்லது நாடுகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளானது சில முக்கிய விடயங்களில் ஒத்த தன்மையுடையதாக காணப்படுகிறது. இவ் ஒத்த தன்மைகளை நாம் முக்கிய கவனத்தில் எடுக்கவேண்டும். மேலும் ஒரு முரண்பாடானது. பல்வேறுபட்ட ஒன்றுக்கொன்று தொடர்புடைய மட்டங்களுடன் இணைந்ததாக காணப் படுகிறது. உதாரணமான இருநண்பர்களுக் கிடையேயான முரண்பாடு அவர்களது குடும்பங்களில் ஏற்கனவே காணப்பட்ட முரண்பாடுகளிலிருந்து தோற்றம் பெறலாம் இவை பொதுவாக கலாசார ரீதியான அல்லது அரசியல் ரீதியான காரணிகளாக காணப்படலாம்.

03. முரண்பாடானது கோட்பாட்டு ரீதியாக வாய்மொழி பரிமாற்றங்களில் ஆரம்பித்து சண்டையிடுதலை விளைவாக கொண்டிருக்கின்றது.

## முரண்பாடுகளின் வகைகள்
## (Types and modes of conflict )

- ஒருவரோடு மற்றொருவருக்கு ஏற்படும் முரண்பாடுகள்.
- ஒருவர் தனக்குள்ளேயே முரண்படும் நிலை.
- குழு முரண்பாடுகள்
- நிறுவன ரீதியான முரண்பாடுகள்.
- சமூகரீதியான முரண்பாடுகள்.
- நாடுகளுக்கிடையான முரண்பாடுகள்.
- சர்வதேச ரீதியான முரண்பாடுகள்.

## முரண்பாட்டுத் தீர்வுகள் :

கோட்பாட்டுத் தீர்வுகள் குழுக்களுக்கான கோட்பாட்டு ரீதியான முரண்பாடுகளாக இரு பரிமாணங்களில் காணப்படுகிறது. ஒருவருடைய சுயவெளியீடு (Own out comes) கருத்தில் பொருந்தும் போது மற்றய குழுவின் வெளியீடு (Out comes) கருத்திலெடுத்தலை குறிக்கும். இவ்வொழுங்கானது பின்வரும் கருதுக் கோள்களுக்கு வழிவகுக்கின்றது.

01. இரு குழுக்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகள் கவனத்தில் எடுக்க வேண்டியவை. ஒருவருடைய சுயவெளிப் பாடுகள் மற்றும் மற்றவரது (Other Party) வெளிப்பாடுகளாகும். இது ஒவ்வொருவருக்கும் நன்மை பயக்கக்கூடிய தீர்வுகளுக்கு இட்டுச் செல்லக் கூடியவையாகும். (வெற்றி - வெற்றி)

02. ஒருவருடைய சுயவெளிப்பாடானது முரண்பாடுகளை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை மட்டும் முன்னெடுப்பதில் முக்கியத்துவம் பெறுகிறது.

03. மற்றவரது வெளியீடானது மற்றவரை வெற்றிபெறத் தூண்டுவதாகவும் அனுமதிப் பதாகவும் அமைவதில் முக்கியத்துவம் பெறுகிறது.

04. இருவருடைய வெளியீடுகளும் முரண்பாடுகளை தவிர்க்க முன்னெடுக்கப் படுமாயின் அது முக்கியத்துவம் பெறாமல் காணப்படுகிறது.

## முக்கிய குறிப்புக்கள்

❊ முக்கியமாக கருத்திலெடுக்க வேண்டியது ஒருவர் தனது வாழ்க்கையில் முரண்பாடுகளை கொண்டிருக்கின்றார் என்பது. முக்கியமன்று மாறாக அம் முரண்பாட்டை எவ்வாறு அனுகுகின்றார் என்பதே முக்கியமானதாகும்.

❋ எதிர்பார்க்கும் முரண்பாடுகளை எவ்வாறு கையாள்வது, உபயோகமான முறையில் தீர்ப்பது என்பதை கற்றுக் கொள்வதாகும்.

❋ ஒருவருடைய வாழ்க்கையில் முரண்பாடுகள் தோற்றம் பெறுகையில் அதை தவிர்க்காமல் அல்லது மறைக்காமல் உபயோகமான முறையில் எவ்வாறு கையாள்வது என்பதை கற்றுக் கொள்வதும் மற்றும் அதை வாழ்க்கையில் உந்து சக்தியாக மாற்றுவதை கற்றுக் கொள்வதும் முக்கிய மானதாகும்.

❋ உபயோகமான முரண்பாடுகள் என்பது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும் போது நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும்.

i. மதிப்பளித்தலும் ஒத்துழைத்தலும்
ii. சிந்தனா சக்தியைப் பயன்படுத்தி முரண்பாடென்பது தீர்வுகளை ஈட்ட வேண்டிய ஒரு பிரச்சினையாகும் என அறிதல்.
iii. ஈடுபாடு காட்டுதலும் சிந்தனை சக்திக்கு சவாலாக முரண்பாடுகள் அமையும் என்பதை உணர்தல்.
iv. தேவைகளை கருத்திலெடுத்தலும் தரம் அல்லது நிலைகளை கருத்தி லெடுத்தலும்
v. வன்முறையற்ற நடத்தைகளை வெளிப்படுத்தல்.
vi. உபயோகமான தீர்வுகள் எப்போது எதிர்பார்க்கப்படுகின்றன.
vii. மக்கள் எப்போதும் முரண்பர்டுகள் என்பது எதிர்மறையானது என்ற மனநிலையினையே கொண்டிருக்கின்றனர்.
viii. அதிகமான மக்கள் முரண்பாடுகளை உபயோகமான முறையில் தீர்க்கப்பயிற்று விக்கப்படவில்லை.
ix. மக்கள் முரண்பாடுகளை வினைத் திறனுடன் கையாள ஒழுங்காகப் பயிற்றுவிக்கப்படவில்லை.
x. பொதுவாக சகல குழுக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வெற்றி வெற்றி (Win-Win) தீர்வானது நன்மை பயக்க கூடியதாகும். இது சாதகமாகவும் சாத்தியமாகவும் இருக்க வேண்டும்.

### முரண்பாட்டு தீர்வுகள் பெறுதிகள் (Conflict Resulatation values)

1. ஈடுபடும் அனைவரையும் மதித்தல் சகல குழுக்களினதும் தேவைகளை தீர்வுகள் பூர்த்தி செய்தல்

2. ஒத்துழைத்தல் - ஒரு பொதுவான தீர்வினைப் பற்றி ஆராய்வதுடன் ஒருவரை ஒருவர் எதிரிகளாக பார்க்காமல் நண்பர்களாகவே நோக்குதல்.

3. வேறுபட்ட கோணங்களில் வரும் கருத்துக்களையும் (சுய எண்ணப் பாடுகளையும்) மதித்தல் ஒவ்வொருவருடைய தேவைகளையும் (Perspectives) சுய எண்ணப் பாடுகளையும் நோக்கங்களையும் புரிந்து கொள்ளுதலும் மதித்தலும்.

4. நீதியைப் பின்பற்றுதல் முரண்பாட்டுத் தீர்வுகளானது வெளிப்படையான தாகவும், உண்மையானதாகவும் மற்றும் கோட்பாடு களினாலும் வழி முறைகளினாலும் (Procedurally and sub Stantively) ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் அமைதல் வேண்டும் முக்கியமான நிலைத்திருக்கக் கூடிய தீர்வாகவும் அமையவேண்டும்.

5. எங்களுக்கும் மற்றும் எங்கள் சமூகங்களுக்குமிடையில் பரிமாற்றம் எமது வாழ்க்கையைப் பொறுப்பான நல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முரண்பாடுகளுடன் நாம் அணுகு முறைகளை மாற்ற வேண்டும் மேலும் சுமுகமாக கொண்டுவருவதற்காக நாம் எப்போதும் நேர் கோணத்தில் செயற்பட்டு சிந்திக்க வேண்டியுள்ளதாக இருக்கின்றது.

தற்காலத்தில் முரண்பாடுகள் என்பது எல்லாத் துறைகளிலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதிலும் குடும்ப ரீதியில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் நாலுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

# விழவின் போது . . .
# முழவாய் வந்தது . . .

சுப்ரமணியம் கீர்த்தனா

இடுப்பில் சொருகியிருந்த முந்தானைத் தலைப்பை எடுத்து கன்னத்தின் வழியாக துடைத்து தோளில் மாற்றி போட்ட படி '' ஏண்டி... புள்ள... சீனி இருக்குதா...? என்று கேட்டு விட்டு வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்தாள் பொன்னம்மா.

'' இல்லம்மா... இப்பத்தான் இருந்த சீனியை போட்டு தம்பிக்கு தேனீர் கொடுத்தனான்''

பேணியில் வளிச்செடுத்தாவது கொஞ்சம்சீனி எடுத்து தேயிலை போட்டுத்தா புள்ள நாளைக்குத்தான் பஞ்சாட்சர அண்ணன் கடையில கடனை கொடுத்துப் போட்டு சாமான் வாங்கணும் புள்ள நா எல்லாம் வறண்டு பொயிற்று இன்டைக்கு வேல எண்டா பெரிய கஷ்டமாப் போச்சு அதான் அந்த விறகு லொறி இன்டைக்கு வரல்ல அதால நாங்க எல்லாருமே விறகை கட்டி தலையில சுமந்து கடையில கொடுக்க வேண்டியதாப் போச்சு ம்..ம்..ம் என்ர உயிரை நீ உத்தியோகம் எடுக்கும் வரையும் போட்டு வச்சான் என்றால் போதும் ஆண்டவா..'' என்று ஏக்கப் பெருமூச்சவிட்டு அருகிலிருந்த கட்டையில் சாய்ந்தாள் பொன்னம்மா.

தன் அம்மாவின் கஷ்டத்திற்கு தன்னால் எப்போது விடிவு வரும் என்ற ஏக்கத்துடன் '' சரியம்மா வளிச்சு போட்டு வாறன்'' என்று உள்ளே செல்கிறாள் வாணி.

வாணிதான் பொன்னம்மாவின் மகள் இவளுக்கு பின் இரு தம்பிகள் உள்ளனர் விமல் இவனுக்கு 7 வயது இருக்கும் பரத் கடைசித்தம்பி அவனுக்கு 2 வயது இருக்கும் வாணி உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் படிக்கிறாள், இவளை இந்த கஷ்டமான சூழ்நிலையிலும் கூட உயர்தரம் வரை விஞ்ஞானப் பிரிவை தேர்ந்து படிக்க வைத்ததில் முழுச் செலவும் தன் தந்தையே காரணமாகும்.

இவள் வைத்தியருக்கு படிப்பது தன் பெற்றோரின் ஆசையாகவும் இருந்தாலும் கூட அக்கிராமத்தில் வைத்தியர் என்பவர்கள் என்பதற்கு யாருமே இல்லை இருப்பினும் அக்கிராமத்தில் ஒருவைத்தியர் இருக்கிறார். அவரும் நேர்மையாக தனது தொழிலைச் செய்வதில்லை அவ்வைத்தியர் பணம் சேர்ப்பதில் வித்தைக்காரன் இதனால் இவரின் குணத்தை அறிந்து மக்கள் நோய்க்கு மருந்து கேட்டு அவரிடம் செல்வதில்லை.



சிறுகதை

எத்தனை சிரமங்களை எதிர்நோக்கியும் நகரப் புற எல்லைக்கடந்து வந்தே வைத்தியம் செய்து கொள்வார்கள்.

இவ்வாறான இவ்வைத்தியரின் கொடுமையின் உச்சத்தாலும் பொன்னம்மாவின் வீட்டு வறுமையினாலும் உயிரை மாய்த்தவர்தான் வாணியின் அப்பா சண்முகம்.

ஆம் அவர் தோட்டத்தில் வேலை செய்பவர் அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு குடும்ப வண்டியை ஓட்டியவர் இவ்வாறு ஒரு நாள் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த வேளை புதரில் இருந்த பாம்பு அவனுக்குக்கடித்தது இதனால் இவரை வைத்தியரிடம் கொண்டு சென்ற போது அவர் பணத்தை பெறுவதை நோக்கமாகக் கொண்டு மருந்து கொடுக்க மறுத்துவிட்டார்.



இவரை நகர்ப்புற வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியிடையிலேயே அவரது உயிர் பிரிந்து விட்டது. இந்த சூழ் நிலையில் வறுமை என்ற கொடிய நோயால் பீடிக்கப்பட்டிருந்த வாணியின் குடும்பத்தில் தொழில் என்பது தேவையாகியது. இதனால் அக்கிராமத்துக்கு அருகில் உள்ள கிராமத்தில் விறகு ஆலை என்று விறகுகள் விற்கும் இடம் ஒன்றிருந்தது இங்கு வேலை செய்வதற்காக பொன்னம்மா செல்கிறாள் வாணியின் தொடர்ச்சியான படிப்பினை கொண்டு செல்ல இவளது கூலிப்பணம் பத்தாத வேளையிலும் அதனை சமாளித்துக் கொண்டு வாணி தனது படிப்பினை தொடர்ந்தாள்.

விறகு ஆலையில் ஒரு கட்டு விறகு வெட்டி ஏற்றினால் ஒரு கட்டுக்கு 10 ரூபா வீதம் பணம் கொடுக்கப்படும். பொன்னம்மா தன்னால் இயன்றளவுக்கு விறகு வெட்டி 10,12 கட்டுகளை ஏற்றுவாள் இதன் மூலம் கிடைக்கும் பணத்தை குடும்பத்தை கொண்டு செல்ல ஓரளவு போதுமானதாக காணப்பட்டாலும் வாணியும் தன்தாயின் பணம் பெறும் கஷ்டங்களை நன்கு உணர்ந்தவள். இதனால் அவள் படிக்கும் நேரம் தவிர்த்து மீதி நேரத்தை பக்கத்து வீடுகளில் மா இடித்தும் பணத்தை சேமித்தாள் இப் பணத்தைக் கொண்டு தனது சிற்சில தேவைகளையும் நிறைவேற்றி வந்தாள்.

வாணி அதிகமாக வெளியில் செல்ல மாட்டாள். காரணம் உடுக்க உடுபுடவை என்பது இவளிடம் நல்லது என்பதற்கு ஒன்றும் இல்லை இவளது இந்நிலையை அறிந்து தன் வீட்டில் வயதுபிள்ளை என்ற ஒன்று இருந்தும் அவள் வெளியில் செல்லாமல் (பாடசாலை தவிர்ந்த) இருப்பதால் பொன்னம்மாவின் மூத்தமகள் வாணி என்பது கிராமத்தில் சில பேருக்கு தெரியாது இதனை நினைத்து உள்ளம் கரைவாள் பொன்னம்மா.

வாணியின் இந்நிலைக்கும் வறுமைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் வாணி எதிர்பார்த்திருந்த அந்நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. தானும் இவ்வுலகில் தலைநிமிர்ந்து உயர் அந்தஸ்துடன் வைத்தியராக வரப்போகிறோம் என்ற உயரிய சிந்தனையை மனதில் எண்ணியபடி பரீட்சைக்கு முகம் கொடுக்க எதிர்பார்த்திருந்தாள்.

எதிர்பார்த்த வண்ணம் பரீட்சையும் வந்தது. வாணி இறைவனின் ஆசியுடன் தன் தாயின் ஆசீர்வாதத்துடனும் பரீட்சையை நன்றாக எழுதினாள். பரீட்சை எழுதி முடித்த சந்தோஷத்துடன் வெளியில் வந்து வெற்றியின் பெருமூச்சை சிறப்பாக வெளிப்படுத்தினாள்.



எழுதிய பரீட்சையின் முடிவுக்காய் அமாவாசை முடித்து பௌர்ணமிக்காக காத்திருப்பது போல் காத்திருந்தாள் அவள் காத்திருப்பின் பலனாய் சந்தோஷமான முடிவுகள் அவளுக்கு வந்து சேர்ந்தன.

அடுத்த நாட்காலை வாணியின் வீட்டுக்கருகில் இருக்கும் அவளுடன் படிக்கும் ஒரு மாணவி இவள் வாணிக்கு படிப்பதற்கு பல உதவிகளையும் புரிந்திருக்கிறாள் இவள் செய்த இந்நன்றியையும் தன் நெஞ்சில் ஒரமாய் நினைவில் வைத்தே நடந்தாள் வாணி.

அன்று அவள் அவசர அவசரமாக வாணியின் வீட்டிற்கு வந்தாள். வந்தவள் ''வாணி வாணி நாளைக்கு உன்னை மறுக்காமல் பாடசாலைக்கு வரட்டாம் என்று ஆசிரியர்கள் கூறினார்கள்'' என்று கூறிவிட்டு வாணியின் அருகில் வந்து வாணியின் தோளை தொட்டு,

இனி ''வாணி உனக்கு நல்ல எதிர்காலம் தான் .....'' என்று சிரித்துக் கூறிவிட்டு தனக்கு அவசரமான வேலை இருக்கிறது என்று கூறி விரைந்து விடைபெற்றுச் சென்றாள்.

அடுத்த நாட்காலை வாணி மிகுந்த சந்தோஷத்துடன் பாடசாலைக்குச் செல்ல தயாரானாள் அம்மா... அம்மா.. என்று அழைத்தபடி அம்மா இனி நீங்க வேலைக்கு போற அவசியமே இல்லம்மா எம்வாழ்வில் வறுமையின் இறுதிநாள் என்பது இதுதான் ஓம் வாழ்வின் வறுமை என்பதற்கே இடமில்லை என்று ஆனந்தக்கண்ணீர் விட்டு தன்தாயைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

பின்னர் தன்தம்பி விமலை அழைத்து ''நீ இனி பணக்கார பையன்கள் மாதிரி பள்ளிக்கு போவாடா தம்பி அடுத்து என் செல்லத்தம்பி பரத்துக்கு இனி நல்ல உடுப்பு, விளையாட்டு சாமான் எல்லாம் வாங்கி தருவேன்டா அக்கா" என்று தூக்கி முத்தமிட்டு இறக்கிவிட்டாள்.

'' அம்மா நான் வாறதிற்குள்ள இருக்கிற அரிசை கஞ்சி காய்ச்சி சாப்பிடுங்க அம்மா... மீதியை நான் வந்ததும் பார்ப்போம் " என்று கூறி வெளியில் வருகிறாள்.

இடி மின்னலுடன் கூடி மழை இடைவிடாது பெய்தது இம்மழை புகைமண்டலம் போல தெரிந்தது வாணி தங்கி நின்று சென்றால் காரியம் தடைப்பட்டுவிடும் என்பதற்காக விரைந்து ஓட்டமும் நடையுமாக பாடசாலைக்கு விரைந்து வீதியால் செல்கிறாள்.

இவளது சந்தோஷம் இந்த மழையையோ எதிரில் வரும் வாகனங்களையோ அவளது கண்களுக்கு காட்டாமல் மறைந்து விட்டது.

இவள் வீதியில் வரும் போது பின்னால் வந்த பஸ் அவளை '' ஆ... அம்மா... "என்று மட்டும் உரத்த தொனியில் அழைத்த படியே மின் கம்பத்தில் பட்டு அடிபட்டு மேலே சென்று பந்து கீழே அடிபட்டு விழுவது போல விழுந்தாள் வாணி.

அவள் இப்போது வாணி இல்லை எல்லோரது வாய்களிலும் "சா" என்று கூறினர் யாருபெத்த பிள்ளையோ அநியாயமான "சாவு" வாழ வேண்டிய வயதில்.... இது விதியா? என்று பலரும் கூறினார்கள்.

இவ்வாறு கூறிக்கொண்டே விபத்து நடந்த இடத்தைச் சுற்றி மக்கள் கூட்டமே குழுமி நின்று ஆளுக்கு ஆள் ஒரு கதைகளை கூறிக்கொண்டிருந்தனர்.

பொன்னம்மா வீட்டிலிருந்து வானத்தைப் பார்த்துவிட்டு ''இனி மழை விட்டிருக்கும் விமல் நீ போய் விளையாடாமல் உன்னோடை படிக்கிற பையனுட்ட புத்தகத்தை வாங்கி படிச்சிட்டிரு நானும் தம்பியும் விறகு ஆலைக்கு போயிட்டு வந்திர்றம், கவனமா வீதியை பார்த்துப் போடா விமல்'' என்று அவனுக்கு கூறிவிட்டு செல்கிறாள்.

வீதிக்கு மூவருமே நடந்து வந்து விட்டனர் பையன் விமல் தன் தாயுடன் ''அம்மா... இனி நீங்க வேலைக்கு போகமாட்டிங்களா? அப்படியெண்டா நாம எல்லாரும் வீட்டில இருப்பமா? அம்மா'' என்று கேள்விகளையே கேட்ட வண்ணம் வந்தான் பொன்னம்மா செல்வதே இனி வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டு கூலிப்பணம் மீதியையும் வாங்கிவிட்டு வருவோம் என்பதற்காகவே விமலை பாதையை கடக்க முற்பட்ட வேளை விமல்''அம்மா... அங்க என்ன நிறைய சனம் நிக்காங்க'' என்றான் அதற்கு பொன்னம்மா.


''அங்க யாரரோ ஒரு வித்தை காட்டுகிறான் போல அது தான் இந்த சனங்கள் கூட்டமாய் நிண்டு பார்க்குதுகள் போல'' என்று அவனிடம் கூறி அவனைப் பாதையை கடத்தியும் பொன்னம்மா பின்னர் அப்பக்கமாக நடந்து வந்து கூட்டமாக நிற்கும் இடத்தை நெருங்கினாள்.

அங்கு நடப்பது வித்தையில்லை என்பது நெருங்குமளவில் புரிந்துவிட்டது அவளுக்கு அதனோடு சனங்கள் பேசும் ''பாவம்... அடிபட்ட சவமாய் யாரு பெத்த பிள்ளையோ'' என்ற பேச்சுகள் காற்றுடன் கலந்து வந்து பொன்னம்மாவின் காதில் விழுந்தது இருந்தும் தானும் குழந்தைகள் பத்துமாதம்சுமந்து பெத்ததாயல்லவா? கொஞ்சம் எட்டிப்பார்த்து விட்டுச் சென்றால் என்ன? என்று உள்ளம் சொல்ல தன் மகனின் கையை லேசாக விட அவன் தாயின் பிடியிலிருந்து விடுபட்ட சந்தோஷத்தால்..

தொடர்ந்து பொன்னம்மா தன்முன் நின்றவனை கொஞ்சம் அகன்று நிற்க சொல்லிவிட்டு அவ்விடத்தை பார்த்தாள் அங்கே தன் பிள்ளை வாணி அநாதையாக அவ்விடம் அடிபட்ட நாய்போல சுருண்டு இறந்து கிடப்பதை பார்த்த அவளது உயிர் உடம்பில் நிலைக்குமா? நிலைத்திடுமா? அவ்விடமே அவள் ''வாணி....'' என்று கதறி துடித்தபடியே தன் மூச்சையும் நிறுத்தி விட்டாள்.

ஓரத்தில் ஏதுவும் அறியாத 2வயது பரத் மழைநீர் தேங்கி நின்ற இடத்தில் துள்ளி குதித்து விளையாடுகிறான். விமல் சம்பவம் அறிந்து விரைந்து வந்து தன் தம்பியை தூக்கியபடி தனது உறவுகளின் பிணத்தின் மேல் விழுந்து கதறுகிறான்.

இரு பிள்ளைகளையும் தொட்டுத் தூக்கி தன் மார்போடு அணைத்தபடி நிற்கிறார் பொலிசாரின் உதவியுடன் ஒருவர். அவர் வேறு யாருமில்லை இந்த கொடிய நிலை ஏற்பட காரணமான பஸ்ஸின் சாரதியே.....



**(இலக்கிய விழா பிரதேச ரீதியில் திறந்த மட்ட சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற சிறுகதை)**



# தமிழ் இலக்கிய கவிதைப் பரப்பில் மகாகவி பாரதி . . .

**பாஸ்கரன் பிரதீபா**
மட்/ மகா ஜனக் கல்லூரி

தமிழிலக்கிய வரலாற்றில் புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்தி வைத்தவரும் பாரதத்தின் விடிவெள்ளியாக திகழ்ந்தவருமாகிய மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் தமிழ் இலக்கியப் பரப்பிலே காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும் புலவர்கள் வரிசையில் வைத்துப் பாராட்டத்தக்க கவிகுல திலகங்களில் ஒருவராகக் கருதப்படுகின்றார். இவர் தான் வாழும் காலத்தில் சமூதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறிந்தார். தனது அனுபவத்துடன் உலகை நோக்கினார். வேறு பல சமூதாயங்களும் நாடுகளும் அடிமைத்தனத்தில் சிக்கி இழிநிலையில் அல்லற்படுவதைப் காணும் போது பொதுமை உணர்வு அவரது உள்ளத்தில் பீறிட்டுப் பாய்கிறது. ''மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெல்லா சிதறுக'' என்ற கூக்குரல் எழுப்பினார். இவ்வுலகைத் தன் எழுது கோலாக மாற்றியமைக்க துடித்தார். அத்தகைய உதயசூரியன் தமிழ் தாயின் தனிப்பெருங்கொடையல்லவா?

ஆமாம், இம் மகாகவி 1882ல் மார்கழி சித்திரபானு கார்த்திகை 27ம் திகதி மூலநட்சத்திரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், இலக்குமி அம்மாளுக்கும் மகனாக இவ்வையகத்தில் கால் பதித்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சுப்பையா. இவர் ஐந்து வயதில் அன்பு அன்னையை இழந்தார். 1889ல் இவரது தந்தை வள்ளியம்மாள் என்னும் மங்கையை மறுமணம் செய்து கொண்டார். 1893ம் ஆண்டு சுப்பையாவுக்கு பதின்மூன்று வயது பெருஞ்சபை முன்னிலையில் புலவர்கள் பலர் இவரை சோதித்து "பாரதி" என்னும் பட்டம் சூட்டினார்.

அவரது ஐந்தாம் வகுப்பு வரை திருநெல்வேலி பாடசாலையில் பயின்றார். அங்கே பல சொற்போர்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். இவர் தந்தை இவரின் 14 வயதில் 7 வயதான செல்லம்மாள் எனும் கன்னியை கன்னிகாதானம் செய்து வைக்கின்றார். மறு ஆண்டில் ஆருயிர் தந்தையும் இவ்வுலகி லிருந்து மறைந்தார். 1898 - 1902 வரை அத்தை குப்பம்மாளுடன் காசிமா நகரில் வசித்தார். அங்கே அலகபாத் சர்வகலா சாலையில் பயின்று பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். சமஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும் தேர்ச்சி பெற்றார். வடநாட்டு சூழ்நிலை இவரை நன்றே கவர்ந்தது. இங்கேதான் இவருக்கு கச்சம், வால்விட்ட தலைப்பாகை, பெரிய மீசை என்பன பழக்கத்திற்கு வந்தது. பின் காசியிலிருந்து சொந்த ஊரான எட்டயபுரத்துக்கு வந்தார். அங்கே அரசர் மாளிகையில் தொண்டாற்றினார்.

அரசரின் மாளிகையில் சமஸ்தான கவியாக வேலை செய்தார். சன்மானம் மாதமொன்றுக்குப் பன்னிரெண்டு ரூபாய். ஆங்கில காவியங்களைப் படித்து பொருள் கூறுவதும், பத்திரிகையில் கூறப்படும் ஆங்கில செய்திகளை எடுத்து ஓதுவதும் வேதாந்த சித்தாந்த நுட்பங்களை ஆராய்ந்து அறிஞர்களோடு வாதம் செய்து பொழுது போக்குவதுமே அரசமாளிகையில் அவரது வேலை அரசரோடு ஏற்பட்ட பிணக்கு காரணமாக அவ்வேலையை இராஜினமா செய்தார். அதன் பின் சேதுபதி உயர்பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றினார்.

பத்திரிகை துறை மூலம் இவர் ஆற்றிய சேவை எண்ணிலடங்காதவை பல பத்திரிகைகளை வெளியிட்டது மட்டுமல்ல பல பத்திரிகைகளின் நிறுவன ஆசிரியராகவும் ஈடுபட்டுள்ளார். பாரத சுதந்திரத்திற்காக தம் உயரிய கருத்துக்களையும் ஆர்வங்களையும் தீட்டி எழுதுவதற்கு ஒரு பத்திரியையின் அவசியத்தை உணர்ந்தார். அச்சமயமே சென்னையில் விவேகாநந்தரின் ஆணைப்படி

1895ம் ஆண்டிலிருந்து "பிரம்மாவதி" என்னும் சிறந்த வேதாந்தப் பத்திரிகையொன்று நடாத்தி வந்தார். அதனை சிங்கப் பெருமாளே நடாத்தி வந்தார். சிங்கப் பெருமாளும். திருமாச்சாரியாரும் மக்களை தட்டியெழுப்ப தமிழ்ப்பத்திரிகையொன்று ஆரம்பிக்க எண்ணங்கொண்டு அதற்கேற்றவர் பாரதியாரே என முடிவு செய்தனர். பாரதியார் விருப்பமும் எளிதில் நிறைவேறியது 1907ம் ஆண்டு ஏப்ரல் மாதம் "இந்தியா" எனும் வாரப்பத்திரிகையை வெளியிட்டார். 1908 - 1910 வரை இந்தியா இயங்கவில்லை. சில காலங்களில் மீண்டும் வெளிவர ஆரம்பித்தது. இந்தியாவில் உணர்ச்சி மிகுந்த கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்தன. யாவும் மக்களுக்கு எளிதில் விளங்கும் எளிய தீந்தமிழில் எழுதப்பட்டன.

கவிதைகளில் நாட்டுப்பற்று தீயைக் கக்கியது, வீரக்கழல் தெறித்தது. கட்டுரைகள் உள்ளத்து உணர்ச்சியையும் உற்சாகத்தையும் தூண்டின பாரதியாரின் புரட்சிக் கருத்துக்கள் தங்கு தடையின்றி வெளிவந்தன. 'இந்தியா' வாரப் பத்திரிகையின் சேவையை நடாத்திக் கொண்டிருக்கும் போதே புதுக்கவி ''விஜயா'' தினசரிப் பத்திரிகை" கர்மயோகி' தமிழ்ப்பத்திரிகையும் நடாத்தியுள்ளார். 'கர்மயோகி'ஷ ஆங்கிலத்தி லிருந்து வியாசங்கள் உபதேசங்களை தமிழருக்காக மொழி பெயர்த்து சேவையாற்றியது. 'இந்தியா'வில் கேலிச் சித்திரங்கள், வெளியூர் செய்திகள், பொது வர்த்தக மானிகள், மக்கள் குறைகள் சில நேரங்களில் புத்தக மதிப்புரைகளையும் வெளியிட்டு உறங்கிக் கிடந்த தமிழர்களை உற்சாகப்படுத்தியது. சூரத் காங்கிரஸிற்கு சென்றபோது ஸ்ரீ அரவிந்தர் பாரதிக்கு பரிட்சையமேற்பட்ட போது பாரதி இவரின் வடநாட்டில் வெளிவந்து கொண்டிருந்த 'வந்தே மாதா'வில் எளிய கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் ஆவேசம் பொங்கும்படி எழுதினார். ஸ்ரீ அரவிந்தருடன் இருந்த தொடர்பால் 'பதஞ்சலியோக சூத்திரத்தின் தமிழ்மொழி பெயர்ப்பையும் வெளியிட்டு புரட்சியை ஏற்படுத்தியதால் செல்வாக்கை கண்டஞ்சி பிரித்தானிய அரசாங்கம் அதனை வெளியிட தடைவிதித்தது. 1910 மார்ச் பன்னிரண்டுடன் இந்தியா தன் கடைசி மலரை உதிர்த்து ஓய்வுபெற்றது.

பாரதியார் சுதேச மித்திரனில் இரண்டரை ஆண்டுகள் ஆசிரியராக தொழில்பட்டார். அப்போது நம்கவிஞரின் ஆர்வம் வேகமாக பற்றியது. இதனால் 'சூரியோதயம்' பாலபாரதா போன்ற பத்திரிகைகளையும் நடாத்தினார். இவரின் பத்திரிகை புரட்சியினால் பிரித்தானியர் அச்சம் அடைந்துள்ளனர். என்பது 'விஜயா' தினசரி 'சூரியோதயம்' வாரப்பதிப்பு பாலபாரதா ஆங்கில வாரப்பதிப்பு கர்மயோகி மாதப்பதிப்பு போன்றவற்றை நிறுத்தியதிலிருந்து தெளிவாகின்றது.

பாரதியின் வாழ்க்கையின் ஜீவஊற்று கவிதை இவர் பல பாட்டுக்களை பாடியிருக்கிறார். பாரதி 21ம் நூற்றாண்டின் ஈடுஇணையற்ற கவிஞர், கவிக்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கவிஞன் என்பவன் உண்மையில் உலகில் நெறி வழி காட்டுகிறான். தன் கற்பனைத் திறத்தாலும் கவிதையின் திறத்தாலும் அணி அலங்காரம் இசை ஒலிநயம், தாள லயங்கள் ஆகியவற்றினாலும் மக்களின் உள்ளத்தை மகிழ்விக்கிறான். மானிட அனுபவத்திலும் இயற்கையிலும் உள்ளே அடங்கியுள்ள அழகுகளை எடுத்துக் காட்டுகிறான். சுதந்திர மலர் தன் வாழ்வில் மட்டுமல்ல பிறர் வாழ்விலும் பூத்துக்காய்க் வழி செய்கிறான். இவ்வாறான உண்மை அறிவுடன் தான் நோக்கும் விடயங்களை ஆராய்கிறான்.

சாதாரண உணர்விலிருந்து தெய்வத் தன்மை பொருந்திய பேரறிவுடன் இணைகிறான். இதனால் கேட்டும் சிறுபூச்சியின் ஒலி கூட அவனுக்கு தெய்வத்தன்மை பொருந்திய ஒலியாக இருக்கிறது. இவ்வாறான கவிஞருக்குரிய உண்மைக் குணங்களை உடையவர் பாரதியார். இதனாலேயே இவருக்கு மகாகவி எனும் பட்டம் கிடைத்தது. இவர் இந்திய நாட்டின் விடுதலைக்காக தம்பாடல்கள் மூலம் உரமூட்டியவர் புரட்சிகரமான கருத்துக்களை தம் பாடல்களில் புகுத்தியவர், பாரதியாரின் தேசியப் பாடல்கள் கோழைகளையும் வீரங்கொண்டெழச் செய்யும் சக்தி மிக்கவை இதனை நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

“படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசையை கேட்பானாகில்
துடித்தெழுந்து துடிப்பாக தம் மெலிந்த தோளை
தோலைக் கொட்டி துளை மிகுந்த கந்தலுடையை
சுருக்கிக் கட்டி எடுத்தெறிய வேணும் இந்த அடிமை வாழ்க்கை
இப்பொழுது இக்கணமே
எடுத்தெழுந்தே ஆவேசம் கொள்வானானால் - அப்பாட்டின்
பெருமை சொல்ல யாரே வல்லார் ”

என்ற ஆவேச உணர்வுடன் பாடுகிறார் இந்தியாவின் சுதந்திரக் கனவை வீறு கொண்டெழச் செய்யும் சக்தி பாரதியின் பாடலுக்கே உண்டு என்பதை நாமக்கல் கவிஞரின் கவிதை நன்குணர்த்துகிறது. பாரதி சுதந்திரமான மனிதர்களாக தமிழரை காணவேண்டுமென விரும்பினார். அவர்களை வன்மம்படுத்திய பிரித்தானியரை வையகத்தில் மாந்தரை கட்டிய தலையெல்லாம் சிதறுக" என்று பாடினார். பாரதி மக்கள் அந்நியராட்சியில் இருந்து விடுதலை அடைவதோடு திருப்தி அடையவில்லை. மக்களின் சமூக சமத்துவத்தை வளர்க்க எண்ணினான் இந்த வினோதக் கவி.

பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைப்போம் எனும் விந்தை மனிதனும் தலை கவிழ்ந்தான் என பெண்களை அடிமையாக, ஒரு போதைப் பொருளாக மாத்திரம் வைத்திருந்தவர்களை எதிர்த்துப் பாடினார் இதனைப் பார்த்துவிட்டு சாதி வேற்றுமையால் அடிமட்டத்தில் இருந்தவர்களை பார்க்காமல் விடுவாரோ? எல்லோரும் இந்நாட்டு மன்னர் எனவே இந்நாட்டில் அனைவரும் சரிநிகர் என்பதைக் குறிக்கிறது. மூட நம்பிக்கையில் கட்டுண்டு கிடந்தவர்களை அதனின்று விடுவிக்க மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் பாடினார். தெய்வமாக்கவியின் தெய்வீக பாடல்கள் இவரது பக்தியை எடுத்துக் காட்டுகின்றன. இவர் பராசக்தியின் பக்தன் அதை விட பாரத அன்னையின் பக்தன் .பாரதியார் தம் பாரத நாட்டைப் பாடியதைப்போல இதுவரையில் எவரும் பாடியதில்லை. அவருக்கு பாரத நாடு என்றால் பராசக்தி.ஆரியர் தேவி, பல வேதம் வரைந்த கையுடைய பாரதநாயகி அவளை,

**‘‘அன்னையே அந்நாளில் அவனிக்கெல்லாம்**
**ஆணி முத்துப் போன்ற மணி மொழிகளாலே**
**பண்ணி நீ வேதங்கள் உபநிடதங்கள்**
**பரவு புகழ் புராணங்கள் இதி காசங்கள்**
**“ இன்னும் பன்னூல்களிலே விசைந்து ஞானம்**
**என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனையீந்தாள்**
**மின்னுகின்ற பேரொளிதான் காலங் கொன்ற விருந்தால்**
**கடவுளுக்கோர் வெற்றி காணே ! ”**

என்று பொன்னுரைகளால் பாடியிருக்கிறார். **யாமறிந்த மொழியிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்.** எனத் தமிழ்மொழியையும், வேதம் நிறைந்த தமிழ்நாடு, வீரம் செறிந்த தமிழ்நாடு எனப் பல்வேறாக தம் தமிழ்நாட்டைச் சிறப்பித்து பாடியிருக்கிறார்.

இவர் தொகுத்த கவிதை பாட்டுக்களை பலநூறு வடித்து வெளியிட்டு தமிழ் இலக்கியத்துக்கு சேவையாற்றியுள்ளார். மதுரை விவேகபானுவிலே ‘தனிமை இரக்கம்’ என்னும் இவரின் முதல் நூல் அச்சேற்றி 1908 இல் ஸ்வதேச கீதங்களை முதல் வெளியீடு செய்கிறார் வி.கிருஷ்ணசாமி என்பார் இவர்பாடல்களில் மோகித்துப் போகிறார். ஆவிசோர்ந்த மக்கள் மேல்நிலை அடைய அன்பு, பொறை, காதல், வீரம், அஞ்சாமை முதலியவை வேண்டும் எனவும் குறையிரத்து சக்தி அன்னையின் அருள் வேண்டி பாடிய பாக்களை நூல்களாக வெளியிட்டார்.

தம் கற்பனைக்கும் எழுச்சிக்கும் ஆதரித்து ஏற்ற விஷயங்களை கண்டு பிடித்து அவைகளை உலகம் போற்றுவதற்கு பெருங்காப்பியங்களாகிய “பாஞ்சாலி சபதம்’ கண்ணன்பாட்டு” ‘குயில்பாட்டுக்கள் திறமுடன் எடுத்துக் காட்டினார். “பாஞ்சாலி சபதம்” மகா பாரத்தின் ஒருபகுதி அதை பாரதியார் 2500 வரிகளுடைய ஒரு காப்பியமாகப் பாடியிருக்கிறார். சாமானிய மக்கள் பாடும் நொண்டிச் சிந்தைக் கொண்டு மிக எளிய நடையில் கவிதைச் சுவையும் நாடகச் சுவையும் போட்டி போட அதைப் பாடியிருக் கிறார். சில விடயங்களில் உதாரணமாக

சூதாட்டத்தில் ஆடு மாடுகள் போன்ற பொருட்களை இழந்த பிறகு நாட்டையும் வைத்து ஆடின போது பாரதியின் உணர்ச்சி கட்டுக்கடங்காமல் போய்விடுகிறது. இதைப் பாரதியின் ஒரு புதுயுகப் படைப்பென்றே சொல்லவேண்டும். கண்ணன் பாட்டு சற்றோர்குறைய 25 பாடல்கள் கொண்ட ஒரு தொகுதியாகும். இதில் கவி கண்ணனைத் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும், அரசனாகவும் குருவாகவும், சீடனாகவும் பாவித்துப் பாடியிருக்கிறார். அடிக்கடி இவர் தோட்டத்துக்குப் போவதுண்டு அங்கே தான் குயில்பாட்டு எழுந்தது. மக்களின் பெருந்துயரங்கள் "மறவன் பாட்டு" 'பீஜிதீவிலே ஹிந்தி ஸ்திரிகள்" போன்ற புத்தகங்களில் பிரசுரமாகின.

"கண்ணன் வரவு" 'முருகன் பாட்டு', 'ஆறு துணை' 'சக்தி கூத்து', 'ஊழிக்கூத்து', 'ஜீவன் முக்தி' 'ஜயபேரிகை', 'புதிய ரஷியா' போன்றவையும் பாடியுள்ளார். 1909 இல் வெளிவந்த 'ஜன்ம பூமி' இரண்டாம் கவிதைத் தொகுதி மிகவும் அற்புதமானது. சுதேசபாடல்களை நாட்டுப் பாட்டு என்ற பெயரில் 1918 களில் வெளியிட்டார்.

இவர் அரசர் மாளிகையில் இருந்த வேளையில் ஆங்கிலக் கவிஞர்களின் நூலின் சுவையை மற்றவரும் பருகும் வண்ணம் ஷெல்லிதாசன் எனும் புனைப்பெயரில் வரைந்து வந்தார். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'மறுமலர்ச்சி'யும் மக்களிடையே புரட்சிகரமான மாறுதல்களும் ஏற்பட்டன. இதனால் தமிழில் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திர நூல்களை மொழிபெயர்த்து தமிழுக்கு ஆக்கந்தேட வேண்டுமென வலியுறுத்துகிறார். **சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்களை கொணர்ந்திங்கு சேர்ப்பீர்** என்பதிலிருந்து இதை நன்கு புரியலாம். இவர் ஐயர் சவர்க்கர் மராட்டி மொழியில் எழுதியிருந்த 'இந்திய உரிமைப்போர்' என்ற நூலை அவருடன் சேர்ந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இளைஞர் உள்ளத்தில் புரட்சித் தீயை வளர்த்தார்.

வேத ரிஷிகளின் கவிதை' என்னும் நூலில் காணப்படும் சில பகுதிகள், சிறப்பாக மதுச்சந்த ரிஷி இந்திரனைப் பாடிய பாடல்கள், அக்கினி தேவனை பாடிய பாடல்கள் அக்கினி ஹோமம் என்னும் தலைப்பின் கீழ்வரும் பாடல்கள் ஆகியவும் அரவிந்தர் 'ஆரியா' வில் வெளியிட்டவற்றின் நேர்மொழி பெயர்ப்பு போலவே காணப்படுகின்றன. பாடியுள்ள பாரதியார் பகவத் கீதையை தமிழ்ப்படுத்தி அதற்கு நல்லதொரு முன்னுரையை வழங்கியுள்ளார் பாரதியாரின் கீதைக்கும் அதுவரையில் தமிழில் எழுதப்பட்டு வந்த கீதைக்கும் உள்ள வித்தியாசம் தெற்றென விளங்கியது. பாரதியார் பழைய உரையாசிரியர்களின் அடிச்சுவட்டில் சொல்லவில்லை. கீதைக்கு இயற்கையானதோர் உரையைத் தந்தார். 'பதஞ்சாலி யோக' சூத்திரத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு அரவிந்தருடன் இருந்து வந்த தொடர்பினால் எழுந்தநூல்.

'தமிழகம் தமிழுக்குத் தலைவனை எண்ணி தவங்கிடக்கையில் பாரதிப் புலவன் தோன்றினான்' என கவிஞர் ஒருவர் பாரதியினை குறிப்பிடுகிறார். பாரதியாரை ஊக்கி வந்த அவர் உற்ற நண்பர் வ.உ.சிதப்பரம்பிள்ளை அவர்கள்' என் உள்ளமே பாரதி நாவில் துடித்தது' என்று கூறுவதுண்டாம்.

பாரதிக்கு இவர் வட நாட்டில் அலகபாத் சர்வ கலாசாலையில் இருந்த காலத்திலேயே அரசியல் தாகம் ஏற்பட்டது எனலாம். பாரதியார் அரசியலில் கையாண்ட உக்தி தம் வீரக் கவிதைகள்.

பாரதியார் காந்தீஜியின் தியாக வாழ்க்கையை அறிந்து அவரை தரிசித்து 'உமது ஒத்துழையாமை இயக்கத்தை வாழ்த்துகிறேன்' என்று சொன்னார் பிறகு பாரதியார் மகாத்மாவுக்கு

*"வாழ்க நீ எம்மான், இந்த*
*வையத்து நாட்டிலெல்லாம்*
*தாழ்வுற்று வறுமை மிஞ்சி*
*விடுதலை தவறிக்கெட்டும்*
*பாழ்பட்டு நின்ற தாமோர்*
*பாரத தேசந்தன்னை*
*வாழ்விக்க வந்த காந்தி*
*மஹாத்மா ! நீ வாழ்க ! வாழ்க !"*

என்று தொடங்கும் 'மஹாத்மா காந்தி பஞ்சம்' என்னும் பா மாலையைச் சூட்டினார்.

பாரதியார் தம் இறுதிக் காலத்தில் சென்னையில் பல கூட்டங்களில் அமுதமழை பொழிந்து அநேக சொற்பொழிவுகள் ஆற்றினார். சென்னையில் அக்காலத்தில் தொழிலாளர் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்த போது பெரும்பூரில் ரயில்வே தொழிலாளர் கூட்டத்திற்கு நெல்லையப் பரையும், பாரதியாரையும் அழைத்திருந்தனர். அப்போது தம் பாடல்கள் சிலவற்றை அருகாமையாகப் பாடினார் பாரதியார் 1921 மார்ச் மாதம் 25ல் கடலூர் சென்று பேசினார். அடுத்த ஆகஸ்டில் ஈரோடுக்கு அடுத்த கருங்கல் பாளையத்தில் 'மனிதனுக்கு மரணமில்லை' என்ற பொருள் பற்றி பேசியிருக்கிறார்.

பாரதியார் இறுதிக்காலங்களில் இறை வழிபாட்டில் ஈடுபாடு மிக உடையவரானார் தினந்தோறும் பார்த்தசாரதி கோயில் சென்று வழிபாடு புரிந்து வந்தார். கோயிலிலிருந்து வீடு திரும்பும் போது கோயில் யானையிடம் சென்று பழகுவார். பழம், தேங்காய் முதலியன கொடுத்து அதனோடு உறவுகொள்வார். அந்த யானைக்கு திடீரென ஒரு நாள் மதம் பிடித்து விட்டது. பலபேர் எச்சரிக்கை செய்தும் தன் நண்பன் தனக்கு யாதொரு தீங்கும் செய்யமாட்டான். எனக்கூறி நெருங்கினார். அது பாரதியை தூக்கிப் போட்டது பாரதிக்கு தலையிலும் கால்களிலும் காயம் சில நாட்களில் குணமடைந்தார் ஆயினும் கவிக்குயில் வெகுகாலம் வாழவில்லை. வயிற்றுக்கடுப்பு நோயும் வரவே 1921 செப்டம்பர் 10ம் திகதி இரவு சுமார் 1-30 மணிக்கு பாரதியின் ஆவி பிரிந்தது.

கவி ஷெல்லி முப்பது ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தான். நம் பாரதி முப்பத் தொன்பதாம் ஆண்டு வரை வாழ்ந்ததற்கு ஆண்டவனுக்கு நன்றி செலுத்த வேண்டியது தான் கவிவானர் பாரதி மறைந்தாலும் அவரது அடிச்சுவட்டில் காலந்தோறும் புதுப்புது கவிஞர்கள் தோன்றிக் கொண்டேயிருப்பர்.

**(இலக்கிய விழா போட்டியின் பாடசாலை சிரேஷ்ட பிரிவில் பிரதேச ரீதியிலான கட்டுரை போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை)**

# மறுபிறவி எடுத்தாலும்



மீனாற்றில் பாடியதும்
தேனாற்றில் ஓடியதும்
இந்தவூர் எந்தனூர்
எந்தையூர்க்கு முந்தியூர்
வந்தோர்க்கும் வாய்த்தவூர்
வருவோர்க்கும் ஏற்றவூர்

ஓடுகின்ற வாவியிலும்
ஓங்காரத் தமிழொலிக்கும்
பாடுகின்ற கும்மியிலும்
பரம்பரைக்கே தினவெடுக்கும்
மாடுகன்று கூட்டமெலாம்
மடிவழியப் பால்சொரியும்
மட்டில்லா மகிழ்ச்சிவரும்

படுவான் கரைவிளையும்
பசுநெல் குத்தரிசி
எழுவான் கரைசேரும்
இறாலொடு மீன்கெழுத்தி
பதமாய் உறைபோட்ட
பாலாடைத் தயிர்க்கட்டி
இதமாய்ப் பரிமாற
இருப்பாரே பாயொட்டி

தினவெடுத்த தோள்கொண்டு
தினந்தோறும் ஏருழவி
கனக்கவொரு கதிரள்ளி
காசினிக்கே உணவிட்டு
இனிக்கவொரு பாட்டெடுத்து
இன்றமிழை வளர்த்திடுவார்
இனியவர்க்கு ஒன்றென்றால்
இன்னுயிரை விட்டிடுவார்

உறவொடு கூட்டமுமாய்
ஊர்முழுக்கச் சேர்ந்திருப்பார்
அறநெறி பிழைபடாமல்
அரவணைத்தே வாழ்ந்திருப்பார்
பிறரொடு கோள்வஞ்சம்
பாராமல் பழகிருப்பார்
மறுபிறவி எடுத்தாலும்
மட்டூரே பிறப்பெடுப்பார்

**தி. சிவலிங்கம்**

# மட்டக்களப்பு மண்முனை வடக்கு செயலாளர் பிரிவின் வளர்ச்சியும் மாவட்டத்தின் சமூக கலாசார நிகழ்வுகளில் அதன் பங்களிப்பும்

ஞா. சிவசண்முகம்

கிழக்கு மாகாணத்தின் மத்தியில் உள்ள மட்டக்களப்பு நகரம் மட்டக்களப்பு மாவட்டமாக, அதாவது அம்பாறையையும் இணைத்த பரந்த பிரதேசமாக இருந்த காலத்தில் இருந்தே மட்டக்களப்பு நாட்டின் சமூக கலாச்சார வளர்ச்சியில் ஒரு பெரிய பங்களிப்பினை வழங்கிய ஒரு பிரதேசமாகத் தொடர்ந்து வந்துள்ளது.

மட்டக்களப்பு நகரின் முக்கிய பகுதியான சுற்றிவர நீரினால் சூழப்பட்ட புளியந்தீவு மட்டக்களப்பு பிரதேசமக்களின் வாழ்க்கையில் முக்கியதடம் பதித்த இடமாக அமைந்துள்ளது. இங்கு புலியன் என்றொருதலைவன் ஆட்சி அமைத்து வாழ்ந்தமையால் புளியந்தீவு எனப்பெயர் வந்ததென்று பிற்காலத்தில் மட்டக்களப்பைப் பற்றியெழுதிய பல அறிஞர்கள் எழுதி வைத்துள்ளனர். அதேவேளை புளியமரங்கள் பல இடங்களில் நிறைந்து காணப்பட்டதால் புளியந்தீவு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கூறுகின்றனர்.

மேலும் மட்டக்களப்பு மாண்மியம் எனும் நூலில் புலியன் என்ற மன்னன் தொடர்பாக பல செய்திகள் எழுதப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பகுதி முன்பு அன்னியரான ஐரோப்பியரின் வருகைக்குமுன் மண்முனை வன்னிமைப் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஒருபிரதேசமாகவே கருதப்பட வேண்டும்.

போர்த்துக்கீசர் மட்டக்களப்பினை (மட்டக்களப்பு வன்னியப் பிரதேசத்தினை) கி.பி. 1622ல் கைப்பற்றி ஒரு கோட்டையினை புளியந்தீவில் அமைத்தனர். பின்பு ஒல்லாந்தர் மட்டக்களப்பினை 1658ல் அவர்களிடமிருந்து கைப்பற்றி போர்த்துக்கீசக்கோட்டையை அழித்துவிட்டு தமது ஒரு சிறு கோட்டையைக் கட்டியதாக வரலாறு கூறுகிறது. பின்பு அவர்கள் அதனைவிடுத்து ஒருபாரிய கோட்டையினை (தற்போதுள்கச்சேரி) 1682ல் கட்டி முடித்து தங்களின் ஆட்சித்தலைமைப் பீடமாக மாற்றினர். இங்கே டச்சு ஆட்சியின் பிரதான நிருவாகிகள் செயல்பட்டனர். டச்சுக்காரர் தாம் வழிபடுவதற்காக கச்சேரி அருகில் ஒரு மெதடிஸ்த கோயிலையும் கட்டினர் (பல மாற்றங்கள் திருத்தங்களுடன் அது இன்றும் உள்ளது) பிரித்தானியர் கி.பி. 1796ல் டச்சுக்காரரிடமிருந்து நாட்டைக்கைப் பற்றி பின் 1802ல் தமது நேரடி ஆட்சியில் கொண்டுவந்த பின்பும் மட்டக்களப்பு டச்சுக் கோட்டையே மட்டக்களப்பின் நிர்வாகத் தலைமைப்பீடமாக விளங்கியது. புளியந்தீவின் பாரம்பரிய சின்னங்களில் இதுவும் ஒன்று.

இலங்கை வரலாற்றில் மட்டக்களப்பு (கிழக்கு) கடற்கரை ஒரு முக்கிய வரலாற்றுப் பதிவினைக் கொண்டுள்ளது. போர்த்துக்கீசரின் கிழக்கத்திய ஆதிக்கத்தினை ஒழிக்கவழி தேடிய டச்சுக்காரர் முதன்முதலாக இலங்கை கடற்கரையில் தரையிறங்கியது மட்டக்களப்புக்கு கிழக்கில் தான். 1602ம் ஆண்டு மேமாதம் 31ம் திகதி டச்சுத் தளபதியான யொன் ஸ்பில்வேர்கன் என்பார் தமது படைக்கலங்களுடன் மட்டக்களப்பு கிழக்கு கடற்கரையில் தரைதட்டினார். அதனாலேயே அவ்விடம் இன்றும் டச்பார் (Dutch Bar) என அழைக்கப்படுகிறது. மண்முனை வடக்குப்பிரிவின் எல்லையிலுள்ள இப்பகுதியுள் நடந்த இச்சம்பவம் மட்டக்களப்பு நகரின் வரலாற்றில் ஒரு சிறப்பினை நல்கும். வரலாற்று நிகழ்வாகும் டச்சுத்தளபதியை மட்டக்களப்பின் அன்றைய மன்னன் (இது மண்முனை மன்னனாக இருக்க வேண்டும்) ஆயிரம்வாளேந்திய வீரர்கள் மரியாதை செய்ய கரைக்கு வரவேற்றனர் என பிரபலசரித்திர ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். மட்டக்களப்பு நகரின் கீழ்பால்கடற்கரை பண்டைநாட்களில் வெளிநாட்டு வாணிபக்கலங்கள் வந்து போகும் ஒரு இடமாகவும் இருந்தது.

பிரித்தானியர் தமது ஆட்சியினை நிறுவி டச்சுக்கோட்டையை தலைமைப்பீடமாக ஆக்கியதும் புளியந்தீவுப்பிரதேசம் கோட்டை என்றே அழைக்கப்பட்டது. 1803ம் ஆண்டில் வெள்ளைக்காரர்களுக்கும் மட்டக்களப்பின் பலபோடிகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் நீரால் சூழப்பட்ட புளியந்தீவு மட்டுமே ஆங்கிலேயரின் கையில் மிஞ்சியது. அப்போது கோட்டையிருந்த புளியந்தீவின் முக்கியத்துவம் பிரிட்டிசாரால் பெரிதும் உணரப்பட்டது. பின்பு பிரிட்டிசார் புளியந்தீவில் தமது நிர்வாக அலுவலகங்கள் மற்றும் நிருவாக உயர் அலுவலர்களுக்கான இருப்பிடங்களை அமைத்தனர். மட்டக்களப்பின் நிருவாகமாக புளியந்தீவு மாற்றப்பட்டபின் மக்கள் தொகையும் பெருகியது நீரால் சூழப்பட்ட தீவான புளியந்தீவிற்குரிய போக்குவரத்து கச்சேரிக்கும் கல்லடிக்குமிடையே பயணம் செய்த படகுப்பாதை யூடாகவே நடந்து 1930ல் கல்லடிப்பாலம் கட்டும் வரை இப்படகே புளியந்தீவினை மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளுடன் குறிப்பாக தென்பக்க பெருநிலப்பரப்புடன் இணைக்கும் இணைப்பாக விளங்கியது. கோட்டைமுனைப்பாலமும் கல்லடிப் பாலமும் இவ்வாண்டிலேயே அமைக்கப்பட்டு தரைவழித் தொடர்பு புளியந்தீவுடன் ஏற்படுத்தப்பட்டது.

மட்டக்களப்புப் பிரதேச செயலாளர் பிரிவு இன்று மாநகர சபைப்பிரதேசமாக இருந்தாலும் ஆரம்பத்தில் இது ஒரு பட்டினசபைப்பிரதேசமாகவே இருந்தது. பின் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு நகர சபையாக மாறியது. 1965ல் ஆட்சிக்கு வந்த மத்திய அரசில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு.திருச்செல்வம் என்பவர் இதனை தெற்கிலும் வடக்கிலும் இருந்த கல்லடி வலைக்கட்டிறவு கிராமசபைப் பிரதேசங் களையும் ஒன்று சேர்த்து ஒரு மாநகர சபையாக மாற்றியமைத்தார். மாநகர சபைக்கான முதல் தேர்தல் 1967ல் நடைபெற்று முதல் மேயராகவும் உதவிமேய ராகவும் அப்போதைய எம்பிக்களான திருவாளர்கள் இராசதுரை, லத்தீப் சின்னலெப்பை ஆகியோர் தெரிவாகிவந்தனர். பதினொரு வட்டாரங்களைக் கொண்டிருந்த மட்டக்களப்பு நகரசபை 19 வட்டாரங்களை கொண்ட மாநகர சபையாக இன்று திகழ்கிறது.

மட்டுநகர சபையாக இருந்த போது இதன் சனத்தொகையினையும் பின்பு ஏற்பட்டசனத் தொகை வளர்ச்சியினையுமிட்டு நோக்குவோம்.

**1946ல் மட்டுநகர சபை சனத்தொகை 13057**

**1953ல் மட்டுநகர சபை சனத்தொகை 17439**

**1981ல் மட்டுமாநகர சபையின் சனத்தொகை 36721**

**1999ல் கணக்கெடுப்புக்குப்பின் 18517**

குடும்பங்களை உள் அடக்கிய 78092 பேர் இப்படியான பாரிய சனத்தொகைப் பெருக்கம் நகரின் இயற்கையான மக்கள் குடிப்பெருக்கமல்ல. 1983ன் பின் நாட்டில் ஏற்பட்ட மோதல் சண்டைகளால் மக்கள் மட்டக்களப்பின் பல்வேறு கிராமப்புறங்களிலு மிருந்தும் ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வு, வேறு மாவட்டங்களின் தமிழர்கள் குடி பெயர்ந்து வந்தமை போன்ற நிலைமைகளால் ஏற்பட்ட ஒரு மக்கள் தொகைப்பெருக்கமாகும்.

கிழக்கு மாகாணத்தின் தலைநகராக 1870 முதல் மட்டக்களப்பு (புளியந்தீவு) பிரிட்டிசாரால் ஆக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாகாண அரசநிருவாகத்தலைமை உத்தியோகத்தார் அலுவலகம் (அரசாங்க அதிபர்) மற்றும் பல முக்கிய மாகாண தலைமைச்செயலகங்களும் இங்கு தோன்றியமையால் மட்டக்களப்பு பட்டினப் பிரதேசம் ஒரு முக்கியத்துவம்வாய்ந்த நகரப் பிரதேசமாகமாறத்தொடங்கியது. மக்கள் நல்வாழ்வுக்கேற்ற சுகாதாரவசதி, கல்வி வசதி, போக்குவரத்து வசதி போன்றவை பிரதேச நிருவாக செயலாளர்பிரிவு (மண்முனை வடக்குப்பிரிவுக் காரியதிகாரி (M.N.D.R.O) அலுவலகம் ஆகியன ஏற்படுத்தப்பட்டன. புளியந்தீவுநகரம் முழுக்கிழக்கு மாகாணத்திற்கும் முன்பு தலை நகரமாக விளங்கியமையால் நாடுமுழுவதும் அதன் முக்கியத்துவம் உணரப்பட்டது. இங்குள்ள குடியிருப்பாளருக்கான உணவு மற்றும் காய் கறிவகைகளை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து பெறும்வசதியும் மட்டுப்பட்டினத்திற்குள்ள பெரிய வசதியாகும்.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாநகரசபை எல்லையினுள் மட்டக்களப்பு நாட்டின் பண்பாட்டியலினை வெளிக்காட்டக் கூடியவரான பலநிகழ்வுகள் நடை பெற்றுள்ளன. மாநகரசபை மண்டபத்தி னுள்ளும் வெளியிலும் தமிழர்தம் பண்பாட்டியல்பினை வெளிப்படுத்தக் கூடியவாரான முத்தமிழ் விழாக்கள், சொற்பொழிவுகள் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. 1976ல் உலக தமிழாட்சி மகாநாட்டின் இலங்கைக்கிளையினால் தமிழ் ஆய்வு மாநாடு நடத்தப்பட்டு மட்டக்களப்பு நாட்டின் சிறப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

மட்டக்களப்பு பட்டினப்பிரிவின் இன்னுமொரு சிறப்பும் மதப்பிரிவுகளும் இங்கு சங்கமித்து திகழ்வதாகும். இந்துக்களுக்கான ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயம் பிரசித்திபெற்ற மாமாங்கேஸ்வரர் ஆலயம், கோட்டைமுனை வீரகத்திப்பிள்ளையார் ஆலயம், கிறிஸ்தவர்களுக்கான தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயம், புளியந்தீவு நகர் கிறிஸ்தவ ஆலயம் கல்லடிப் பாலத்திற்கு அருகாமையிலுள்ள மீன் வடிவிலான செபஸ்தியார் ஆலயம், பௌத்தர்களுக்கான கோட்டைமுனை பௌத்த கோயில், இஸ்லாமியர்களின் பட்டிகைத்தின்ன பள்ளிவாயல், கோட்டைமுனை பள்ளிவாயல் ஆகியன நகரின் பிரபலமான மும்மதங்களுக்குமுரிய வணக்கஸ்தலங்கள். இவையெல்லாம் மீன்பாடும் தேநாட்டின் மத ஒற்றுமைக்கான சிறப்பம்சங்கள்.

மீன்பாடும் தேனாட்டின் முத்தமிழ் அறிஞரினால் (சுவாமி விபுலாநந்தர்) அமைக்கப்பட்ட பாடசாலைகள் பலவும் மெதடிஸ்த சபைத் துறவிகளினால் முதலாக இங்கு ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆங்கில பாடசாலையான மெதடிஸ்த மத்திய கல்லூரியும் (1814)மற்றும் சில பிரபல கல்லூரிகளும் மட்டக்களப்பு வாழ்மக்களின் கல்வி வளர்ச்சியில் பாரியபங்களிப்பினை கடந்த 200 ஆண்டுகளுக்கு மேல் ஆற்றியுள்ளன விபுலாநந்த அடிகள் இசை நடனக்கல்லூரியும் மாநகர சபைப்பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு இசைநடனக் கல்லூரியாகும் இவையெல்லாம் மாநகரசபைப் பிரதேசத்தின் மகிமையை எடுத்தியம்பிக்கொண்டிருக்கின்றன.



மட்டு பிரதேசசெயலாளர் பிரிவு கலாச்சாரப்பேரவை மாநகரசபைப் பிரதேசத்தின் கலாசார நிகழ்வுகளையும் மட்டுமக்களின் கலாசார பெருமைகளையும் வெளிப்படுத்தக்கூடிய பல நிகழ்ச்சிகளை கடந்த காலங்களில் நாட்டில் நடந்த யுத்தநிலைமையினால் நடாத்தமுடியாது போனாலும் வருடா வருடம் முத்தமிழ் விழாவினை நடாத்தி **"தேனகம்"** என்றொரு மலரினையும் வெளியிட்டு வருகின்றது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். மேலும் தற்போதுள்ள அமைதியான சூழ்நிலையைப் பயன்படுத்தி பல கலாசார சம்பந்தமான நிகழ்வுகளை அது நடத்த வேண்டும் 1993ல் விபுலானந்த அடிகள் ஞாபகார்த்த இசை நடனக்கல்லூரியில் பல ஆய்வரங்களும் நடன நிகழ்ச்சிகளும் நாடகங்களும் பாரம் பரியங்களை வெளிப்படுத்தக்கூடியவாறு நடந்தன. மட்டு மண்முனை வடக்கு கலாச்சாரப்பேரவை மட்டக்களப்பின் பல பண்பாட்டு கலை நிகழ்வுகளை நாட்டுக்கூத்து, வசந்தன்கூத்து, நாடக, நடன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து மட்டக்களப்பில் அருகிவரும் தமிழரின் கலாசார பாரம்பரியங்களை அழிவிலிருந்துகாக்க முனைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே இப்பகுதி மக்களின் பேரவாவாக உள்ளது.

# "அந்த ராத்திரிக்கு சாட்சி இல்லை"

- தில்லை

அண்டங்காகம் அதன் அன்றைய நாள் முதலுரையை ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து ஏனைய காகங்கள், சேவல்கள், மைனாக்கள், குருவிகள், குயில்கள் எல்லாம் தாங்களும் கலந்து கொள்வதாக ஆரவாரம் செய்யத் தொடங்கின இதேபோல ஆரோக்கியமாக வாழ நினைப்பவர்களும் நேரம் தவறாத கண்ணியவான்களும் எழுந்து விட்டமையை நடைப்பயிற்சி மூலமும், மோட்டார் சைக்கிள் சத்தமும், வாகன இரைச்சல்களும் எடுத்துக்காட்டின. இன்னும் சில இடங்களில் வானொலிச் சத்தங்களும் கேட்கத் தொடங்கி விட்டன. இவையெல்லாம் நிச்சயமாக விரைவாக விடிந்துவிடும் என்ற நம்பிக்கையைத்தான் தந்தன. சூரியனும் மெதுமெதுவாக விடியலைத் தந்து கொண்டுதான் இருந்தான்.

ஆனாலும் இன்றைய விடியலின் ஆர்வத்தை இரண்டு உள்ளங்கள் அனுபவித்த விதம் வார்த்தையாலோ எழுத்தாலோ சொல்லி முடியாதவை. மனைவி ஏன் இன்று இவ்வளவு நேரம் விடிவதற்கு என நடுச்சாமத்தில் இருந்து அழுதழுது காத்திருக்க கணவனோ ஏன் இன்று விரைவாக விடிகின்றது என்ற பதட்டத்தோடு நடுச்சாமத்திலிருந்து மனைவியைச் சமாதானப்படுத்த முயற்சித்தும் தோல்வியடைந்த நிலையில் கட்டிலின் விளிம்பில் தலையணையை அணைத்தபடி இருக்கின்றான்.

இத்தனைக்கும் காரணமான இரவின் கொடுமையை நினைத்துப் பார்க்கின்றான். ஆத்திர மிகுதியால் கொலை செய்திருந்தால் நிலமை எப்படியிருந்திருக்கும். சொற்ப நேரத்திற்குள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. தன் மனைவியின் உதட்டில் வடிந்த இரத்தம் அவள் பயந்து உறைந்து போய் நின்ற விதம் எல்லாம் அவனுக்கு பயித்தியம் பிடித்ததுபோல் இருந்தது அவள் லைட்டைப் போட்ட பின்தான் எல்லாம் தெரிந்தது. தன் மனைவி அடிபட்டுகட்டிலில் பயந்து கிடந்த போது அருகில் சென்று ஆறுதல் கூறவும் அனுமதிக்காமல் அவள் பயந்து அலறிய அலறல் ஒரு பக்கம், இனி சேர்ந்து வாழ்வதில்லை என்று அவள் கூறிய வார்த்தையையும் நினைக்க நினைக்க இன்று விடியத்தான் வேணுமா என மனம் படாதபாடுபட்டது அவனுக்கு.



நகைச்சுவை கதை

மனைவியும் சம்பவத்தை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்க்கின்றாள் இன்றுதான் இவரோடு வாழ்ந்த கடைசிநாள், ஈவிரக்கம் இல்லாத மனிசன், இரவுதான் சுயரூபம் தெரிந்தது. பிள்ளைத்தாச்சி என்று கூடப்பார்க்காமல் பேயபிடிச்ச மாதிரி மாறிமாறி அடித்து கழுத்தையும் பிடித்து நெரித்து கொல்லப்பாத்தாரே. இவ்வளவு காலமும் என்ன மாதிரி நடிச்சி வாழ்ந்திருக்கார். லைட்டைப் போடாட்டி கட்டாயம் கொன்றிருப்பார் என கண்ணீர் பெருக்கெடுக்க எண்ணிப் பார்க்கின்றாள்.

உலகம் உருண்டு கொண்டே இருப்பதால் எதிர்பார்த்த பொழுது விடிந்தது. ராஜன் கடைசித் தடவையாக மாலாவிடம் கெஞ்சிக் கேட்கின்றான். தயவு செய்து இதைப் பெரிசுபடுத்தாத நான் சொன்னது தான் உண்மை என மீண்டும் வலியுறுத்தினான். ஆனால் அடிபட்ட மாலாவுக்குத் தானே தெரியும் வேதனையும் பயமும் அவள் பிடிவாதமாகவே இருந்து நடவடிக்கையில் இறங்கினாள்.

விசாரணைகள் தொடங்கின இருதரப்புக் குடும்ப உறுப்பினர்களும் ஆத்திர மிகுதியால் விசாரணை வேளைகளில் தமது செல்வாக்குகளைபயன்படுத்திக் கொண்டனர். விசாரணையின் போது பிள்ளை பிறக்கும் வரை தற்காலிகமாக பிரிந்திருப்பது என்றும் மாதாமாதம் செலவு கட்டுவதெனவும் பொலிசாரினால் இடைக்காலத் தீர்வு வழங்கப்பட்டது. விவாகரத்து வழக்குத் தொடரவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுவிட்டது. ''பெண்களுக்கெதிரான வன்முறை'' விதிகளுக்கமைவாகவும் மாலாவின் பக்கமே அனைத்தும் சாதகமாக அமைந்துவிட்டது.



ராஜனால் எதையும் ஜீரணிக்க முடியவில்லை. ஒரு இராப்பொழுது ஒருயுகமாக முடிய காரணம் என்ன என்பதை உங்களிடமே கூறுகின்றான்.


நான் அன்றைய நாட்டு நிலமை காரணமாக இங்கு வசிக்கமுடியாமல் எல்லோரையும் போல் வெளிநாட்டுக்குச் செல்ல ஆசைப்பட்டு சவூதிக்குச் சென்று றைவராக அஞ்சி வருசம் இருந்தித்து 2005ல் இலங்கைக்கு வந்தேன். சுனாமிக்குப் பின் இங்கு உதவி புரிய வந்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் றைவர் வேலை கிடைத்தது. நல்ல சம்பளம் பின் எனக்கும் மாலாவுக்கும் பேசித்தான் திருமணம் நடந்தது. நாங்கள் ரெண்டுபேரும் நல்ல சந்தோசமாகத்தான் சேர்ந்து நேற்றுவரை இருந்தோம்.

எனக்கு குமார் என்று எங்கள் நிறுவன ஸ்ரோறில் வேலை செய்கின்ற கூட்டாளி ஒருவன் இருக்கான். நான் 2008ல் கலியாணம் கட்டும்வரை ஒன்றாகவே திரிவம். நல்ல பெடியன் கலியாணம் கட்டினபிறகு இருவரது நெருக்கமும் சேட்டைகளும் குறைந்துவிட்டது.

அவசர வேலை விசயமாக நிறுவனத்தின் ஸ்ரோறுக்கு போய் அரை மணித்தியாலத்துக்குள் திரும்பவேண்டியதாக எனது வாகனத்தில் போறன் அங்கு எனது அவசரம் தெரியாத குமார் எனது வாகனத்திறப்பைப் பறித்து எடுத்து எனது அனுமதி இல்லாமல் எனது வாகனத்திற்குள் ஏறி ஓடிப் பார்க்கப்போவதாக கூறி ஸ்ராட் பண்ணிவிட்டான். அவனுக்கு நன்றாக வாகனம் ஓட்டவும் தெரியாது. நிறுவனம் வாகனம் வேறு ஆக்களுக்கு கொடுக்கவோ ஏற்றவோ கூடாது என்பது நிபந்தனை.

நான் கிட்டப்போறதுக்குள்ள எனக்கு முன்னால வேகமாக புழுதியைக் கிளப்பி ஓட்டிச் செல்கின்றான். ஏசி வாகனம் கண்ணாடி பூட்டி இருந்ததால் நான் கதச்சது ஒன்றும் அவனுக்கு கேட்டிருக்காது. அரை மணித்தியாலமாகி முக்கால் மணித்தியாலமாகி விட்டது. நிறுவனத்தில் இருந்து கோல் வந்தபடி இருந்தது. இன்னும் அவன் வரவில்லை. எனது நட்பு கோபமாக மாறி ஆத்திரமாக மாறி தலைக்கேறிவிட்டது. பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கின்றேன். வாகனம் வந்தது. நான் கிட்டப் போனதும் வேணும் என்று றிவேசில் போய் மறுபடியும் வேகமாகச் செல்கின்றான். பின் திரும்ப வந்தபோது வாகனத்தின் முன்பக்கம் நின்று நிறுத்த முற்பட்டபோது வாகனத்தை திருப்பி எடுத்து மீண்டும் றவுண்ட் அடித்தான் எனக்கு வந்த கோபம் எல்லை மீறியது. ஒருபடியாக நிலமை தெரியாத குமார் எனக்கருகில் வாகனத்தை நிறுத்தியது தான் தெரியும் அவன் மிகவும் நக்கலாக சிரித்தபடி இறங்க முற்பட்டபோது அவனை இழுத்து எடுத்த நான் பொது இடம் என்டும் பார்க்காம அடி அடி என அடிச்சி முகத்தில் குத்தி கோபம் தாங்காம அவன்ட கழுத்தை நெரிக்கக்குள்ள தான் வெளிச்சம் வந்தது. நான் சுதாகரித்துப் பார்த்தபோது எனது கையில் மாலாவின் கழுத்து பிடிபட்டிருந்தது. எனது கையிலிருந்து விடுபட்டு முகமெல்லாம் இரத்தம் வடிய கட்டில்ல விழுந்தவள் பயம் காரணமாக கிட்டச் செல்லக் கூட அனுமதிக்கல்ல. அப்பதான் நான் கண்டது கனவு என்றும் குமாருக்காக மாலாவை அடிச்சிருக்கன் என்றும் தெரிஞ்சது. உண்மையான சம்பவத்தை சத்தியம் செய்து கூறியும் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை என்னை பேயைப்பார்ப்பது போல பாக்கிறாள். என்னாலும் அவளைப் பார்க்க முடியல்ல அவ்வளவு அடி வாங்கியிருந்தாள்.

உண்மையில் நடந்தவை இதுதான் இந்த ராத்திரிக்கு யார் சாட்சி வழக்கு தொடர்கிறது உங்கள் தீர்ப்பு யார் பக்கம் ?



# நல்ல நூல்களே நம் நண்பர்கள்

**அபிராமி வரதராஜ்**

மனிதப் பிறவி கிடைப்பதற்கரிய ஒன்றாகும். ''அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது அதிலும் கூன், குருடு, செவிடு பேடு நீங்கிப் பிறத்தலரிது'' எனக்கூறிய ஔவையாரின் வாக்கு மனிதப் பிறவி கிடைத்ததற்கரியது என்பதை விளக்குகின்றது. இத்தகைய மனிதப் பிறவியை அடைந்த நாம் அறிவைத் தேடிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அறியாமை இருளை அகற்றி அறிவின் துணைகொண்டு வாழ்வை செம்மையாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதற்கு நூல்களுடன் சிநேகம் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

''வாசிப்பு ஒரு மனிதனை பூரணமானவன் ஆக்கும்'' என்ற வார்த்தைக் கிணங்க நூல்களை நல்ல நண்பர்களாக்கிக் கொள்ளலாம். இதனால் அறிவு பெருகும். நிரம்பிய அறிவும் மனிதனிடம் வந்து சேர்கின்றது. பலதரப்பட்ட விடயங்களை அறியக்கூடிய வாய்ப்பு ஏற்படும். கணனி, நவீன தொழில்நுட்பம் கைத்தொழில், விவசாயம், சுற்றாடல் விஞ்ஞானம் போன்ற பலதரப்பட்ட அறிவைப்பெற்று. புத்திஜீவியாகத் திகழ நூல்களே துணை புரிகின்றன. நாம் உலகில் உள்ள எல்லா நாடுகளையும் சென்று பார்த்து வரமுடியாது. ஆனால் நூல்களின் துணை கொண்டு அனைத்து நாடுகளையும் பற்றி அறியக் கூடிய வாய்ப்பு கிட்டுகின்றது. இதனால்தான் அறிஞர்கள் ''புத்தகங்களைப் போல் ஒரு நல்ல நண்பனில்லை'' எனக்கூறினர்.

புதிய புதிய விடயங்களை உடனுக்குடன் அறிய நூல்களே உதவுகின்றது. மனிதனுக்கு நல்ல சிந்தனைகளை வழங்கும் அறிவுப் பொக்கிஷம் நூல்களே மனிதனின் உள்ளத்தில் நல்ல சிந்தனைகளைத் தூண்டவல்லன நூல்களே, இதனால் மனிதனை மனிதனாக வாழ வைக்க உதவுவது நூல்களே ஆகும். நல்ல ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டல் செய்ய வல்லது நல்ல நூல்களே. மனித உள்ளத்தில் உளவியல் தாக்கம் ஏற்பட்டால் அதை தீர்த்து வைக்கக் கூடிய தன்மை நூல்களுக்குண்டு இதனால் சிறந்த உளவியலாளனாக திகழ வல்லது நூல்களே பழமையான வரலாறுகளை அடுத்து வரும் சந்ததிக்கு ஊட்ட வல்லன நூல்களே.

ஒரு சமூகத்தில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, கலாச்சார பாரம்பரிய சமய தத்துவ விடயங்களை முழுமையாக புரிந்து கொள்ள நூல்களே உதவுகின்றது. பரந்து விரிந்த இந்த உலகிலே பண்பட்ட கருத்துக்களை நாம் அறிந்து பயன்பெற நூல்களே உற்ற துணையாக இருக்கின்றது. நாளுக்கு நாள் நிமிடத்திற்கு நிமிடம் மாறிவரும் இந்த உலகிலே மாற்றங்களை புரிந்துகொள்ள வைக்க நூல்கள் துணையாகின்றது. மனிதனின் அறிவுப் பசியைப் போக்க வல்லன நூல்களே.



நூல்களை நாம் வாசிக்கும் போது அது கற்பனா சக்தியை வளர்க்க வல்லது. மேலும் மேலும் கற்பனா சக்தி தூண்டப்படுகின்றது. தொலைக்காட்சியை பார்க்கும் போது விடயம் அப்படியே காண்பிக்கப்படுகின்றது. இதனால் கற்பனை



பண்ண அதற்கும் மேலாக சிந்திக்க இடம் அற்றுப் போகின்றது. ஆனால் நூல்களோ அந்த கற்பனையைத் தூண்டி சிந்திக்க வைக்க துணைசெய்கின்றது.

சமையற்கலை, தையற்கலை, அலங்காரப் பொருட்களை உருவாக்குதல், சித்திரம், ஓவியம் போன்ற கலைகள் பற்றிய அறிவைத் தர நூல்கள் துணை புரிகின்றது. நூல்களின் துணைகொண்டு இந்த அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். இவ்வகையிலும் நூல்கள் நல்ல நண்பர்களாக இருப்பதைக் காண்கின்றோம். வாசிப்பதால் அறிவு வளர்ந்து தெளிந்த அறிவு ஏற்படும் ''தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைந்து தூறும் அறிவு" எனும் பொய்யாமொழி கற்பதால் அறிவு பெருகுவதை தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய கற்றலுக்கு நூல்களே துணை புரிகின்றது. இதனால் நூல்களை நண்பர்களாக்கிக்கொள்ள வேண்டியதன் அவசியம் புரிகின்றது.

நூல்களின் அவசியத்தை அறிந்து தெளிந்து உணர்ந்தமையால்தான் இன்று நூல்களை கணனிமயப்படுத்தியுள்ளார்கள். உலகில் உள்ள எல்லா நூல்களையும் பெற்றுபயன்பெற இந்த கணனிமயப்படுத்தல் உதவுகின்றது. நூல்களின் அவசியத்தை அது மனிதர்களுடன் நண்பர்களாக வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பாடசாலைகளிலே மாபெரும் நூலகங்கள் அமைக்கப்படுகின்றது. ஆசிரியர்களை நூலகத்திற்கு பொறுப்பாக வைத்து ''நூலக ஆசிரியர்" என்ற பதவிகளே வழங்கப்படுவது நூலகத்தின் அதிமுக்கியத்து வத்தை எடுத்துக் காட்டுகின்றது. நூல்களால் தான் நூலகம் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. மொழியறிவு விருத்திக்கு நூல்கள் துணை புரிகின்றது. பலமொழித் தேர்ச்சிக்கு நூலுடன் சிநேகம் கொள்வது இன்றியமையாதது ஆகும்.

ஆசிரியர்கள் கற்பிக்கும் போது அனைத்தையும் கற்பிக்க முடியாது. வழிகாட்டலையே வழங்கலாம். அதிலே மேலதிகமான அறிவைப்பெற்று பாடத் தெளிவை ஏற்படுத்த நூல்களே துணை புரிகின்றது. பாடசாலையில் எல்லா மாணவர்களுக்கும் பொதுவாகவே விடயங்களை ஆசிரியர் கற்பிப்பார். ஆனால் அது சம்பந்தமான மேலதிக நுணுக்கமான அறிவைப்பெற திறமையை வளர்க்க நூல்களே எமக்கு நண்பர்களாகின்றது. நுண்ணறிவு விருத்திக்கும் நூல்கள் உதவுகின்றது.

எனவே, நூல்களை நாம் நண்பர்களாக்கினால் வாழ்வாங்கு வையத்தில் வாழலாம். மனிதர்களுக்குள்ளே மேன்பட்டவர்களாக வாழலாம். ''வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு" என்பதற் கொப்ப உள்ளத்தால் உயர நூல்களே துணைபுரிகின்றது. ஒரு சமூகத்தின் அறிவு விருத்தியில் நூலகங்கள் மிகவும் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. இங்குள்ள நூல்களோ எமக்கு நல்ல நண்பர்களாகி எமது வாழ்வை செப்பனிடுகின்றது. இதனால் மனித மாண்பு மலர வழி ஏற்படும். உன்னத அறிவு விருத்தியால் நாடு நல்வாழ்வடையும் ''கல்வி ஒரு நீண்டகால முதலீடு" அந்த கல்வியைப் பெற நூல்களே துணை புரிகின்றது. கல்வியின் நோக்கம் ''ஒரு நல்ல பிரஜையை உருவாக்குதல்" என்ற இலக்கை அடைய நூலகங்கள் துணை புரிகின்றது.

பேரறிஞர் கெதே 1749 தொடக்கம் 1832 வரை வாழ்ந்தவர். இவர் புத்தகங்களின் முக்கியத்துவம் பற்றியும் அதனை நண்பனாக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பின்வருமாறு

கூறியுள்ளமை நோக்கத்தக்கது. ''புத்தகமே இல்லாத வீடு ஜன்னலே இல்லாத இருண்ட அறைக்கு ஒப்பாகும்'' எனக் கூறியுள்ளார். அதுபோன்று ''ஒரே புத்தகம் பல்வேறு காலங்களில் பல்வேறு பருவங்களில் படிக்கின்ற போது புத்தம் புதிய சிந்தனையை வளர்க்க வேண்டும். அதுவே அழியாத படைப்பு'' என்ற கருத்து வெளியிடப்படுகின்றது. சிந்தனை வளர்ச்சிக்கு நூல்களின் இன்றியமை யாமையை இது காட்டுகின்றது.

மேலும் கெதே கருத்து வெளியிடும் போது ''ஓர் இனத்தின் மண்வாசனையை உணர்த்துவதே நூல்கள்'' எனக் கூறியுள்ளார். ஒரு குறிப்பிட்ட கழகத்தின் மொழி, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், சமயம், தத்துவம் போன்ற அனைத்தையும் புரிந்து கொள்ள நூல்களே துணையாகி நண்பனாகி உதவுகின்றன. ''உனது எழுத்தைப் பொருளுக்காகவும், பதவிக்காகவும், சுயநலத்திற்காகவும் அடகு வைத்து விடாதே'' உனது தலை முறைகள் கூடப்பதில் கூற வேண்டிவரும்'' எனக் கூறுவது நூல்களின் முக்கியத்துவத்தை அதனை நண்பனாக்க வேண்டியதன் அவசியத்தைக் காட்டுகின்றது.

நூல்களை நண்பனாக்கிக் கொள்வதால் உலகத்திலே புதிது புதிதாக அறிமுகமாகும். நவீன தொழில்நுட்பங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். மாறிவரும் உலகில் நடக்கும் மாற்றங்களை நாமும் அறிந்து புரிந்து கொள்ள நூல்களே துணைபுரிகின்றது. இதனால்தான் ''நல்ல நூல்களைப் போல் ஒரு ஆசான் இல்லை யென்று'' கூறுகின்றார்கள். ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும் என்றும் இறவாத புகழுடைய நூல்கள் இயற்றல் வேண்டும்'' என்றும் பாரதி பாடியுள்ளார். காரணமென்னவெனில் பிறமொழியிலுள்ள நல்ல விடயங்களை நாம் அறிந்து கொள்வதால்தான் நாமும் நமது மொழியும் வளரும் என்ற உண்மையை இது விளக்குகின்றது. நூல்களை நாம் நண்பனாக்கிக் கொள்வதால் பிறமொழி யிலுள்ள நல்லனவற்றையும் சிறப்புக்களையும் நாம் அறிந்து கொள்ள முடியும். நூல்களைத் தேட வேண்டிய அவசியம் இல்லை. முழு உலகையும், உலக மக்களையும் அவர்களது கலாச்சாரங்களையும் அறிந்து கொள்ள நூல்கள் துணை புரிகின்றன.

சிறுவர்களிடையே வாசிப்புப் பழக்கம் இருக்கவேண்டியது. அப்பழக்கத்தை ஏற்படுத்தவேண்டியது மிக மிக அவசியமானதாகும். ''இளமையிற் கல்'', ''பருவத்தே பயிர்செய்'', 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'' போன்ற பழமொழிகள் இளமைப்பருவத்தின் அதியற்புதமான ஆற்றல்களைச் சுட்டுகின்றன. இவ்வகையில் சிந்தனைக்குரிய வாசிக்கும் பழக்கம் மிக மிக அவசியமானதாகும். நூல்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை ''பெம்பேர்கர்'' கூறும்போது ஓர் இளம் பிள்ளையின் வளர்ச்சியில் நூல்களின் தாக்கம் மிகவும் திட்டவட்டமானதாகும். ''அதன் உள்ளம் எனும் கோவிலைக் கட்டியெழுப்ப உதவும் கற்கள் நூல்களாகும். அவை ஒருவரின் கற்பனா சக்தியை விரிவடையச் செய்வதோடு உணர்ச்சிகளைப் பண்படுத்தி மனதை நெறிப்படுத்துகின்றன. மற்றும் நூல்கள் சிறுவர்களினதும் இளைஞர்களினதும் அறிவை வளம்படுத்தித் தார்மீகத் துறையிலும் உலகியல் துறையிலும் தீர்வுகாண உதவுகின்றன'' எனக் கூறியுள்ளார். இப்படியான அளவற்ற நன்மைகளைப் பயக்கும் நூல்களை படித்தறிந்து அவற்றை நாம் நண்பனாக்கிக் கொள்ள வேண்டும். மனிதன் சுலபமாக பொறுமையை இழப்பான் ஆனால் எத்தனை தடவைகள் கற்றாலும் புத்தகங்கள் பொறுமையை இழக்காது. எனவே புத்தகத்துடன் சினேகம் கொள்வது சாலச் சிறந்தது.

நூல்களை வாசிக்கும் பழக்கத்தை அதனை நண்பனாக்கிக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்துவதில் பாடசாலைகள் கூடிய பங்களிப்புச் செய்கின்றது. இதனைப் பற்றிக் கூறும் போது ''பி.ஜி.ரால்ஃப்'' பின்வருமாறு கூறுகின்றார். ''ஆசிரியர்கள் தமது பாடத்தின் போது இடையிடையே நூல்களைக் குறிப்பிட்டுப் பேச வேண்டும்.

அந்நூல்களில் உள்ள காட்சிகளையும் பாத்திரங்களையும் குறிப்பிட்டுப் பேச வேண்டும். நல்ல கருத்துக்களை மேற்கோள்களாக எடுத்தாள வேண்டும். தமது பாடத்தின் போது உருசிகரமான பகுதிகளையும் உருக்கமான பகுதி களையும் எடுத்து வாசித்துச் சிறுவர்கள் தாமாகவே அப்பகுதிகளைத் தொடர்ந்து வாசிக்கக்கூடிய ஆர்வத்தை கிளறிவிட வேண்டும்'' எனக் கூறியுள்ளார். இவ்வாறான உத்திகளால் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டி நூல்களை நண்பனாக்கச் செய்யவேண்டும் இதனால் எதிர்கால சந்ததியும் கழகமும் வளர்ச்சி பெறுவது திண்மம்.

நாம் நூல்களை நண்பனாக்கிக் கொள்ளும் போது நூல்களைத் தெரிவு செய்தல் என்ற அம்சம் மிகமிக முக்கியமான தாகும். ''ஸ்ரான்லி ஜாஸ்ற்'' என்ற அறிஞர் கூறும் போது ''மக்களை ஒழுக்கத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, அறிவூட்டும் முயற்சியிலும் சரி நேர்முகமாக தாக்குவது எப்போதும் தோல்வியில்தான் முடியும். தான் விரும்பியதைத் தெரிவு செய்துகொள்ளும் சுதந்திரத்தை நாம் எப்போதும் வற்புறுத்தி வந்துள்ளேன். வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒரு பிள்ளை வளர்ந்த ஒருவருடைய நிர்ப்பந்தத்தின் மேல் மிகச் சிறந்தொரு நூலை வாசிப்பதை விடச் சுயமாக ஒரு தரக்குறைவான நூலை வாசிப்பது மேலானதாகும்.'' எனக் கூறியுள்ளார். இதுபோன்று ''நித்தம் நீ உலகில் நிலைப்பதற்கு புத்தகங்களை துணையாக்கு'' என்ற மொழியும் நூல்களின் துணையை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

எனவே பொதுவாக நூல்களை வாசிக்கும் பிள்ளைகளே கல்வித் துறையில் அதி உன்னத முன்னேற்றம் காண்கின்றார்கள். இதனையே முதிர்ந்த நூலக அனுபவம் வாய்ந்த ''எல்.எம்.ஹெறட்'' எனும் அறிஞர் பின்வருமாறு கூறியுள்ளமை நோக்கத் தக்கது. ''நூல்களைப் பரவலாக வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ள பிள்ளைகள் வாசிப்பதில் இன்பம் காணப்பயின்றுகொள்ளாத பிள்ளைகளை விடப் பல நன்மைகளைப் பெறுவதோடு, மிகவும் எளிதாகப் பள்ளிப் பரீட்சைகளிலும் தேர்ச்சியடைவதை நூலகத்தை நன்கு பயன்படுத்திச் சரளமாக வாசிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ள பிள்ளைகளின் வாசிக்கும் பழக்கத்தையும், அவர்களுடைய சமூகப் பண்புகளையும் நீண்டகாலமாக அவதானித்துப் பெற்ற அனுபவத்தின் மூலம் அறியக் கூடியதாயிருக்கிறது. ''இப்பிள்ளைகள் சாதாரணமாகத் தமது கல்விக்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்ட விஷயங்களை அறிந்து கொள்வதோடு தம் சூழல் பற்றியும் வெளிநாடுகள் பற்றியும் தமது அனுபவத்தை விரிவாக்கிக் கொள்கிறார்கள்'' எனக் கூறுகின்றார்.

எனவே நாம் இந்த உண்மையை உணர்ந்து நல்ல நூல்களை எமது நண்பனாக்கிக்கொள்வோம். இதனால் எதிர்கால வாழ்வை செப்பனிட்டு நாமும் உயர்ந்து சமூகத்தையும் உயரச் செய்வோம் என்பது திண்மம்.

**(இலக்கிய விழா போட்டியில் பாடசாலை மட்டத்தில் கனிஷ்ட பிரிவில் பிரதேச ரீதியில் முதலாம் பரிசு பெற்ற கட்டுரை)**

# சுந்தர அதிகாலை



கதிரவனும் கண்விழித்தான்
கன்னியவள் மலர்ந்து விட்டாள்
சிங்கார வண்டுகளோ சிறகடித்துப்
- பறந்தோட
தேன் வண்ணச் சிட்டுகளும்
கைகொட்டி சிரித்ததம்மா
பொன்னான கீற்றெல்லாம்
பார் எங்கும் ஒளி வீச
சுந்தர அதிகாலை பரவசமாய்
- ஆனதம்மா

*கி. சுபத்திரா*
மட்/ விவேகானந்தா பெண்கள் பாடசாலை
**(இலக்கிய விழா போட்டியில் பாடசாலை மட்டத்தில் கனிஷ்ட பிரிவில் பிரதேச மட்டத்தில் முதலாம் பரிசு பெற்ற கவிதை)**

# வெற்றிலை

சிறுகதை

இரண்டு நாட்களாகவே அவர் என்னுடன் முகம் கொடுத்து பேசவில்லை. எமக்குத் திருமணமான நாளில் இருந்து இந்த ஆறுவருட காலப்பகுதியில் ஒரு நாள் கூட அவர் என்னுடன் கோபித்துக் கொண்டே தேயில்லை. அதிகம் ஏன் சத்தம் போட்டு அதட்டிக் கதைத்ததாகக் கூட ஞாபகம் இல்லை. அவ்வளவுக்கு சாது அவர். தெளிந்த நீரோடையைப் போல் எதுவித சலனமுமற்று அமைதியாக சென்று கொண்டிருந்தது எங்கள் குடும்ப வாழ்க்கை.



கவிதாஞ்சலி

எமது திருமண பந்தமே ஒரு விசித்திரமான நிகழ்வுதான். அதனை காதல் திருமணம் என்று சொல்வதா? அல்லது பொருத்தம் பார்த்து பேசி முடித்த கல்யாணம் என்பதா? இல்லை கடவுளாக பார்த்து எனக்குத் தந்த வாழ்க்கை என்பதா? என்பதில் எனக்கு இன்றுவரை குழப்பம்தான்.

ஆனால் இரு வீட்டாரின் சம்மதத்துடன்தான் அவர் என்னை கண்டதாக கூறிய மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலேயே என் கழுத்தில் தாலிக்கட்டி மனைவியாக்கிக் கொண்டார்.

அன்று பூரணை வெள்ளிக்கிழமை காலையில் எழுந்ததும் நானும் எனது தங்கையும் நீராடிவிட்டு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றோம். அன்று வெள்ளிக் கிழமை அதுவும் பூரணை வெள்ளிக்கிழமை யாதலால் வழமையை விட பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது. பூசை முடிந்து ஆலயத்தை சுற்றி விட்டு வீடு வந்த எனக்கு அன்று மாலை எனது தந்தையின் நண்பரான சண்முகம் மாமா ஒரு இளைஞனை அழைத்து வந்திருந்ததும் எனது பெற்றோரிடம் கதைத்ததும் உள் அறையில் இருந்த எனக்கு தெளிவாகவே கேட்டது.

"இங்க பாரு நல்லசிவம் இவர் சசிக்குமார் எனக்கு தூரத்து உறவு. உங்க டவுன்ல தான் ஒரு ஸ்கூல்ல மாஸ்டரா இருக்கார் . . . விஷயம் என்னண்டா இன்றைக்கு காலை மாமாங்கேஸ்வரர் கோயில்ல வச்சி நம்மட சிவகாமிய கண்டிருக்கார் கட்டினா இவவதான் கட்டுவன் என்று ஒத்தபிடியா நின்று தம்பி என்னையும் கூட்டி வந்திருச்சி . . . எனக்கு தெரிஞ்ச வரையிலும் நல்ல பொடியன் மேலதிகமா நீ என்ன சொல்ற . . .?"

சண்முகம் மாமா சொல்லி முடித்ததும் அங்கு ஒருவித மௌனம் நிலவியது. என்னைப் பற்றிய கதை என்பதால் நான் காதை தீட்டியபடி கேட்டுக்கொண்டிருந்தேன். மனசு மட்டும் அந்த இளைஞனை பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது. அப்பாவும், அம்மாவும் ஒன்றும் பேசவில்லை. அவரே பேச்சை ஆரம்பித்தார்.

"இங்க பாருங்க . . . எனக்கு எப்படி சொல்லலுறதென்றே தெரியல்ல . . . ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலுக்கு போற நான் இன்றும் வழமைபோல் கோயிலுக்கு போனன். மாமாங்கேஸ்வர பிள்ளையாரே எனக்கு மனைவியாக வரப்போறவள நீதான் எனக்குக்

காட்டித் தரணும் என்று மனமுருகி வேண்டிக்கிட்டு கண்களைத் திறந்தா எதிரில் உங்க மகளத்தான் கண்டன் . . . என்னவோ தெரியல்ல . . . எனக்கு மனைவியாக வரப்போறவ இவதான் என்று தோணிச்சு அதுதான் நானே நேரடியாக வந்திட்டன். இத கண்டதும் காதல் அப்படி இப்படி என்று எதுவும் நினைச்சிடாதீங்க முக்கியமா உங்கட மகளயும் சந்தேகப்படாதீங்க . . எனக்கு பிள்ளையாரப்பா .... உங்கட மகள மனைவியாக காட்டியிருக்கார் என்று நம்புறன் உங்களுக்கும் உங்கட மகளுக்கும் சம்மதம் என்றா . . . ”

கேட்டுக் கொண்டிருந்த எனக்கு மயில்கால்கள் சில்லிட்டு உடம்பே புல்லரித்தது. இது ஒரு தேவசங்கற்பம் என்றே எனக்குத் தோன்றியது.

அதன் பின்னர் இரு வீட்டார் இடையேயும் பல பேச்சு வார்தைகளின் பின்னர் எமது திருமணம் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடந்தேறியது. திருமணம் முடித்து அவரது வீட்டிற்கு, அதுதான் இங்கு வாழ வந்ததிற்கு பின்புதான் தெரிந்தது. அவருக்கு எங்கள் வீட்டில் என்னைப் பிடித்தது போலவே எங்கள் வீட்டிற்கு முன்னால் இருந்த மரத்தில் சுற்றியிருந்த வெற்றிலைக் கொடியும் பிடிச்சிருக்கு என்று.

அப்பாவிடம் சொல்லி எனது வீட்டிற்கு முன்னாலும் வெற்றிலைக் கொடிவைத்து நானே நீர் வார்த்து வளர்த்தெடுத்து ஒவ்வொரு இரவும் நான் வெற்றிலை மடித்து கொடுத்தப்புறம் தான் அவர் தூங்கப் போறது வழக்கமாகிவிட்டது. முதலிரவில் எங்கள் வீட்டு வெற்றிலையுடன் ஆரம்பமாகிவிட்ட பழக்கம் இது. எமது வீட்டில் கொடி துளிர்விட ஆரம்பிக்கும் வரை இரண்டு மூன்று மாதங்களாக இவருக்கு எனது வீட்டில் இருந்தே வெற்றிலை வந்து கொண்டிருந்தது.

ஆறு வருட காலமாக தொடரும் இந்த பழக்கத்தினால் தான் இப்போது பிரச்சினை ஏற்பட்டிருக்கும் என்பது எனது ஊகமாக இருந்தது.



வேறொன்றுமில்லை எனது தங்கை அபிராமியின் திருமணம் நேற்றுதான் முடிந்தது. அவளது திருமணத்திற்கான திருமண கேக் அலங்காரத்தை நானே முன்னின்று செய்ய வேண்டியிருந்தது.

எனது திருமணத்தின் போது எனது திருமண கேக்கை அவளே வடிவமைத்து தந்திருந்தாள். ஏ.எல் படிப்பு முடிந்ததும் வீட்டில் சும்மா இருக்காமல் இருவரும் “ஐசிங்கிளாஸ்” சென்றதன் பயன் எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது.


அன்றிரவு, அப்போதுதான் திருமண கேக் அலங்காரம் எல்லாம் முடிந்திருந்தது. உடம்பு ஒரே அசதியாக இருந்தது. விடிந்தால் திருமணம் . . . கருக்கலில் எழும்ப வேண்டும். சகல வேலைகளையும் முடித்து நித்திரைக்கு போக நேரமாகிவிட்டது. அந்த அலுப்பில் அவருக்கு வெற்றிலை மடித்து கொடுக்க மறந்து போனேன். அந்த நினைப்பு வர பாவமாக இருந்தாலும் அதற்காக அவர் கோபித்துக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை.

தங்கையின் திருமணம் முடிந்து நாமும் எமது வீட்டிற்கு வந்து இரண்டு நாட்களாகி விட்டது. வந்ததில் இருந்து அவரும் முகம் கொடுத்து பேசவில்லை. இதென்ன ஆம்பளைத்தனம், இதுவும் ஒரு ஆணாதிக்கப் போக்குத்தான் நானும் பேசாமலேயே இருந்தேன்.

எங்கள் இருவரது மனஸ்தாபத்தில் நான்கு வயது அபிஷேக் பாதிக்கப்பட்டிடக் கூடாதே என்ற பயம் எனக்கு.

இந்த ஆறுவருடகாலத்தில் ஒருமுறையாவது நான் வெற்றிலை மடித்து கொடுக்காமல் இருந்திருப்பேனா : ஒருநாள் தவறியதுக்கு அவர் என்னோடு பேசாமல் இருப்பது எனக்கு வீம்பாகப்பட்டது.

நான்கு நாட்கள் கடந்து விட்டன. அவரைப் பார்க்க பாவமாக இருந்தது. இரவு, அபிஷேக்கை அவனது படுக்கையில் கிடத்திவிட்டு அவரது அருகில் சென்ற எனது கையில் வழமைபோல் தாம்பூலத்தட்டு இருந்தது.





"என்னாங்க இந்தாங்க வெத்தில போட்டுக்காங்க ... " வெத்திலையை எடுத்து நுனியைக் கிள்ளி, காம்பு நீக்கி சுண்ணாம்புச்சாந்து தடவி, பாக்கையும் சேர்த்து பதமாக மடித்து நீட்டினேன்.

" வேண்டாம் "

" ஏன். . . "

" நான் வெத்தில போடுறத நிறுத்திட்டன் . . " அவர் மெதுவாகத்தான் சொன்னார். அதில் எதுவித கோபமும் தெரியவில்லை ஆனால் எனக்குள்தான் ஏதோ ஒருவித பச்சாதாப உணர்வு மேலெழத் தொடங்கியது.

எனது கண்களில் நீர் கோர்த்து என்னையறியாமலேயே விசும்பத் தொடங்கிவிட்டேன்.

"என்னை மன்னிச்சுக்கிங்க . . . இனிமே அப்படி செய்ய மாட்டன் . . . " நான் சொல்லி முடிக்கவில்லை கட்டிலின் மறுபக்கம் சாய்ந்து படுத்திருந்த அவர் எழுந்து என்னருகே வந்து என்னைக் கட்டிக் கொண்டார்.

"அடி அசடு . . . இதுக்கு ஏன் அழற . . ? ஆறுவருஷமா உன் கையால் வெற்றிலை மடிச்சு தந்து சாப்பிட்ட அப்புறம் தான் படுக்கப் போறன். . வெத்தில என்றா எனக்கு அவ்வளவு விருப்பம் என்று நினைச்சியா ? . . . . இல்ல அதில ஏதோ பெரிய ருசி இருக்கு என்று நினைச்சியா . . பைத்தியம் உன்கையால பக்குவமா நீ மடிச்சு கொடுத்து அதநான் சாப்பிடுறதுதான் எனக்குப் பிடிச்சிருக்குதே ஒழிய வெத்தில ருசி இல்ல . . . . . . நீ மடிச்சுக் கொடுக்காத வெத்தில எனக்கெதுக்கு . . . நான் வெத்தில போடுறதையே விட்டுட்டன். அவ்வளவுதான். . . " அவர் சொன்னதும் அவரைக் கட்டிக் கொண்டு ஓ . . வென்று அழனும் போல இருந்தது.

எனது கரங்களைப் பிடித்து வெத்திலை மடிப்பை தனது வாயால் கௌவி மறுகையால் என்னை இழுக்கும் அவரது கரங்களுக்குள் என்னைத் திணித்துக் கொண்டேன். மனசு மட்டும் "இந்த ஜென்மத்தில் இனிமேல் இப்படி ஒரு தப்பு நடக்க விடமாட்டேன் . . . " என உறுதி எடுத்துக் கொண்டது.

* * * * * *



# புலராதா பொற்காலம்

இறைவனின் ஆற்றல் இயற்கையின் இயக்கம்
அகிம்சையின் வழிநடந்து ஆருயிர்களை பேணிடுவோம்
இன்னல்கள் பலகண்டோம் இன்பங்கள் மறந்துவிட்டோம்
இருக்கின்ற காலமோசில இன்னுமேன் மோதல்கள்

தினம் புலர்கிறது பொழுது தினச் செய்தி கேட்டாலே
துயரமோ மனதைப் பிழிகிறது துயருறும் மக்களோ பலஆயிரம்
விடிவில்லை மனிதவாழ்வில் வீணாகிப் போகிறது புலர்ந்தபொழுது
வாழும் வழி தெரியாததால் வெளிநாடு செல்லும் இளையசமூகம்

கண்மலர்ந்தால் பார்ப்பதும் கேட்பதும் துயரச்செய்தி
காரணம் நமக்குள்ளே மனித நேயமில்லை
கண்ணீரில் புலர்கிறது தினம் பொழுது
காணவில்லை என ஏங்கும் பொற்காலம்

நித்தம் நித்தம் போர் அழிவுகள்
நிம்மதியை தொலைத்து நிற்கின்றனர் நம்மக்கள்
நம் இனம் மனித இனம் எனவாழ்ந்தால்
நலம் பலபெற்று நாமெல்லாம் வாழ்ந்திடலாமன்றோ?

உற்பத்தியை கல்வியை நாங்கள் பெருக்கிவிட்டால்
உயிர்களுக்கு வாழ்வாதாரம் கிடைத்துவிடும்
வேலையும் தொழில்களும் கூடிவிடும்
வேலையில்லா திண்டாட்டம் அருகிவிடும்

வெறுப்புக்கள் வெட்டிப் பேச்சுக்கள் மறைந்து விடும்
வேளைக்கு காரியம் நடந்துவிடும்
புலராதா என ஏங்கும் மக்கள் உள்ளம்
புலர்ந்திடும் பொழுதோ பொற்காலமாய் விடிந்துவிடும்.

அமுதநிலா

# மட்டுநகருக்கு வாருங்க . . .



மட்டு நகருக்கு வாருங்க – இது
மங்காப் புகழ் பெற்ற ஊருங்க . . .
எட்டு திக்கும் வந்துபாருங்க – அதன்
எழிலை புகலாதவர் யாருங்க . . . !

பழமையாம் கல்லடிப் பாலமும் – பார்
பாடும் மீன் இன்னிசை கீதமும் கேள்
வளமான இயற்கை நெஞ்சை அள்ளும் – கவிதை
வடிப்பதனால் கவிஞன் இளமை துள்ளும்
இளமைகாணும் கோட்டைமுனைப் பாலமும் – அதன்
இதயமாம் இருபுறமும் வாவிகள்
முழுமையாம் மட்டுநகர் அழகென்பேன் – அதில்
ஒல்லாந்தர் கோட்டையும் நிஜம் என்பேன்

வித்தகராம் விபுலானந்தர் வாழ்ந்ததும் – எங்கள்
இரும்பரசர் சாண் டோவும் வாழ்ந்ததும்
முத்தமிழில் முழுமூச்சாய் வாழ்ந்தவர்கள் – இம்மண்ணில்
முதறிஞர் எத்தனையோ பேர் சொல்லும்
சித்த வைத்தியர் இங்கு பலர் உண்டு – கலை
சிற்பம் செதுக்கும் சிற்பியும் சிலர் உண்டு
சுத்தசுவைத்தேனும் பசு நெய்யும் – நீங்க
சுவைத்துப் பருக கட்டித் தயிரும் உண்டு.

பச்சை வயல்வெளிக் காடுகள் – இங்கே
பரந்து கிடக்கும் மண் குடிசைகள்
இச்சை தீர்க்கும் இவ்வுள்ளிச்சை – குளம்
நீர் ஓடி வயல்வெளியில் விழுவதும்
உச்சி வெயில் நின்று உழைப்பவர் – அந்த
உழவரால் நாம் வயிறு பிழைக்கிறோம்
குச்சி விறகினை சுமந்து விற்று – அதில்
குடும்பத்தை நடத்துகின்ற விதத்தை பார்

மட்டுறால் ஒட்டிமீன் கெழுத்தி நண்டும் – எங்கள்
மட்டுநகர் ஆறுகளில் நிறைய உண்டு
ஒட்டி மீனும் முருங்கை குழம்பும் கமகமக்கும் – அட
வெட்கத்தில குமரிப்பொண்ணு முகம் சிவக்கும்
பட்டி மாடு கறந்த பசும்பாலும் சுவை – காட்டு
பன்றிமான் மரை இறைச்சி உடும்பும் சுவை
ஒட்டியே பார்க்கும் நம்மூர் பெண்ணழகை – நீங்க
ஒரக்கண்ணால் பார்க்கணுமே ஆஹா ... ஆஹா

காட்டை வெட்டி காணி நிலம் நாடுவார் – ஒலை
குடிசைகளை கட்டி குடி ஏறுவார்
தோட்டமெங்கும் காய் கனிகள் விளையிது – மண்ணை
தோண்டியதும் நீர்வளமும் தெரியுது
நாட்டுக் கூத்து கிராமப்புற நடனமும் – இங்கே
நாளுக்கு நாள் நவீனமாக வளருது
வீட்டுக்கொரு பிள்ளையென கல்வியில் – நாளும்
விவேகமுடன் பள்ளிசென்று பயிலுது

தமிழர் பறங்கி இஸ்லாமியரும் – ஒன்றாய்
தர்மவழி செல்ல நாடுகிறார்
இந்து கிறிஸ்தவம் இஸ்லாமும் – இங்கே
இணைந்தே ஒற்றுமையை காணுகின்றார்
அமுதைப் பொழியும் கவிஞர்கள் தோன்றிய – இந்த
மண்ணும் இந்த மண்ணேதான்
தமிழை வளர்த்த அறிஞரும் தோன்றிய – இந்த
மண்ணும் இந்த மண்ணேதான்.

மட்டுநகர் பிரேமேந்திரன்

# அன்பு நிறைந்த அருள்மொழிக்கு ஆசையுடன் அம்மப்பா எழுதும் ஆசைக் கடிதம் இது !

சென்ற பத்தாண்டு தொலைபேசியூடாக நல்லதும், அல்லதுமாய் நாம் பேசிக் கொண்டதுண்டு.

என்றாலும், நாலைந்து நிமிட உரையாடலேதான். அத்தோடு பேச்சை நாம் அறுத்து விடுவதுண்டு விரிவாய் விசாலமதாய் விடயங்களை அடுக்கி படிக்கச் சுவையாகக் கூறுவதற்குக் கடிதம் எழுதுகிற கவின் கலை போல்

வேறொன்று இல்லையென்று தான் இதை எழுத முற்பட்டேன். எழுபதினைத் தாண்டி எடுத்து அடி வைக்கின்ற

இந்த நன்னாளில் எழுதுவது இன்பமம்மா !
பத்தாண்டின் முன்னர்
இந்தத் தாத்தாவும் பேத்தியுமாய்

பாரதம்போல் கடிதம் பல எழுதிப்பார்த்ததுண்டு

கேள்வி பதிலாக, கிண்டல் சுவையாக சந்தேகம் போக்கும் சஞ்சீவிப் பொட்டலமாய் அந்தக் கடிதங்கள் அமைந்ததனை நினைக்கின்றேன்.

ஐந்தாண்டு வாழ்க்கையின் அயல்நாட்டில் கடந்தன்பால் அற்புதமாய் அதிகமாய் புகழ்ந்திருந்தாய். ''எழில் கொஞ்சும் நாடு''



இ. துரைராஜசிங்கம்

இயற்கை அருள்நாடு,
பழிக்க இடமில்லா பண்புமிகு நாடு,
இனமத பேதமில்லா இறைவன் அருள் நாடு
பொருள் வளங்கள் விஞ்சும் புகழ் பெற்ற நன்நாடு
இந்த மண் தன்னை என்ன நிலைவந்தாலும்

சொந்த மண்ணாக மதித்திடுவேன்.

அல்லாது நம்முடைய நாட்டை நாடேன் ஒருபோதும்

என்றெல்லாம் இறுமாந்து எழுதிய நீ இன்று ஏதேதோ எனக்கு எடுத்துரைக்கின்றாய்.

பத்து மாதம் உன்னைப் பாங்குடனே தான் சுமந்து

பெற்று வளர்த்துப் பெருமை பெற வைத்திட்ட
உத்தமியாளை பெற்ற

உன் பாட்டி ஓடி மறைந்த அன்று

சாரி சாரியாக வீட்டுக்கு வந்தழுத உற்றார்,
உறவினர்கள் எத்தனை பேர் எத்தனை பேர்

சித்தம் கலங்கிறது சிந்தித்துப் பார்க்கையிலே

எட்டு நாளும் உணவு உபசரித்தோர் எத்தனை
பேர் ?

மாமி மருமக்கள் மற்றும் உறவினர்கள் கண்ணீரால்
அம்மாவின் காலைக் கழுவினரே?

சின்னஞ்சிறிய உந்தன் சிங்காரச்சிட்டுக்களை

அன்னியரின் கையில் அடவு வைத்துச் செல்வது
போல்



வேலைக்குப் போகின்றீர் விசித்திரம் தான்
அம்மா நம்முடைய நாட்டில் நடக்குமா?
இவையெல்லாம்

பாட்டியுடன் மாமி சின்னம்மா பெரியம்மா

எத்தனையோ உறவு உதிரங்கள் வாராதோ?

உங்கள் வீடு இரண்டை வாடகைக்கு விட்டு
நாங்கள் படும்பாடு நாயும் படாதம்மா

வருகின்ற மாதம் முதலாம் நாள் உம் வீட்டைக்
காலி செய்கிறேன்.

எனது கடந்த ஆறு மாத தவணை கண்காணி
சொல்கிறான்.

மாடி வீட்டில் வதியும் வண்ணக்கர் குடும்பத்தினர்

ஒரு மாதத் தவணை என்று ஓராண்டாய் இருக்க
முன்னர் குடியிருந்த முத்தப்பா மின் கட்டணத்தை

ஆறு மாதம் கட்டாமல் அப்படியே மாறிட்டார்
இப்படியோ நடக்கும் ஏங்கித் தவிக்கின்ற
துர்ப்பாக்கியமம்மா !

உன்னுடைய ஆதனத்தை ஊரார் அனுபவிக்க

விட்டு வைக்கும் விழல் மனிதன் ஆனேனோ
ஆதலால் என்னருமைப் பேத்தி அருள்மொழியே

ஆறுதலாகச் சிந்தித்து அவருடன் யோசித்து
நல்லதொரு முடிவை நமக்கு எழுதிடுக !

பெற்றதாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானில்
நனி சிறந்ததுவை நீ அறிக !

அன்பு அம்மப்பா
அழகேசன்

## வாழும்போதே வாழ்த்துவோம்
## கலைஞர்கள் கௌரவம்



பெயர் : செபஸ்ரியான் மைக்கல்
முகவரி : புதுநகர், மட்டக்களப்பு.
பிறந்த திகதி : 05.03.1938
துறை : சிலம்பம்

தனது 15 வயதிலிருந்தே சிலம்புவிளையாட்டு, வாள்வீச்சு, கத்திக்குத்து, கொட்டன் அடி, பந்த விளையாட்டு போன்ற கலைகளில் பயிற்சி பெற்று இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இக்கலைகளை பயிற்றுவித்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த பரமகுடி இராமநாதன், பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸ் ஆகியோரை குருவாக கொண்ட இவர் குறிப்பாக ஆலயங்களின் திருவிழாக்காலங்களிலும், விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் தனது திறமையை வெளிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்களான ''மீனவப்பெண், சுமதி எங்கே?, நான் உங்கள் தோழன்'' போன்ற திரைப்படங்களில் நடித்து கலாரசிகர்களின் பாராட்டைப் பெற்றதுடன் பாஞ்சாலிசபதம், இராவணேஸ்வரன், முல்லைக்கொடி காசியப்பன் போன்ற நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளார். இவர் சிறந்த சைக்கிள் ஓட்ட வீரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் கண்டி பெரஹராவில் சிலம்பம் பந்த விளையாட்டு வாள் வீச்சு என்பனவற்றை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இவரது திறமையை பாராட்டி மட்டக்களப்பு நகர சபை, பிரதேச கலாமன்றம் மற்றும் பல்வேறு விளையாட்டுக் கழகங்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளது.



பெயர் : வையம் வைத்தியர் சாமித்தம்பி
முகவரி : கல்லடி, மட்டக்களப்பு.
பிறந்த திகதி : 20.08.1927

இவர் வைத்தியத்துறையில் ''வைத்திய ஜோதி சகஸ்றாபிஷேக வைத்திய சூரி ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். இவை கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கமும், சுகாதார போஷாக்கு மற்றும் நலன்புரி அமைச்சினாலும் வழங்கப்பட்டவையாகும்.

திருமலை, குருநாகல், மீராவோடை, காத்தான்குடி ஆகிய இடங்களில் சித்த வைத்தியசாலை அமைத்து மக்களுக்கு சேவையாற்றியுள்ளார். தற்போது தனது சொந்த இடமாகிய கல்லடியில் தனது மக்களின் உதவியுடன் சேவை புரிகின்றார்.

இவர் வாதம், பைத்தியம், விஷக்கடி போன்ற நோய்களுக்கு சிறந்த வைத்தியராவார். இவரது தந்தை வையம் வைத்தியர் சித்த மருத்துவத்துறையில் பிரபலமானவர். இவர் தனது தந்தை வையம் வைத்தியரிடம் இளமையில் இருந்தே முறையாக வைத்தியம் கற்று புகழடைந்தவர்.

ஆலயத்திருப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். ஆயுள் வேதத்துறை பற்றிய ஆய்வுகளையும் உற்பத்தி முறைகளையும் நோய்க்குரிய குணங்கள், அவற்றிற்குரிய மருந்துகள் போன்றவற்றையும் பாடல்கள் மூலம் மற்றவர்களுக்கு ஆர்வத்துடன் எடுத்துரைப்பவர். மூலிகைகளை இனங்காண்பதிலும் உற்பத்தி செய்வதிலும் திறமை மிக்கவர். ஔடதங்களை நீத்தும் முறையில் மிகவும் திறமை வாய்ந்தவர். சித்த மருத்துவத்துறையில் இவரது குடும்பமே புகழ்பெற்று விளங்குகின்றது.

பெயர் : மு.சோமசுந்தரம் (ஓவியர் சோமு)
முகவரி : 163, திமிலைதீவு, மட்டக்களப்பு.
பிறந்த திகதி : 30.05.1949
துறை : ஓவியம்



சிறுவயதிலிருந்தே ஓவியம் வரைவதில் மிகவும் ஆர்வம் கொண்ட இவர் ஆரம்ப கல்வியை ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் கற்றார். தனது பதினெட்டாவது வயதில் முதல் விளம்பர ஓவியத்தை வரைந்தார்.

தனது குடும்ப வறுமை நிலை காரணமாக ஓவியத் துறையையே தனது தொழிலாக மாற்றி ஓவியங்கள் வரைவதுடன், வியாபார நிறுவனங்களுக்கான விளம்பர பலகைகளை எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொண்டார். மட்டக்களப்பு நகரின் பல தொழில் ஸ்தாபனங்கள் இவரது கைவண்ணத்தில் எழுதப்பட்ட விளம்பர பலகைகளுடனே காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. சிறுகைத்தொழில் திணைக்களம் நடாத்திய சிறு உற்பத்தி முயற்சியாளர்களுக்கான கண்காட்சியில் இவரது ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட வேளை பல்லாயிரக்கணக்கான விலையில் விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது டிஜிட்டல் முறையிலான விளம்பர ஓவியங்களையும் மேற்கொண்டு வருகின்றார்.

பெயர் : வத்சலாதேவீ சங்கரநாராயணன்
முகவரி : 32/4, பயனியர் வீதி, மட்டக்களப்பு.
பிறந்த திகதி : 10.01.1949
துறை : வாய்ப்பாட்டு



சிறுவயதிலிருந்தே இசைத்துறையில் ஆர்வமுள்ளவராக திகழ்ந்த இவர் தனது ஆரம்பகால குருவாக மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வி. பராசக்தி விநாயகமூர்த்தியை குறிப்பிடுகின்றார்.

இவர் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்பட்ட இசைப் பரீட்சையில் ஆசிரியர் தராதரம் வரை சித்தியடைந்துள்ளார். கொழும்பு தியாகராஜா கானசமாஜம் இலங்கை சங்கீத சபை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றவை நடாத்திய அகில இலங்கை சங்கீத போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். பல மேடைக்கச்சேரிகள் செய்துள்ள இவர் தற்போதும் பல கச்சேரி நிகழ்வுகளை நடாத்தி வருகிறார்.

இசைக் கலைமணி பட்டப்படிப்பை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் படித்த இவர் தற்போது இந்தியாவின் மதராஸ் பல்கலைக்கழகத்தில் M.A (Music) இல் 2ம் வருட படிப்பை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.

சங்கீத கலாவித்தகர், இசைக்கலைமாமணி, இசைக்கலைமணி போன்றவை இவர் பெற்ற பட்டங்களாகும். 1986ம் வருடம் முதல் தற்போது வரை சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தில் இசை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார்.

**அண்மையில் எம்மை விட்டுச் சென்ற எமது மண்ணின் இருபெரும் இலக்கியவாதிகளுக்கு தேனகம் தனது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றது**



மலர்வு : **20.11.1933**
உதிர்வு : **17.03.2009**

கவிஞர் கலாபூசணம்
அருளப்பு அந்தோனிமுத்து
(கவிஞர் தமிழருவி முத்தழகு)

- கவிஞர் மட்டுநகர் முத்தழகு சிறந்த கவிஞர், பேச்சாளர், கட்டுரையாளர், நாடக நடிகர், சிறுகதை எழுத்தாளர், சமூக சேவையாளர், சித்த வைத்தியர்.
- உலக கவிஞர்கள் மகாநாட்டில் (தமிழ்நாடு) தமிழ் அருவி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.
- இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூசணம் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.
- மட்/ மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையால் கவிதைத்துறைக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.
- மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் முன்னாள் நிர்வாக உறுப்பினராகவும், பல்வேறு சமூக அமைப்புக்களின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.
- இவரது ''தாகமாய் இருக்கிறேன்'' என்ற சிறுகதைத் தொகுதி இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கதாகும்.



மலர்வு : **15.09.1924**
உதிர்வு : **12.04.2009**

கவிஞர்
கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி

- கவிஞர் கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி பெரியார் வழிவந்த பகுத்தறிவு சிந்தனாவாதி.
- இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாசூரி என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- 'பசிமுகம்' என்ற நிறுவனத்தின் ஸ்தாபகராக இருந்தது. பகுத்தறிவு ரீதியான சமூக சேவைகளில் பங்காற்றியவர்.
- கவிதை, சிறுகதை, கட்டுரை, பல்துறை இலக்கியம் என பல தடங்களைப் பதித்தவர்.
- பல நூல்களின் படைப்பாளி.

# முத்தமிழ் விழா போட்டி முடிவுகள்
# - 2009 -

திறந்த போட்டி

**நடனம்**

**மட்/ பரதகலாலயா, திசவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு.**

பாடசாலை மட்டம்

**பேச்சு**

**1ம் இடம்**

**சி. துஷன்** - மட்/ புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.

**2ம் இடம்**

**க. கமல்ராஜ்** - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை,
கல்லடி, உப்போடை.

**3ம் இடம்**

**ர. பகவர்த்தனி** - மட்/ விவேகானந்தா பெண்கள் பாடசாலை
கல்லடி, உப்போடை.

**பல்லியம்**

**1ம் இடம் - மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை**

**2ம் இடம் - மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை**

**3ம் இடம் - மட்/ அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம்**

**ஓவியம்**

**1ம் இடம் - பா. புஸ்பகாந்தன்**
மட்/சிவானந்தா கல்லூரி, கல்லடி - உப்போடை

**2ம் இடம் - பா. ரூபகீதன்**
மட்/சிவானந்தா கல்லூரி, கல்லடி - உப்போடை

**3ம் இடம் - ந. லிங்காஜினி**
மட்/ வின்சன்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு.

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தும்

# முத்தமிழ் விழா - 2009

**இடம் : மட்/ மகாஜனக் கல்லூரி**
**காலம் : 09.07.2009, நேரம் : பி.ப 2.30 மணி**

*தலைமை*
**திருமதி. கலாமதி பத்மராஜா**
(பிரதேச செயலாளர், மண்முனை வடக்கு)

*பிரதம அதிதி*
**திரு.சு. அருமைநாயகம்**
(அரசாங்க அதிபர், மட்டக்களப்பு)

*சிறப்பு அதிதிகள்*
**Dr. K. முருகானந்தம்**
( பணிப்பாளர், மட்/ போதனா வைத்தியசாலை)

**திருமதி.R.கேதீஸ்வரன்**
( மேலதிக அரசாங்க அதிபர், மட்டக்களப்பு)

**நிகழ்வுகள்**

ஆரம்பம் பி .ப 2.30 மணி

மங்கல விளக்கேற்றல்



தமிழ்த்தாய் வணக்கம்
**மட்/மகாஜனக் கல்லூரி மாணவிகள்**

கலாசார கீதம்
**பிரதேச செயலக ஊழியர்கள்**
**- மண்முனை வடக்கு**

வரவேற்புரை
**திரு.ந.வில்வரத்னம்**
(உதவி பிரதேச செயலாளர்,
மண்முனை வடக்கு)

தலைமையுரை
**திருமதி. கலாமதி பத்மராஜா**
(பிரதேச செயலாளர், மண்முனை வடக்கு)

மலர் வெளியீடு

வெளியீட்டுரை
**திரு.வி.மைக்கல் கொலின்**

விமர்சனவுரை
**திருமதி.சுபா சக்கரவர்த்தி**
(வலயக் கல்விப் பணிப்பாளர்,கல்குடா)



கலைஞர் கௌரவம்
**செபஸ்டியான் மைக்கல்** - *சிலம்பாட்டம்*
**வையன் சாமித்தம்பி** - *வைத்தியம்*
**மு.சோமசுந்தரம்** - *ஓவியம்*
**திருமதி. வத்சலா சங்கரநாராயணன்**
- *வாய்ப்பாட்டு*

பேச்சு
**ரீ.துஷன்** (முதலாம் இடம்)
(மட்/புனித மிக்கேல் கல்லூரி)

குழு நடனம்
**பரதகலாலயா மாணவிகள்**
(முதலாம் இடம்)

சிறப்பு அதிதிகள் உரை
**Dr. K. முருகானந்தம்**
(பணிப்பாளர், மட்/ போதனா வைத்தியசாலை)
**திருமதி.R. கேதீஸ்வரன்**
(மேலதிக அரசாங்க அதிபர், மட்டக்களப்பு)

பல்லியம்
**மட்/சிவானந்தா தேசிய பாடசாலை மாணவர்கள்**

பிரதம அதிதியுரை
**திரு.சு. அருமைநாயகம்**
(அரசாங்க அதிபர், மட்டக்களப்பு)

பட்டிமன்றம்
**"மேல்நாட்டு நாகரிகம் தமிழர் கலாசாரத்தைச் சீரழிக்கிறதா? சீரழிக்கவில்லையா? "**
அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்கள்.

பரிசு வழங்கல்

நன்றியுரை
**த. மலர்ச்செல்வன்**
(கலாசார உத்தியோகத்தர், மண்முனை வடக்கு)

தமிழ்மொழி வாழ்த்து
**மட்/வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள்**

# முத்தமிழ் விழா நிகழ்வுகள் - 2008



நியூ கிறீன் அச்சகம், மட்டக்களப்பு தொ.பே: 065 -2222204